விலை ரூபா 2-00 | 16 பக்கங்கள்

# ஈழநாடு
வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 | தை 20 | ஜமாஅவ் 22 | யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | (2—2—86) | இதழ் 356

## யாழ். குடாநாட்டில் மேலும் இராணுவ முகாம்கள்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் மேலும் இராணுவ முகாம்களை அமைப்பதன் மூலம் அப்பகுதியின் பந்தோபஸ்து பலப்படுத்தப்படும் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத்முதலி கூறியுள்ளார்.

(16-ம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில்

# இன்று 9 மணி நேரம் திடீர் ஊரடங்குச்சட்டம்

(கொழும்பு)

**கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்று காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரையிலான 9 மணி வரை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

**கிளிநொச்சிப் பகுதியில் இடம் பெற்ற சில தாக்குதல்கள் காரணமாக இந்த ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப் படுகிறது.**

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன் வரும் எல்லைகளுக்குள் இந்த ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வடக்கு: ஆனையிறவும் கடல்சார்ந்த பிரதேசமும்; தெற்கு: முறிகண்டி, வன்னேரிக்குளம், 152ம் கட்டை, யாழ் - கண்டிவீதி, கல்மடுக்குளம் கிழக்கு: அக்கராயன்குளம் மேற்கு, யாழ். கண்டி வீதி ஆகிய எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் இந்த ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுபிறப்பிக்கப்பட்டதற்கான உடனடிக் காரணம் எதுவும் அரசாங்கத்தினால் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை கிளிநொச்சியில் உள்ள வட்டக்கச்சிப் பகுதியில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் பொதுமக்களில் சிலர் இறந்துள்ளதாகவும், பாடசாலைக்கட்டடம் ஒன்றுசேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேபோன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு வீதியிலும் இடம் பெற்றதாக்குதலில் பொதுமக்கள் பலியானதாகக்கூறப்படுகிறது.

## அரசின் அறிக்கை

(கொழும்பு)

தர்மபுரம் பகுதியில்ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது 500 தமிழ் போராளிகள் தாக்

[16 ம் பக்கம் பார்க்க]

## கடத்தப்பட்ட அதிகாரிகள் நிலை என்ன?

[யாழ்பபாணம்)

முல்லைத்தீவில் கடத்தப்பட்ட இரு அதிகாரிகளான மேலதிக அரசாங்க அதிபர், கணக்காளர் ஆகியோரின் நிலைமை பற்றி எந்தவித தகவலும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. (மா)

## கிளிநொச்சி - முல்லைத்தீவு வீதியிலும் மோதல்

[முல்லைத்தீவு]

கிளிநொச்சியிலிருந்து நேற்று முல்லைத்தீவு இராணுவ முகாமை நோக்கிப் பொருட்களுடன் வாகனங்கள் சகிதம் நடந்துசென்ற இராணுவத்தினருக்கும் போராளி

[16ம் பக்கம் பார்க்க]

## ஹற்றனில் மீண்டும் பதற்றம் கடைகள் தீக்கிரை! பலர் காயம்!

[ஹற்றன்]

ஹற்றன் தோட்டப் பகுதியில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்துஏற்பட்டுள்ள பதற்ற நிலையால் அங்கு நேற்று மாலை 6 மணி தொடக்கம் இன்று காலை 6 மணிவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

டிக்கோயாத் தோட்டத்திலுள்ள தமிழர்கள், காடையர் கோஷ்டியினால் தாக்கப்பட்டதுடன் அங்குள்ள இன்வரி தோட்டத்திலுள்ள இருலயன்களும் தீக்கிரையானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதியில் ரோந்து சென்ற பொலிஸார் மீது கற்கள் வீசப்பட்டதால் சிலர் படுகாயமடைந்தனர். மேலும் நான்கு பஸ்களை நோக்கியும் கற்கள் வீசப்பட்டன. இதனால் பஸ் சாரதி ஒருவர் படுகாயம் அடைந்தார்.

ஹற்றனிலிருந்து5 மைல் தூரமுள்ள நோவூட் தோட்டத்தில் இருக்கும் தமிழர்களின் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. (மா)

## மீண்டும் பயங்கரம்?

(மதவாச்சி)

யாழ்ப்பாணம் - கொழும்பு பாதைகளில், கட்டைகளைப் போட்டும், வாகனங்களை மறித்தும், சாரதிகளைத் துன்புறுத்தி கொள்ளையடிக்கும் செயல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. நேற்றுமுன்தினம் மதவாச்சியில் பலசாரதிகள் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளதாகவும் அறியப்படுகிறது. (கெ)

### பத்து லட்சம் கையெழுத்து இயக்கம்

# நேற்று ஆரம்பம்

(கா. யோகநாதன்)

வடக்கு, கிழக்கில்சன நெருக்கமுள்ள பகுதியிலிருக்கும் பாதுகாப்புப்படை முகாம்களை அகற்றுமாறும், 1000 மீற்றர் பாதுகாப்புவலயங்களை வாபஸ் பெறுமாறும், அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை கோரும் கையெழுத்து இயக்கம் நேற்று ஆரம்பமானது.

நேற்று நல்லூர் இந்து விடுதியில் பிரஜைகள் குழு இணைப்புக்குழுத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் 10 லட்சம் பேர் கையெழுத்திடும் இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேராசிரியர்

(13ம் பக்கம் பார்க்க)

### வட்டக்கச்சி மோதல்

## ராணுவத்துக்கு பலத்தசேதம்; ஒரு போராளி மரணம்

(யாழ்ப்பாணம்)

வட்டக்கச்சி- தருமபுரம் வீதியில் தேடுத வேட்டையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் காலை சுமார் இருமணித்தியாலங்களாக நேரடி யுத்தம் இடம்பெற்றது.

இந்த யுத்தத்தில் போராளிகள் தரப்பில் ஒருவர் பலியானதாகவும், இருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரின் தரப்பிலும் பெருமளவு சேதமேற்பட்டுள்ளபோதிலும் அதன்

[16-ம் பக்கம் பார்க்க]

## இந்தியா ஈழத்துக்கு ஆதரவாக இருக்கலாம் ஆனல் வன்முறை கூடாது

### ஜனதிபதி 'இந்து'வுக்கு பேட்டி

(கொழும்பு)

இந்தியாவின் மத்திய, மாநில அரசாங்கங்கள் ஈழத்துக்கு ஆதரவாக இருக்கலாம். அவர்கள் ஈழம்தான் வேண்டும் என்ருலும் அதனைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனல் அதனை வன்முறைகள் மூலம் அணுகக்கூடாது என்று ஜனதிபதி திரு. ஜே். ஆர். ஜெயவர்த்தன 'இந்து' இணையாசிரியர் திரு. என். ராமுக்கு அண்மையில் அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அப்பேட்டியில்மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, வன்முறைகள் மூலம் எதனையும் சாதிக்கமுடியாது. தமிழ்ப் போராளிகள் வன்முறையைக் கைவிட்டால் எதுவும் சாத்தியமாகும். இரண்டுபகுதிகளிலும் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதனை நான் விரும்பவில்லை. தமிழ்ப்போராளிகள் தங்கள் ஆயுதங்களைஒப்படைக்கவேண்டும். முகாம்களை மூடவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு நிபந்தனையற்ற மன்னிப்பு வழங்கமுடியும். அவர்கள் அவ்வாறு செய்யும்பட்சத்தில் அவர்களை நான் சந்திக்க வேண்டும். நான் அவர்களைச் சந்தித்தால்தான் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கமுடியும்.

## இந்தியாவின்புதிய இராணுவத்தளபதி

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய இராணுவத் தளபதியாக லெப்டினட் ஜெனரல் கிருஷ்ணசாமி சுந்தர்ஜீ நேற்று பதவியேற்ருர்.

1946ம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்த இவர் காஷ்மீர் பகுதியிலேயே அதிக காலம் பணி புரிந்தார். இவர் ஒரு [illegible] குறிப்பிடத் தக்கது. (ச)

### தமிழ் மக்கள் நிலையை வெளிஉலகுக்கு காட்ட

# 12ம் திகதி முழுநாளும் பிரார்த்தனை!

### பூரண ஒத்துழைப்பு வழங்க கோரிக்கை

[ஏ. வி. மாணிக்கம்]

தமிழ் பேசும் மக்களை இன்று எதிர்நோக்கியிருக்கும்பாரதூரமான பிரச்சினைகளுக்கு உடனடியாக ஓர் அரசியல் தீர்வுகாண வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இம்மாதம் 12ம் திகதி புதன்கிழமை முழுநாளும் முழுமனதுடன் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு பொது மக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய முழுநாள்பிரார்த்தனையில் முதற் கட்டமாக யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க, கூட்டுத்தாபன தனியார் ஊழியர்கள் உட்பட சகல தமிழ் பேசும் மக்களும் தத்தமது இல்லங்களில் தங்கியிருந்து பிரார்த்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகளுக்கு ஓர் அரசியல் தீர்வினுலேயே முடிவு காண முடியும் என்ற கோரிக்கை தமிழ்

[16ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நஷனல்T.V -14''(Black and White) Typewriter (English)- Silverete, Tractor (I M.T)- பெட்டியுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: Stereo Sri Recording Centre, No 27 சின்னக்கடை (மேல்மாடி), யாழ்ப்பாணம். A 169

நல்ல நிலையில் உள்ள A. 35 கார் 2 Sri 3000 தொடர் இலக்கம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஏரம்பு - தவசோதி 131/1 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [C 492]

கொக்குவிலில் சம்பியன் லேனில் வீடு கட்டுவதற்குகந்த காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல C 487, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C487]

கொக்குவிலில் பழைய வீட்டின் ஓடுகள், கூரைகள் உட்பட தீராந்திகளும், முள்ளுக் கம்பிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல C 486, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 486]

ஈச்சமோட்டை பீச் றோட்டில் 2½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. பண வசதியை ஒரு பகுதி ஒழுங்கு செய்ய முடியும். அபிவிருத்தியாளர்கள், 40, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். [C 488]

வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட புதிய கென்வூட் குளிர்சாதனப் பெட்டியும், ஜெஸ்ட்னர் போட்டோ ஸ்ரட் மெசினும் உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கிளாஸ் கவுஸ், 182. கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். தொலைபேசி. 22101 [C 482]

கமெச்சீன் பவுடர் -3/50, பிளீச்சிங் பவுடர் -3/50, டிசின் வெக்டன் - 20/- ஜயந்தி என்ரபிறைஸஸ், ஆவரங்கால், புத்தூர் P.O. [C 481]

உரும்பிராய் தெற்கு பலாலி வீதியில் சகல வசதிகளுடன் வீடும் மூன்றரை பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் தொடர்பு கொள்க: இராசதுரை. 45, மூன்றும் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [C 505]

5 மாத வயதுடைய சுத்த இனபொமரேனியன்[off white] பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. மஹேன் மாஸ்டர், நவாலி தெற்கு, (அரசடி) மானிப்பாய். C 507

ஆண்டு 2, மாணவர் மதிப்பீடு பாடசாலைக்குத் தேவையான படிவங்களை எம்மிடம் பெறலாம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். C-455

கத்தீட்றல்வீதி, இல.33இல் 1½ பரப்பு காணி சம்பத்திரிசியார் கல்லூரிக்கு அருகாமையில் வீதி முகப்பாகவுடைய நீள் சதுர அமைப்புடையது. யாழ். பிரதான வீதியிலிருந்து 100 யார் தூரத்தில் அமைதியான சூழலில் சிறிய கட்டிடத்துடன் இரண்டு வீடுகள் கட்டுவதற்கேற்ற காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. அலெக்சாண்டர், 43/1, நாலாம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (C 424)

## விற்பனைக்கு

பாலர் கல்விக்குப் பயன் தரும் நூல்கள்;- பாலர் தமிழ் [1], பாலர் தமிழ் [2], செயல் நூல், பாலர்தமிழ்[அரிச்சுவடி] பாலர் பாட்டு, பாலர் நீதிக் கதைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். C-456

2 பலாமரம் விற்பனைக்கு உண்டு. 90/4, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [C 480]

பண்டத்தரிப்பு சந்தைக்குச் சமீபமாகச் சகல வசதிகளும் உடைய புதிய வீடும் 6½ பரப்பு வளவும் உடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்: கு. நம்பிராசா, வர்த்தகர், பண்டத்தரிப்பு. C 478

நெல்லை க. பேரனின் முதற் பரிசுபெற்ற ''விமானங்கள் மீண்டும் வருக'' குறுநாவல் இப்போது யாழ்ப்பாணத்தில் சகல புத்தகக் கடைகளிலும் விற்பனையாகிறது. பிரதி ரூ. 9-50 சதம் மட்டும். (C 459)

1½ மாத, பூச்சி அகற்றப்பட்டதும் பாலூட்டல் மறப்பித்ததும், தடுப்பூசி போடப்பட்டதுமான தூய இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. 107, கலைமகள் வீதி, கல்வியங்காடு. (C 471)

Lister Generator 10 K. W. and Lister Engine H. P. 7.2 R.P.M. 1500 இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 3724. (C 472)

அழுத்தமான ஆட்டுக்கல், அம்மி, கல்உரல் அனைத்தும் கைதேர்ந்த கலைஞரால் கடையப்பட்டது. தயாரித்து விநியோகிப்போர்: சூரியா ஸ்ரோர்ஸ், வவனியா. கிடைக்குமிடம்: சுல்தான்ஸ் எம். எம். சுல்தான்அப்துல்காதர்அன்பிறதர், கண்டிவீதி, சாவகச்சேரி. C-25

வீட்டுத்தளபாடங்கள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிகள், பிறெசர் குக்கர், றெடிமேற் சட்டைகள், துணி வகைகள், இத்தாலியன் பெரிய கம்பளங்கள், றெக்கோட் பிளேயர், யப்பான் டினர்செற், ஸாப் கல்குலேற்றர், செவிப்புலன் கருவி, சிங்கர் தையல் மெஷின், புலோ பொலிசர் [கூவர்], இன்னும் பல. சி. பத்மநாதன், C/o P. அம்பலவாணர், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிவடக்கு. திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்குமிடையில். [C 473]

கலர் என்லாச்சர் Durst M. 370 ரைமர் T. M. 60, அனலைசர் C 300, டெவலப்பிங்ராங் போன்ற பல புதிய பொருட்கள் உடன் விற்பனைக்குண்டு. விளம்பர இல. C 468, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 468]

கல்வளை, சண்டிலிப்பாயில் குடியிருப்பதற்குகந்த 12 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: சி. செந்தில்நாதன், தர்மா விவசாயக் களஞ்சியம், மருதனுமடம் சந்தி, மருதனுமடம். [C476]

## தேவை

ரியூற்றறி வாங்கு மேசைகள் தேவை. ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். C-491

பயிற்றப்பட்ட தாதியர்கள் (Nurses) உடனடியாகத் தேவை. அனுபவம், தராதரத்திற்கேற்ப வேதனம் வழங்கப்படும் விண்ணப்ப முகவரி, Dr.K. E. சந்திரபால், நெல்லியடி கிளினிக், கரவெட்டி. [C 483]

Carpentry Workshop Supervisor நவீன தளபாட உற்பத்தியில் கைதேர்ந்த தச்சுவேலைத் தொழிலாளர் தேவை. நேரில் வரவும் United Engineers சாயி மர அரிவு ஆலை, 91 ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். [C 503]

வீடுகள், annexes ஆகியவற்வை றை வாடகைக்கு கொடுக்க விரும்புவோர் தொடர்பு கொள்க: எமக்கூடாக நம்பிக்கையும், கௌரவமும் உள்ள தொடர்புகளை நீங்கள் விரைவாகப் பெற முடியும். Dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [A180]

## வகுப்புகள்

G. S. Q. (Bio) [Botany, Zoology, Chemistry] Home science Diploma [மனையியல் டிப்ளோமா] நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. G S.Q. (Maths) [Pure, Applied, Statistics, Chemistry, Physics], Montessori Diploma Teachers Training (பாலர் பயிற்சி) விரைவில் ஆரம்பமாக உள்ளது. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்: அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C 421)

3 வருட மருத்துவ தாதிகள் டிப்ளோமா பயிற்சி (Nurses Training Diploma) ஆங்கில மொழிமூலம் 15-02-86 ஆரம்பமாக உள்ளது. Recognised University Certificate will be issued. 10-02-86க்கு முன் நேரில் வந்து தொடர்புகொள்ளவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C 422)

National Cetirficate Course in English (1 year) Elementary Certificate Course in English [6 months], G C. E. (O/L) English Language Course (1 year) விரைவில் ஆரம்பமாக உள்ளன. தகைமையுடைய விரிவுரையாளர்கள் வகுப்புகளை நடாத்துவர். 10-02-86க்கு முன் நேரில்வந்து தொடர்பு கொள்ளவும். அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (C 423

E. C. E.-I (London] 87 15-02-1986 ஆரம்பமாகின்றன. E. C. E.-II (London 86/87, Draughtsmanship Quantity Surveying [City and Guilds] நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நேரில் வந்து தொடர்புகொள்ளவும்: அதிபர், உயர் கலைக் கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் [A458

VI தொடக்கம் A/L வரை கணிதம், தமிழ், விஞ்ஞானப் கற்பிக்கப்படும். திருமதி யதீன் பத்மநாதன் B.Sc, C/o P. அம்பலவாணர், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. [C 474]

## தேவை

நல்ல நிலையிலுள்ள டெலிவரி சைக்கிள் தேவை. உடனே தொடர்பு கொள்ளவும். dyn abs, 476, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். A-181

சாவகச்சேரியில் உள்ள பிரபல்யமான ஆலயத்திற்கு மண்டபம், மடப்பள்ளி வேலைகள் தெரிந்த உதவி பூசகர் தேவை. தொடர்பு: விளம்பர இல. C 425, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 425)

## சோதிடம்

புதுவருட பன்னிருராசிகளின் பலன்களும் குருமாற்றமும் விலை 3/- எங்கும் கிடைக்கும். ஆத்மசோதி நூலாசிரியர் த. சத்தியதாஸன், கமலா வாச்வேக்ஸ், மெயின் வீதி, காங்கேசன்துறை. [C 466]

## சேவை

றேடியோ, T. V. மற்றும் வீட்டில் பயன்படுத்தும் உபகரணம் எதனையும் நல்லமுறையில் திருத்திக் கொள்ள நம்பிக்கையான நிறுவனம்; டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட், 476, பிரதான வீதி, சுண்டிக்குளி. (சென்ற் ஜோன்ஸ் கல்லூரி, முன்பாக] A 179

## SERVICES

We undertake Typewriters-Adding machines repairs and services, premisses visited Fudo Enterprises, 39/17, Power House Road, 3rd Lane, (Adj Samy and Co.) Jaffna. (C 410)

## வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். 30 நாடுகளில் 70க்கு மேற்பட்ட பல்வேறுதொழில்கள் (JOB CATEGORIES). உயர் தொழில் முதல் கூலி வேலை வரை, 17 முதல் 50 வயது வரை ஆண்களும் பெண்களும், இலவச விமானச் சீட்டு, தங்குமிட வசதி கட்டணம் எதுவுமில்லை. விண்ணப்பப்பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய கைநூல் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முதலில் சுய விலாசமிட்ட ரூபா 4/25 முத்திரை ஒட்டிய நீண்ட தபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

**FOREIGN ASSIGNMENTS,**
CHUNNAKAM. [C 234]

UDUVIL GIRLS' COLLEGE

## WANTED

1. Graduates to teach in the A/L class.
   (a) Mathematics.
   (b) Tamil.
   (c) Botany.
   (d) English.

Please apply before 15th February - 1986.

PRINCIPAL,
Uduvil Girls' College,
Chunnakam.

A-178

## திருமண நன்றிநவிலல்

### முதலியார் – மங்கையர்க்கரசி

கடந்த 17-01-1986 வெள்ளிக்கிழமை கீரிமலை சிவன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற எமது திருமண வைபவத்திலும் 18-01-86ல் மணமகன் இல்லத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்திலும், 19-01-86ல் மணமகளில்லத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு எம்மை ஆசீர்வதித்துச் சிறப்பித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கட்டுடை, சி. பொ. வ. மா. க. முதலியார்,
மானிப்பாய். மங்கையர்க்கரசி (மாவை).
C-501

## றேடியோ - T. V. Courses

தராதரம் பெற்ற அநுபவமுள்ள விரிவுரையாளர்களால் RADIO - T.V. பாடநெறி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.
புதிய வகுப்புக்கள் உடன் ஆரம்பம்.
செய்முறைப் பயிற்சியில் நீங்களே ஒரு தொலைவாங்கி சாதனத்தை உருவாக்கக்கூடிய பயிற்சிகளை, மாணவ மாணவிகளுக்கு ஒரு அரிய சந்தர்ப்பமாக வழங்குகின்றோம்.
உடன் தொடர்புகொள்ளவும்:

**North Ceylon Technical Institute,**
NO. 14, ST. PETERS LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.
T'Phone: 24355 [A 159]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பின மக்களுடன் பேச்சு நடத்த தென்னாபிரிக்க ஜனாதிபதி விருப்பம்

[பிரிட்டோரியா]

''தென்னாபிரிக்காவின் எதிர்காலம் குறித்து அங்குள்ள கறுப்பின மக்கள் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முன்வரவேண்டும்'' என்று அந்நாட்டு ஜனாதிபதி பி. எம். போத்தா கறுப்பின மக்களைக் கேட்டுள்ளார்.

முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில் கறுப்பின மக்களால் நடத்தப்படும் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் திரு. போத்தா உரையாற்றினார்.

தென்னாபிரிக்காவின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு கறுப்பினத்தவர்களின் ஒத்துழைப்பை பெறுவதற்குத் தமது அரசாங்கம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகத் திரு. போத்தா தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் நேற்று முன்தினம் பாராளுமன்ற அங்குரார்ப்பண வைபவத்தில் திரு. போத்தா உரையாற்றிய பொழுது, சிறைவைக்கப்பட்டிருக்கும் கறுப்பினத் தேசியவாதத் தலைவர் திரு. நெல்சன் மண்டேலேயை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறினார்.

கறுப்பின மக்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களைத் தமது அரசாங்கம் நீக்கிவிடப்போவதாகவும், அரசாங்கம் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக அடுத்த சில மாதங்களில் முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் திரு. போத்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி திரு. போத்தாவினால் தெரிவிக்கப்பட்ட சீர்திருத்த ஆலோசனையை ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ்நிராகரித்துள்ளது.

தென்னாபிரிக்காவில் தனது கெரில்லா நடவடிக்கையைத் தீவிரப்படுத்த இந்த இயக்கம் உறுதிபூண்டுள்ளதாகத் தெரியவருகிறது. [து]

## உலகச் செய்திகள்

## லட்சார்ச்சனை

(ஊரெழு)

ஊரெழு அருள் மிகு மீனாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில் கடந்த 21 ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வரும் லட்சார்ச்சனை கடந்த வியாழக்கிழமையுடன் நிறைவு பெற்றது.

தேவஸ்தானத்தில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்ட தினத்தை முன்னிட்டு இந்த லட்சார்ச்சனை நடத்தப்பட்டது. தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ. மு. கிருஷ்ணசாமிக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியர்கள் மேற்படிலட்சார்ச்சனையில் கலந்து கொண்டனர்.

## அம்பிகைபாகனுக்கு அனுதாபச் செய்தி

[யாழ்ப்பாணம்]

'ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மட்டுமல்லாது, கலை, கலாசாரம், சமயம் ஆகிய துறைகளுக்கும் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்துப் பணியாற்றியவர் அமரர் ச. அம்பிகைபாகன். அப்பெரியாரது பறைவு தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அன்னாரின் பூதவுடல் மறைந்தாலும், அவர் செய்தசேவை காலத்தால் அழிக்க முடியாதது. அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.'' என்று யாழ் இலக்கிய வட்டத்தின் சார்பில் அமரர் ச. அம்பிகைபாகனின் குடும்பத்தினருக்கு அனுப்பி வைக்கப்பட்ட அனுதாபச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "இராணுவ முகாம்களை அகற்றுமாறு கேட்கும் உரிமை மக்களுக்குண்டு"

(ஐ. சண்முகலிங்கம்)

''யாழ்ப்பாணத்திலுள்ள சகல இராணுவமுகாம்களையும் வாபஸ் பெற அரசாங்கம் தவறுமேயானால் எமது போராட்டம் தொடர்ந்து நடாத்தப்படும். 'முகாம்களை அகற்று' எனக்கேட்கும் உரிமை மக்களுக்கு உண்டு'' என்று யாழ் செயலகத்துக்கு முன்பாக நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் வடபிரதேச கூட்டுக்குழுத் தலைவரும் தொழிற்சங்கவாதியுமான திரு. எஸ். விஜயானந்தன் கூறினார்.

அன்னையர் முன்னணியைச் சேர்ந்த திருமதி தேம்பா-குணநாயகம் தலைமையில் பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் தொழிலாளர்கள் எதனையும் சாதிக்க வல்லமையுடையவர்கள். இன்று ஏற்பட்ட எழுச்சி தொடருமானால் சகல ஆயுதப்படையினரும் வாபஸ் பெறப்படுவர் என்பதில் சந்தேகமில்லை'' என்றார்.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த ஜனாப் இக்பால் பேசும் போது; ''இன்று இராணுவ முகாம்களை அகற்றுமாறு அரசை மக்கள் அமைதியான வழியில் கேட்கிறார்கள். மக்களின் கோரிக்கையை அரசு ஏற்காவிட்டால் மக்கள் வேறு வழியின்றி ஆயுதம் ஏந்திப் போராடும் இளைஞர்களுடன் இணைந்து இராணுவத்தை மட்டுமல்ல இராணுவம் தங்கியுள்ள இடங்களைக்கூட தகர்த்தெறியக்கூடும். நிலைமை இப்படி இருக்க அரசாங்கம் பல புதிய புதிய சட்டங்களைப் போட்டும், வடக்கு - கிழக்குப் பகுதிகளைச்சுற்றி இராணுவ முகாம்களை அமைத்தும் மக்களை அழித்து விடலாம் எனக் கனவு காணுகிறது.'' என்றார்

கிராமிய உழைப்பாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. சி. மகாலிங்கம் தமது உரையில், ''முன்பு இளைஞர்கள்போராட்டம் நடாத்தினார்கள். இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியால் முழு மக்களுமே போராட வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். போராடப்புறப்பட்டு விட்ட மக்களை எந்த சக்தியும் தடுத்து நிறுத்தவோ, தாம் விரும்பிய வழியில் அழைத்துச் செல்லவோ முடிமுடியாது'' என்றார்.

ஈழவர் முன்னணியைச் சேர்ந்த திரு. ராஜ்குமார் தமது உரையில்: ''ஆயுதக் கண்ணோட்டத்துடன் மட்டும் போராட்டத்தை நாம் கணிக்கக்கூடாது. ஏனைய விடுதலை பெற்ற நாடுகளில் ஆரம்ப காலங்களில் அப்படி நிலைமை இருக்கவில்லை'' என்றார்.

ஐக்கிய தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. வி. அண்ணாமலை தமது உரையில்; ''இந்த அரசு எந்தப்பிரச்னையையும் தீர்க்கவில்லை'' என்றார்.

வடபிரதேச அரசாங்க விகிதர் சேவை சங்கத்தின் யாழ். கிளைச் செயலாளர் திரு. ஆர். தவராசா தமது உரையில்; ''நீதிக்காகவே நாம் போராடுகின்றோம். இப் போராட்டத்தை நாம் தொடராது விட்டால் மக்களுக்குத்துரோகமிழைத்தவர்களாவோம்;'' என்று கூறினார்.

மேலும், தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம். இ. ஆ. சங்கம் ப. சிவராசா. பல்கலைக்கழக மாணவர் பேரவை பிரதிநிதி, சிமெந்து தொழிலாளர் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை, கூட்டுறவு ஊழியர் சங்கப்பிரதிநிதி இராசதுரை, வர்த்தக ஊழியர் சங்கம் ஜெகநாதன் உட்பட பலர் பேசினார்கள்.

இறுதியில் அன்னையர் முன்னணி செயலாளர் திருமதி நிர்மலா பாலரட்ணம் நன்றி கூறினார்.

## 'சலஞ்சர்' விண்வெளி ஓடத்தில் பலியானவர்களுக்கு அஞ்சலி!

[வாஷிங்டன்]

கடந்த செவ்வாய்க்கிழமை 'சலஞ்சர்' விண்வெளி ஓடத்தில் பலியான ஏழுவிண்வெளி வீரர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி றீகன் தலைமையில் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஹுஸ்டனிலுள்ள ஜோன்சன் விண்வெளி ஆய்வுகூட நிலையத்தில் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் விண்வெளி வீரர்களின் குடும்பத்தவர்களும், விண்வெளிப் பயணத்தை மேற்கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட அமெரிக்க விண்வெளிவீரர்களும் மற்றும் பிரிட்டன், இந்தியா, மெக்ஸிக்கோ, சவூதி அரேபியா போன்ற நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். [து]

## த. வி. கூட்டணித் தலைவர்கள் ராஜீவைச் சந்தித்தார்கள்

[சென்னை]

இலங்கை இனப்பிரச்னை சம்பந்தமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தியுடன் விரிவாகப் பேச்சு நடத்தினார்கள்.

குறிப்பாகக் கடந்த சில நாட்களாகத், தமிழர்கள் வாழும் பகுதிகளில் தமிழர்கள் பெருமளவில் சித்திரவதை செய்யப்பட்டும், கொல்லப்பட்டும் வருகின்றனர் என்று திரு. ராஜீவிடம் கூட்டணித் தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நேற்று முன்தினம் திருச்சிராப்பள்ளியிலிருந்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் புதுடில்லிக்கு விமானத்தில் பயணம்செய்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோர்; ''இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு இந்தியா விரும்பும் அரசியற்தீர்வைவிட இராணுவ ரீதியாகத் தீர்வு காணவே இலங்கை ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா விரும்புகின்றார். சமீப காலமாக இலங்கைஅரசின் போக்கு கடுமையானதாக இருக்கும் நிலையில் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க இந்தியாவின் உதவி மிகவும் அவசியம்'' என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. ராஜீவ் காந்தியிடம் தெரிவித்தனர். [து]

## இப்படியும் நடந்தது

(சென்னை)

தமிழக நகரசபை, பஞ்சாயத் தேர்தல்களில் போட்டியிட, ஆளும் கட்சிக்குள் பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது.

ஒரு பகுதியினர். எம். ஜி. ஆர். சிபார்சில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். வேறு ஒரு பகுதியினர் ஜெயலலிதா சிபார்சில் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

### சென்னையில்

## இன்று தமிழ்ப் போராளிகளை ரொமேஷ் பண்டாரி சந்திப்பார்

[புதுடில்லி]

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்ப் போராளிகளுக்குமிடையே நின்றுபோயிருக்கும் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில் கொழும்பு வரவிருக்கும் இந்திய வெளியுறவுச்செயலர் திரு.ரொமேஷ் பண்டாரி இன்று சென்னை சென்று தமிழ்ப் போராளிகளுடன் பேச்சு நடத்துவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை திரு. ரொமேஷ் பண்டாரி நேற்று புதுடில்லில்தி சந்தித்து இனப்பிரச்னை தொடர்பாகக் கலந்துரையாடியதாகத்தெரியவருகிறது. [து]

## வேம்படி மாணவிகளின் பெற்றோர் மகஜர்

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டையிலிருந்து 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைக்கோரும் மகஜரில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் பயிலும் மாணவிகளின் பெற்றோர் சுமார் 1200 பேர் கையெழுத்திட்டார்கள்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு கடந்த இரு தினங்களாக வந்த பெற்றோர் இம்மகஜரில் கையெழுத்திட்டனர். [க]

## 'யதார்த்த பூர்வமான நாவல் விமானங்கள் மீண்டும் வரும்'

[யாழ்ப்பாணம்]

''மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் எமது வாலிபர்கள் அனுப்பும் 'டிறாவ்ட்'டுக்களை மட்டும் பார்த்துமகிழும் எமது மக்கள் அங்கு அப்பணத்தை உழைக்க எவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறார்கள் என்பதை 'விமானங்கள் மீண்டு வரும்' என்ற நாவலில் எழுத்தாளர் மிகவும் யதார்த்த பூர்வமாக எழுதியுள்ளார். இங்கு ஊதாரித்தனமாக பணத்தைச் செலவழிப்போருக்கு இது வோர் நல்ல படிப்பினை.''

இவ்வாறு நல்லைக் க. பேரனின் முதற்பரிசு பெற்ற 'விமானங்கள் மீண்டும் வரும்' குறுநாவல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்த இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் திரு. வே. தில்லைநாதன் கூறினார்.

நெல்லியடி ம. ம. வித்தியாலய இராசலிங்க மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவினை இளைப்பாறிய கிராம சேவகர் திரு. க. சுப்பிரமணியம், இளைப்பாறிய கரவெட்டி தபால் அதிபர் திரு. க. இராசரத்தினம், மாதர் சங்கத் தலைவி திருமதி புஷ்பம் சபாநாயகம், திருமதி மகேஸ்வரி பாலசிங்கம் ஆகியோர் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தன் வெளியீட்டுரை நிகழ்த்துகையில் ''மத்திய கிழக்கு வாழ்க்கை முறைகளை மிக நுணுக்கமாக எமக்குத் தந்த எழுத்தாளர் என்ற வகையில் நெல்லைக் க. பேரன் பாராட்டிற்குரியவர். தமிழ் நாவல் இலக்கியத்துறையில் இந்த நூல் நிச்சயம் இடம் பெறும்'' என்றார்.

நெல்லியடி திருமகள் புத்தகசாலை அதிபர் திரு. வ. சிவசோதி எழுத்தாளர் நெல்லைக் க. பேரனிடம் இருந்து முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

திரு, குப்பிளான் ஐ. சண்முகம் பேசுகையில் ''புதிய களம் ஒன்றில் மிகவும் உயிரோட்டத்துடன் கதா பாத்திரங்களை உலவவிட்ட பேரன் பாராட்டிற்குரியவர். கொழும்பில் அவர் நிகழ்த்திய இலக்கியக் கூட்டங்கள் ஏராளம். உண்மையான இலக்கிய அபிமானியான இவரது பரிசு பெற்ற இந்த நாவல்விரைவில் மக்கள் மனதில் இடம்பிடித்து விடும்'' என்றார்.

திரு.செ. யோகராசா தமது உரையில், ''சிறு சிறு காட்சிகள், புதிய தகவல்கள் மூலம் கதையை நகர்த்திச் செல்லும் இந்த நாவலின் தலைப்பே ஒரு கவிதைபோன்றது'' என்றார்.

திரு. தெணியான் பேசுகையில், ''யாழ்ப்பாண உணவு முறைகளும்,யாழ்ப்பாண இளைஞரின் முதல் விமான அனுபவங்களும், சாதிப் பிரச்னையும் சிறப்பாக இந்நாவலில் ஆராயப்பட்டுள்ளன'' என்றார்.

செல்வி சந்திரா தியாகராசா, திரு. க. சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் விமர்சனவுரைகளை நிகழ்த்தினர். கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரனின் கலை நிகழ்ச்சியைத் தொடர்ந்து செல்வி மாலதி கதிர்காமத்தம்பி நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸில் மீண்டும் ஜனநாயகம் மலருமா?

★ அரியாலையூர்
வி. என். எஸ். உதயசந்திரன்

இன்று சுமார் ஐந்தரைக் கோடி மக்கள் வாழ்கின்ற பிலிப்பைன்சில் அரசியல் நெருக்கடிகளும் போராட்டங்களும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. அங்கு ஜனநாயகம் தப்பிப்பிழைக்குமா என்பது சந்தேகத்துக்கிடமாகவே உள்ளது.

ஜனநாயக ஆட்சி என்ருல் என்ன? மக்களால் மக்களுக்காக மக்கள் ஏற்படுத்தியதே ஜனநாயக ஆட்சி அரசியல் உரிமை, அடிப்படை உரிமை, பொருளாதாரஉரிமை, சமூகப் பாதுகாப்பு உரிமைகளுக்கு வழி செய்து கொடுப்பதே ஜனநாயக ஆட்சியின் சிறப்பம்சங்களாகும்.

இவ்வுரிமைகள் மறுக்கப்படுகின்ற நாட்டில் ஜனநாயகம் நிலைபெறுமா என்பது சந்தேகமே. இன்று உலகில் பல நாடுகளில் ஜனநாயகம் அஸ்தமித்து விட்டது,

இன்று ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ள நாடு பிலிப்பைன்ஸ். எதிர்க் கட்சிகளை அடக்கி, ஒடுக்கி, ஒழிக்க முற்படுகின்ற நாடான பிலிப்பைன்சில் ஜனுதிபதியாக இருந்துவருபவர் பேர்டினட் மார்க்கோஸ். இவர் இருபது வருடமாக ஆட்சிசெலுத்தி வருகின்ருர். மார்க்கோஸின் தற்போதைய பதவிக்காலம் 1987-ம் ஆண்டில் முடிவடைகிறது. எனினும் அவர் இம்மாதம் 7ம் திகதி ஜனுதிபதித் தேர்தலை நடத்துகின்ருர். இத்தேர்தல் மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிய நல்லதொரு சந்தர்ப்பம் என அரசில் விமர்சகர்கள் கூறுகின்ருர்கள்.

எதிர்ட்சிதலைவர் பெனிங்கோ அக்கினே பிலிப்பைன்ஸ் நாட்டை சிறந்த முறையில் வழிநடத்திச் செல்லக் கூடிய திறமை படைத்தவராக மக்கள் நம்பினர். அக்கினே பிலிப்பினே கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் 21 வயதில் இளம் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 30 வருட காலமாக நாட்டில் அரசியல் சீர்திருத்த சமூக நடவடிக்கைளில் ஆர்வம்காட்டி வந்தார். இதனுல் பிலிப்பினே சமூகத்தவர்கள் இவரை தமது தலைவராக்கினுர்கள். அரசுக்கு எதிராகப் புரட்சிப் போராட்டங்களில் ஈடுபட்டதாக சிறையில் அடைக்கப்பட்டார். 50 வயதில் விடுதலையான இவர் அமெரிக்காவில் மூன்று வருட அஞ்ஞாதவாசத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய போது மணிலா விமானநிலயத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பிலிப்பைன்ஸ் எதிாக்கட்சித் தலைவர் பெனிங்கோ அக்கினேவின் கொலையில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பிலிப்பைன்ஸ் இராணுவத் தளபதி ஜெனரல் பெபியன் வெர், மற்றும் 24 படைவீரர்கள்,ஒரு குடிமகன் ஆகியோரை நீண்டகால விசாரணையின் பின் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி நீதிமன்றம் விடுதலை செய்தது.

ஜெனரல் வெர் கொலைவழக்கிலிருந்து விடுதலை செய்யப்படுவாரேயானுல் மீண்டும் அவரைத் தளபதிப் பதவியில் அமர்த்தப்போவதாக மார்க்கோஸ் கூறியிருந்தார். அவரை பதவி விலக்கவேண்டும் என அமெரிக்கா மார்க்கோஸைப் பலவந்தப்படுத்தி வருகிறது.

இராணுவத்தில் செய்யப்பட உத்தேசித்துள்ள சீர்திருத்தங்கட்கு வெர் தடையாகவுள்ளார் என அமெரிக்க அதிகார வட்டாரங்கள் கருதுகின்றன.

வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 26 பேரும் தாம் சுற்றவாளிகள் என நீதிமன்றத்தில் கூறியிருந்தனர்.

கொலையாளி கால்மன் ஒரு கம்யூனிஸ்ட் ஏஜன்ட் என இராணுவம் கூறுகின்ற போதிலும் கொலை தொடர்பான உத்தியோகபூர்வ விசாரணை அக்கினே கொலை ஒரு இராணுவச் சதியென்றும் கால்மன் பலிக்கடாவாக்கப்பட்டார் என்றும் தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வழக்கு விசாரணை தவருனது எனப்பிரகடனஞ்செய்யும்படி உயர் நீதிமன்றத்திடம் கால்மன் குடும்பமும் வழக்கறிஞர்களும் விடுத்த மனு தோல்வி கண்டதை அடுத்தே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதுபற்றி கொலைசெய்யப்பட்ட அக்கினேவின் மனைவி கொராசொன் அக்கினே கருத்துத் தெரிவிக்கையில் இவர்களை விதலை செய்திருப்பது குற்றத்தை மூடி மறைக்கும் செயலென்று கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, பிலிப்பைன்ஸ் நாட்டில் தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன. ஜனுதிபதி மார்க்கோஸ் அவரது மனைவி இமால்டா மார்க்கோஸும் தமது சொந்த மாநிலமான லங்கோஸ் நோட்டேக்குச் சென்று அங்கு கூடியிருந்த மக்களுக்கு மார்க்கோஸ் ஆற்றிய உரையில் தன்னை எதிர்த்துப் போட்டியிடும் திருமதி அக்கினே தேர்தலில் வெற்றியீட்டி பதவிக்கு வந்தால் அவரது கணவரும் எதிர்க்கட்சித் தலைவருமான பெனிங்கோ அக்கினேவின் கொலை சம்பந்தமாகத்தன்னை நீதிமன்றத்தில் நிறுத்துவதாகப் பயமுறுத்தி வருவதாகக் கூறினுர்.

திருமதி அக்கினே தேர்தலில் வெற்றியீட்டுவதற்குக் காரணம் மக்களின் நலனையோ நாட்டின் நலனையோ கருத்தில் கொண்டு அல்ல என்பதையே அவரது பேச்சும் போக்கும் எடுத்துக்காட்டுகின்றன என ஜனுதிபதி மார்க்கோஸ் சாடினுர்.

பெப்ரவரி மாதம் நடக்கவிருக்கும் ஜனுபதித் தேர்தலில் மார்க்கோஸை எதுர்த்துப் போட்டியிடும் கொராசொன் அக்கினே தனது கணவரின் மரணத்திற்கு மார்க்கோஸ் தான் பொறுப்பு என்றும் தான் ஜனுதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தனது கணவர் அக்கினேவின் கொலைக்காகப் பேர்டினண்ட் மார்க்கோஸை கைது செய்யப் போவதாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ருர் என்பது குறிப்பிடக்கக்கது.

பிலிப்பைன்ஸின் தடைசெய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜோஸ் மரியா சிசொன் இம்மாதம் நடக்கவிருக்கும் தேர்தல் [illegible] ஒரு ஏமாற்று என்றும் 1978 முதல் மார்க்கோஸ் நடத்திய தேர்தல் எல்லாமே மோசடி என வர்ணித்துள்ளார். இவர் இப்போது சிறையில் இருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

1977இல் மனைவி [illegible] டுடனும் கெரில்லா மக்கள் இராணுவ ஸ்தாபகர் பேர்னபே பியூஸ் காய்னேவுடனும் கூட்டாகக் கைதுசெய்யப்பட்ட சிசொன் கிளர்ச்சி - அரச விரோத குற்றச்சாட்டுக்களை எதிர்த்துநோக்கி சிறையிலுள்ளார். இவரது மனைவி 1982ல் விடுதலை செய்யப்பட்டார்.

சிறையிலிருந்து சிசொன் விடுத்த அறிக்கையை சுதந்திரம், ஜனநாயகம், நீதிக்கான இடதுசாரி தேசியவாதக் கூட்டணி ஒழுங்கு செய்த கருத்தரங்கொன்றில் அவரது மனைவி வாசித்தார்.

மத்தியதர வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எதிர்க் கட்சிகள் கூட்டணிக்கு அவை பாசிச எதிர்ப்புச் சக்திகள் என்ற வகையில்ஆதரவுஅளிக்க வேண்டும். ஆனுல் எந்தவொரு பாசிச சர்வாதிகாரியும் தான் உருவாக்கும் சமாதானவழிப் முறை மூலம் தோற்கடிக்க படுவதை அனுமதிக்கமாட்டான் என அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

மார்க்கோஸின் அரசுக்கு கம்யூனிஸ்ட் கெரில்லாக்களால் பெருந்தலையிடி தோன்றியுள்ளது. நாட்டின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டும் அடக்கி ஒடுக்கப்பட்டும் சித்திரவதைக்குள்ளாக்கி வந்த பிலிப்பைன்சில் இம் மாதம் ஜனுதிபதித் தேர்தலை நடத்த இருக்கிறது. இது பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சிகளுக்கு தற்போதய அரசியல் சூழ்நிலை நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

பொதுத்தேர்தலை ஜனநாயகத்தின் அணிகலன் என்பார்கள். பொதுத்தேர்தல்மூலம் பலம் வாய்ந்த ஆட்சியை அமைக்கலாம். பாதகமான ஆட்சியையும் அமைக்லாம். அட்டூழியம் புரியும் ஆட்சியை தூக்கியெறியலாம். அத்தனை வலிமையும் தேர்தலுக்கு இருப்பதாலேயே பொதுத் தேர்தல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ருர்கள்.

பிலிப்பைன்ஸ்மக்கள் ஜனநாயகத்தில் எவ்வளவுதூரம் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதை அறியும் சோதனைக்களமே இம் மாதம் நடக்கவிருக்கும்தேர்தலாகும்.

இத்தேர்தலில் மார்க்கோஸ் ஆட்சியைக் கைப்பற்றுவாரா? அல்லது படுகொலை செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் அக்கினேவின் மனைவி கொராசொன் அக்கினே ஆட்சியைக் கைப்பற்றுவாரா? முடிவை அறிய உலகமக்கள்ஆவலோடு காத்திருக்கின்ருர்கள்.

இறுதியாகக் கிடைத்த தகவலின்படி கொராசொன் அக்கினேவின் பக்கமே காற்று வீசத்தொடங்கியுள்ளது. மார்க்கோஸின்அரசால்மக்கள் பட்ட துன்பங்கள் சொல்லிலடங்கா. எனவே இந்த நல்ல சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்துவார்கள் என்று நம்பலாம்.

இத்தேர்தலை ஒழுங்குமுறையாக பிலிப்பைன்ஸ் ஜனுதிபதி பேர்டிண்னட் மார்க்கோஸ் நடத்துவாரா! என்பதைப் பொறுந்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## பிரஜைகள்குழுவுடன் தொடர்பு கொள்ள வேண்டும்

[யாழ்ப்பாணம்]

இனவன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் கிராமங்களில் அமைக்கப்பட்ட பிரஜைகள் குழுச் செயலாளருடன் உடன் தொடர்பு [illegible] ளுகின்றது. [க]

## வயதுவந்தவர்களின் 'திருவிளையாடல்' இது

[யாழ்ப்பாணம்]

மிளகாய் வாங்கவந்த வயோதிபரை கடைமுதலாளி உள்ளே கூட்டிச்சென்று மிளகாயின் தரத்தைக் காட்டிக் கொண்டிருந்தபோது வெளியில் நின்ற மற்ருெரு வயோதிபர் கடைலாச்சிக்குள் இருந்த 4335 ரூபாவை மெதுவாக எடுத்துச் சென்றுவிட்டார்!

யாழ். சத்திரத்துச் சந்திக்கு அருகில் உள்ள 'சுகபாணி ஸ்ரோர்ஸ்' உரிமையாளர் என். சண்முகநாதன் இத்தகவலைத் தெரிவித்தார். இது சம்பந்தமாக அவர் மேலும் கூறியதாவது:

''நேற்றுமுன்தினம் மாலை இருவயோதிபர்கள் சைக்கிளில் கடைக்கு வந்தனர். இருவரும் வெள்ளைச் ஷேர்ட், வெள்ளைச் சாரம் அணிந்திருந்தனர். ஒருவர் வெளியில் நிற்க மற்றவர் உள்ளேவந்தார். ஒருவருக்கு 75 வயது இருக்கும் மற்றவருக்கு 60 வயதிருக்கும். மிளகாய் என்னவிலை என்று அந்த வயோதிபர் கேட்டு மிளகா

(5-ம் பக்கம் பார்க்க)

## கன்னித்தமிழ் வளர்க்க ஒரு கம்பன் தமிழ்க் கோட்டம்!

க. சிவராமலிங்கம்

தமிழ், தமிழர் சால்பு என்று கூறும்போதெல்லாம் கம்பநாட்டாழ்வாரை நினைக்காமலிருக்கமுடியாது. தமிழ் இலக்கியப் பெரும்பாற்கடலில் முக்கு முகேரெனக் குடைந்தாடும் போதெல்லாம் கம்பன் கவிதைகள் எங்கும் இனிக்கக் காண்கிருேம். சங்கச் சான்ருேர் செஞ்சொற் கவிதைகளின் சுவையனைத் தேன் கலந்து, பால் கலந்து தெவிட்டாது பருகச் செய்வன கம்பன் கவிதைகள். Milton, Keats போன்ற புலவர் பெருமக்கள் ஆங்கில இலக்கியத்தை வளம் படுத்தினுர்கள் எனினும் ஷேக்ஸ்பியர் போன்று ஆங்கிலேயர்நெஞ்சங்களில் நிறைந்ததில்லை என்பர். அவ்விதமே இன, மத, தேச வேறுபாடுகளை வென்று இனித்து நிற்பது கம்பன் கவிதைகளே. கம்பன் கவிதைகளில் இம்மை,மறுமை, அம்மையுங் கண்டு மகிழ்ந்த தமிழ்ப் புலவர்கள் சிலர் இலங்கையிலும் 1964ஆம் ஆண்டில் நீதியரசர் கலாநிதி எச். டபிள்யூ. தம்பையா தலைமையில் ''இலங்கைக் கம்பன் கழகம்'' அமைத்துத் தமிழ் செய்தார்கள். ஒரு சில ஆண்டுகள் நீறுபூத்த நெருப்பாக நின்ற கம்பன் கழகம் 1980இல் வீறுகொண்டெழுந்து செயற்படத் தொடங்கியது. இவ்வாண்டில் முற்று முழுதாகப் புதிய இரத்தம், துடிப்பான தமிழ் இளைஞர் இரத்தம் ஏற்பட்டு, தொன்மை பேணி, அன்றைய தமிழன்பர்களின் நல்லாசியுடன் செயற்படத் தொடங்கினுர்கள். தலைவர் திரு. நந்தகுமார், செயலர் குமாரதாசன் இவர்களின் எண்ணங்களை இயக்குநர் ஜெயராஜின் கண்காணிப்பில் திறம்படச் செயலாக்கக்கூடிய ஒரு படையே திரண்டு நிற்கிறது.

கம்பனுக்குக் கோயில்கண்டு அவன் புகழ்பாடி, பாடுவித்து, தன்னையே கம்பனடிப்பொடி என்றுகூறிப்பெருமைகொண்டு அமரத்துவம் எய்திய- இந்திய விடுதலைப்படையின் தமிழ்நாட்டுக் கப்டன் எனக் கருதப்பட்ட உயர்திரு சா. கணேசன் ஐயாவும், இராமன் புகழை இந்த நூற்ருண்டில்எடுத்துச்சொல்ல அனுமனே அவதாரம் எடுத்தனனே என்று கேட்போர் வியக்கும் கம்ப கலாநிதி பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் போன்ருேர் தமிழகத்திருந்து வாழ்ந்த அமரர்களான திருமலை கழகப் புலவர் பெ. பொ. சிவசேகரம், சொல்லின் செல்வன் தேவன், கவிச்செல்வர் வித்துவான் சி. ஆறுமுகம் ஆகியோரும், வித்துவான் க. ந. வேலன், வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்), பேராசிரியர் அ. சண்முகதாஸ், சோ. பத்மநாதன், கவிஞர் வே. ஐயாத்துரை, வித்துவான் திருமதி வஸந்தா வைத்தியநாதன் போன்ற அறிஞர்கள் வார்த்த, வார்க்கின்ற ஊக்கமும், ஆக்கமும் நிறைந்த அன்பு நீர் கொண்டு வளர்ந்து பெரும் பயன்தரும் விருட்சமாக நிற்கிறது அகில இலங்கைக் கம்பன் கழகம்.

தனக்கே உரிய தனித்துவமான முறையில் கம்பனுக்கு, விழாக்கள் பல கண்டும், கொழும்பு, திருமலை, இணுவில் பருத்தித்துறை ஆகிய இடங்களில் பெருவிழாக்கள் நடாத்தியும் தமிழ்த்தொண்டு புரிகின்ற கழகம் இதுவே என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்ருகும். தமிழெனும் அன்புப் பிணிப்பால் அனைவரையும் ஈர்த்து அவரவர் தனித்துவத்துக்கு மதிப்பளித்து நிற்கும் கழகம் இது.

கம்பனுக்கு விழா என்ற போதெல்லாம் தமிழ் நெஞ்சம் மலர்ந்துநிற்கும் S. தியாகராசா, மில்க்வைற் கனகராசா, புன்னலைக்கட்டுவன் த. திருநாவுக்கரசு, பருத்தித்துறை மு. பொ. வீரவாகு, குகன் போன்ற வள்ளல்களும் இல்லாமலில்லை. இத்தனையுமிருந்தும் கழகத்திற்கென ஓர் சொந்த நிலயம் இல்லாமற் போனது பெருங் குறையாயிருந்தது. முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் செந்தமிழ்த் தெய்வம் நல்லைக் குமரன் திருவருள் கனிந்த நல்லோரையில் என் கடன் பணி செய்து கிடப்பதே என இயங்கும் ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம் தொழிற்பட, அறங்காவலர், அவன் வழி நின்று வழங்க வாய்த்த புண்ணியப் பெருநிலத்தில் 'கம்பன் தமிழ்க் கோட்டம்' நிலைகொள்ளத் திருவருள்பாலித்துள்ளது. தமிழ் என்ற தனித் தளத்தில் வேறெந்த நினைப்புக்கும் இடந்தராததாய்த் தமிழ்செய்யும் கோட்டமாக இது அமையவிருக்கிறது என்பது மிக மகிழ்ச்சி தரும் செய்தியாகும். தமிழும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டதால் தமிழரும் தம் நாட்டில்படும் துன்பத்தை உலகறியும். இந்நிலையில் இத்தனை போராட்டங்களுக்கும் 'மத்தியில் தமிழுக்கென ஒரு கோட்டம் எழும்புவது தமிழன் தலைநிமிர்வதற்குச் சமமானதாகும். இதுவரை வடபகுதியில் தமுமிக்கெனத் தனித்து ஒரு நிலயம் இல்லாதிருந்த குறையை இத்தனை பிரச்னைகளுக்கும் மத்தியில் அகில இலங்கைக் கம்பன் கழகம் நீக்க முன்வந்திருப்பது, அனைத்துத் தமிழர்களாலும் பாராட்டப்பட வேண்டிய தொன்ருகும். தமிழார்வம் படைத்த அத்தனை நல்ல செயற்பாடுகளுக்கும் கைகொடுக்கும் ஒரு நிலையமாக இக்கோட்டம் உருவாகவிருப்பதும் தமிழர்செய்த தவமேயாகும். இப்பயன்தரு முயற்சி இனிது நிறைவேற இறையருள் பாலிப்பதோடு, தமிழ் நெஞ்சங்கள் முட்டி இடித்து முன் வந்து உதவவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிருேம். கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்!


— க. சிவராமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு வாரமலர்

# EELANADU VARA MALAR

**"இறுதிப் பயணம்" (The ultimate field trip) சலஞ்சரில் விண்வெளிக்குச் சென்ற ஆசிரியை விண்வெளியில் இருந்து தனது மாணவர்களுக்குக் கற்பிக்கவிருந்த பாடங்களிலொன்றின் தலைப்பே இது. துரதிர்ஷ்டவசமாக அவரின் இறுதிப் பயணமாகவே இது அமைந்துவிட்டது.**



## 'ஓர் இறுதி யாத்திரை'

ஓடத்தின் அடிப்பகுதியில் இருந்து புகை கிளம்பி அயலெங்கும் வியாபிக்கிறது.

இதோ... ஓடம் புறப்படுகிறது, வில்லினின்றும் பாயும் அம்பு போல!

தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் அமர்ந்திருப்

பறந்து கொண்டிருக்கிறது. மிகவும் அழகான காட்சி அது! ஓடம் சிறிதாகிக் கொண்டேயிருக்கிறது. சுற்றிலும் முகில் கூட்டம்.

ஓடம் புறப்பட்டுச் சுமார் எழுபத்தைந்து வினாடிகள் (ஒன்றேகால் நிமிடங்கள்)

பார்த்துக் கொண்டிருந்தோர் மத்தியில் திடீரென ஒரு நிசப்தம்!

தொலைக்காட்சியில் காணப்பட்ட ஓடத்தை.காணவில்லை, சிறு சிறு பகுதிகள் காணப்படுகின்றன.

ஓடத்தின் ஒரு பகுதி மட்டுமே தெரிகிறது. பின்னர் அதுவும் காணப்படாமல்... எல்லாம் சூனியம்!

தொலைக்காட்சியின்முன்னுள் அமர்ந்திருப்பவர் மத்தியில் விதவிதமான உணர்ச்சிகள். எல்லோர் முகத்திலும் கேள்விக்குறி.

ஓடத்திற்கு என்ன நடந்தது?

இறுதியில் விடை கிடைக்கிறது.

ஆம், அந்தப் பெரும் ஓடம் - அமெரிக்க தொழினுட்பச் சாதனைகளின் சிகர

# மண்ணை அதிரவைத்த விண்வெளித் துயரம்

அமெரிக்காவின் கேப் கனவரலிலுள்ள கென்னடி விண்வெளி ஆய்வு நிலையம் -

நிலையத்தினுள் பல தொலைக்காட்சிப் பெட்டிகள். ஆனால் அனைத்திலும் காட்சிஒன்றே!

அது மட்டுமா, அமெரிக்கக் கண்டமெங்கும் பல கோடிக் கணக்கான கண்கள் தங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன!

விண்வெளிநிலைய மைதானத்தில் ஒரு விண்வெளி ஓடம் (Shuttle) நிலைக்குத்தாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

சைகை காட்டப்படுகிறது.

பவர்கள் எல்லோரும் ஆரவாரித்துக் கரகோஷம் எழுப்புகின்றனர். இவர்களில் நால்வர் அதிகமாக ஆரவாரிக்கின்றனர்.

யார் அவர்கள்?

விண்வெளிக்குப் பயணம் செய்யும், ஆனால் விண்வெளித்

### செந்தில்

துறையுடன் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத, முதலாவது பெண்மணியின் பெற்றோரும், கணவரும், 9வயது மகளுமே அவர்கள்!

நிலைக்குத்தாகப் புறப்பட்ட ஓடம் இப்போது கிடையாகப்

மாகக் கணிக்கப்பட்டது- வெடித்துச் சிதறி விட்டது! ஆரவாரித்தவர்கள் இப்போது அழுகின்றனர்.

அதனை அழுகையென்றுசொல்வது!இதுதான் அமெரிக்கவிண்வெளி ஓடமான 'சாலஞ்சர்' இன் இறுதிக்கதை. அத்துடன் 3000 கோடி ரூபாயும் விலைமதிப்பற்ற ஏழு உயிர்களினது கதையும் முடிந்து விட்டது.

'சலஞ்சர்' வெடித்துச் சிதறிய அதிர்ச்சி உலக மக்கள் மனத்தை விட்டு இன்னும் அகல வில்லை.

விபத்துக்குக் காரணம் என்ன?

விசாரணைகளின் பின்னர் தான் அது தெரியவரும்.



சலஞ்சரின் முதல் பெண் பயணி

விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் விண்வெளிப் பயணம் பற்றியும் ஓடங்கள் பற்றியும் நாம் சிறிது கவனிப்போம்.

இரண்டாம் உலகமகாயுத்தத்தின் முடிவின்போதே, புதிதாக வல்லரசுகளாக மாறியிருந்த அமெரிக்காவும் ரஷ்யாவும் விண்வெளியிலும் தமது ஆதிக்கத்தைச் செலுத்துவது பற்றிய வழிமுறைகளை ஆராயத்தொடங்கின.

ஆயினும் 1957ம் ஆண்டு வரை எந்த ஒருநாடுமே இத்துறையில் வெற்றியீட்டியதாகக் காணப்படவில்லை. எந்த நாடு முதலில் விண்வெளிக்கலத்தைச் செலுத்துகிறதோ அதன் மதிப்பு உலகில் உயருமென்பதால் இருநாடுகளும் மிகவும் கடுமையாகப் போட்டிபோட்டன.

இறுதியில் ரஷ்யாவே வென்றது!

57ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ம் திகதி 'ஸ்புட்னிக்' எனும் செய்மதியை ரஷ்யா விண்வெளிக்கு ஏவியது. இதுவே விண்வெளியுகத்தின் அத்திபாரம் எனலாம்.

ஆனால் அமெரிக்கா சும்மா இருக்குமா? 58ம் ஆண்டுஜூலை மாதம் முதலாம் திகதி தனது செய்மதியாகிய 'எக்ஸ்புளோரர்'ஐ விண்வெளிக்கு அனுப்பியது.

இதனைத் தொடர்ந்து 59, 60ம் ஆண்டுகளில் இருநாடுகளும் பல செய்மதிகளை அனுப்பின.

ஆனாலும் இவையனைத்திலும் மனிதர் பயணம் செய்யவில்லை.

எனவே யார் முதலில் மனிதரை விண்வெளிக்கு அனுப்புவது என்று இருநாடுகளும் போட்டியிட்டன.

இதிலும் ரஷ்யாவே வென்றது!

61-ம் ஆண்டு ஏப்றல் மாதம் 12-ம் திகதி ரஷ்யாவில் 'வொஸ்டொக்' கலம் யூரி ககாரினுடன் விண்வெளி உடறத்தது.

அமெரிக்காவின் சார்பில் அலென் ஷெப்பர்ட் என்பவர் 61-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி [மெர்க்யூரி] MR III எனும் கலத்தில் விண்வெளிக்குச் சென்றார்.

63-ம் ஆண்டு ஜூன் 16-ம் திகதி ரஷ்யாவைச் சேர்ந்த வலன்டைனா டெரஷ்கோவா எனும் பெண்மணி விண்வெளி விஜயம் மேற்கொண்டார். இவரே உலகின் முதலாவது விண்வெளிப் பெண்மணியாவார். இவர் பயணம் செய்த கலம் 'வொஸ்டொக் — 6' ஆகும்.

69-ம் ஆண்டு விண்வெளி யுகத்தில் ஒரு முக்கிய ஆண்டாகும். ஜூலை மாதம் 20-ம் திகதி முதல் முறையாகச் சந்திரனில் மனிதன் இறங்கி

(12ம் பக்கம் பார்க்க)

## நாளை நடைபெறுவது இறுதி ஆட்டம்?

நாம் இங்கு குறிப்பிடுவது இலங்கை-இந்திய டெஸ்ட் கிரிக்கட் அல்ல. அதுதானே இலங்கைக்கு வெற்றியில் முடிந்தது. அதனை நாம் மனமார வாழ்த்தினோமே!

பதினொரு பேருக்கு மேல் விளையாட்டில் பங்குபற்றியிருந்தால் அதனைத் தடுத்திருக்கும் பொறுப்புடையவர் மத்தியஸ்தர். வெற்றிக்குப்பின் அளப்பமுயல்வது கிரிக்கெட் அல்ல.

எமது ஆட்டம் தமிழ்த் தேசிய ஆட்டம் கிளித்தட்டு ஆட்டம். கிரிக்கட்டுக்கு ஏது இடம்?

இலங்கை அரசுடன் தமிழர் பேரில் ஆடிய இரு கப்டன்களும், காயும் பழமும் என்ற முடிவில் ஆட்டங்களை நிறுத்தினர்.

நாளை மீண்டும் நடக்கிறது.

சுமார் 55 வருடங்களுக்கு முன் மகாத்மாகாந்தியும் வெள்ளாடும் லண்டன் சென்ற நினைவு வருகிறது.

தாழ்வுற்றிருந்த இந்திய தேசத்துக்குச் சுதந்திரம் தேடிப்போன யாத்திரை அது.

வெறுங்கையுடன் திரும்பிய மகாத்மா சுதந்திரம் சொந்த நாட்டில் கிடைக்குமென்றார்.

இன்று பாழ்பட்டிருக்கும் இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கும் பணியில் கொழும்பு வருகிறார் இந்தியத் தலைவர் ரொமேஷ் பண்டாரி.

பலமுறைவரும் பொறுமையுடைய தலைவர் பண்டாரியின் இறுதி ஆட்டம் இது.

இந்தக் கோசு வெற்றிக்கு இடமுண்டா? தமிழ்த்தேசியம் இரத்தம்போலப்பழுத்து நிறத்திருக்கிறது.

இலங்கை ஆட்சியும் ஈடாட்டம் கண்டிருக்கிறது. இந்திய உதவியை நாடி நிற்கிறது.

ஒரு சிறு உலுப்புடன் பழம் நழுவி விழும் பக்குவம். பாலில் அல்ல இரத்த ஆற்றில்!

அதனைக் கட்டுபடுத்தி ஆட்சி தொடர ஜனாதிபதி இந்திய உதவியை நாடுகிறார். இரத்தம் பாலாகமாறுமானால் பாலும் ஆய்விடும், பழமும் ஆய்விடும்.

## சிறந்த தமிழ் அறிஞர்

சிறந்த தமிழ்அறிஞர் திரு. ச. அம்பிகைபாகன் இயற்கை எய்தியமை அறிந்து மிகவும் கவலையடைகின்றேன். இலங்கையில் விசேடமாக யாழ்ப்பாணத்தில் இந்த நூற்றாண்டின் மத்திய பகுதியில் சமயரீதியாகவும், மொழி ரீதியாகவும் இடம்பெற்ற முக்கிய விழாக்களுக்கு மூலகாரணமாயிருந்தவர் திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் அவரது சைவ தமிழ் முயற்சிகளுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டவர்கள். மிகவும் வசீகரமான தோற்றமுடைய அறிஞர் அம்பிகைபாகன் அவர்கள் வஞ்சகமற்ற ஒரு பெரும் மனிதர்.

எழுத்துத் துறையில் புதிய உத்திகளைக் கையாண்டுவந்த திரு. அம்பிகைபாகன் அவர்கள் அத்துறையில் எம்மையும் மிக ஊக்குவித்தவராவர். அவரதுஎழுத்துக்களில் பழமையும் அதேசமயத்தில் புதுமையையும் காணலாம். அவ்வாறே அவரது பேச்சுக்களும் அமைந்திருந்தன. என்னை அடிக்கடி சந்தித்து உபயோகமான பல விஷயங்களையும்பேசி வந்தவர். சமீபத்தில்கூட சந்தித்து உரையாடி மகிழவைத்தவர். அவர்களது ஆன்மா சாந்தியடையும் வண்ணம் இறைவன் திருவடிகளை



மனதில் இருத்திப் பிரார்த்திப்போமாக.

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

## சலஞ்சர்- 26வது பயணம்

அமெரிக்கவிண்வெளிக் கலமான சலெஞ்சர் 26வது விண்வெளிப் பயணமாகும். இந்தப் பயணம் பலமுறை ஒத்தி வைக்கப்பட்டது. கடைசியில் இதில் பயணம் செய்தவர்கள் எல்லோரும் பலியானார்கள். சுமார் 10மைல் மட்டும் பயணம் செய்த இவ்வோடம் 75செக்கண்டுகளில் வெடித்துச் சிதறியது. எண் எட்டு பயங்கரமானதா?

'சச்சி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடோடிக் கதைகள்

✶ தமிழில்: நீர்வை பொன்னையன்

ஓர் ஆரம்ப பாடசாலையின் வகுப்பு அறையில் இருந்து கொண்டு, ஒரு கட்டுரையை எழுதுவதற்குத் தயார்செய்து கொண்டிருப்பதாக நான் கனவுகண்டு கொண்டிருக்கின்றேன். அப்பொழுது, ஓர் அபிப்பிராயத்தை எப்படித் தெரிவிப்பது என்று நான் என் ஆசிரியரைக் கேட்கின்றேன்.

''அது மிகவும் கடினமான விஷயம்''

தனது மூக்குக் கண்ணுடிக்குள்ளால் பக்கவாட்டாக என்னைப் பார்த்துக்கொண்டு ஆசிரியர் கூறுகின்ருர்.

''இது தொடர்பாக நான் ஒரு கதை கூறுகின்றேன்''

அவர் கதை கூறத் தொடங்குகின்ருர்.

கதை கேட்கும் ஆவலுடன் நான் அவரைப் பார்க்கின்றேன்.

''ஒரு குடும்பத்தில் ஒருமகன் பிறக்கும் பொழுது முழுக் குடும்பமுமே ஆனந்தப்படுகின்றது. அந்தக் குழந்தை ஒரு வயதாக இருக்கும்பொழுது வீட்டிற்குவரும் விருந்தினர்களுக்கு அதைக் காட்டுவதற்கு வெளியே கொண்டு வருவார்கள். வழக்கமாக அவ் விருந்தினர்களின் பாராட்டுகளைப் பெறுவதற்கு அவர்கள் எதிர்பார்க்கின்ருர்கள்.

## உண்மை கசக்கும்

ஒருவர் கூறுகின்ருர், 'இந்தக் குழந்தை செல்வந்தனுக வரும்'என்று. அப்பொழுது அவருக்கு மனப்பூர்வாக நன்றி தெரிவிக்கின்ருர்கள் அக்குடும்பத்தினர்.

'' 'இந்தக் குழந்தை ஒரு உயர் அதிகாரியாக வரும்'என மற்ருெருவர் கூறுகின்ருர். அவருக்குச் சன்மானங்களை வழங்குகின்றனர் அக்குடும்பத்தவர்கள்.

'' 'இந்தக்குழந்தை ஒருநாள் இறக்கும்' வேறு ஒருவர் கூறுகின்ருர். அப்பொழுது அக் குடும்பத்திலுள்ளவர்கள் எல்லோரும் ஒன்ருகச் சேர்ந்து அவருக்குக் கடுமையாக அடித்து உதைக்கின்றனர்.

''அந்தக்குழந்தை ஒருநாள் இறப்பது தவிர்க்க முடியாதது. இது முற்றிலும் உண்மை. அதேவேளை அதுபணக்காரனுக இருக்கும் அல்லது ஓர்உயர் அதிகாரியாக வரும் என்பது நடக்கக்கக்கூடும் அல்லது நடக்காமலிருக்கக்கூடும். அப்படியிருந்தும் பொய் கூறியவருக்குச் சன்மானமளிக்கப்படுகிறது. ஆனுல் உண்மைக்கூற்று அடிஉதையைப் பெற்றுகொடுக்கின்றது. நீ...''

''நான் பொய்கள் கூறவிரும்பவில்லை. அதேவேளை நான் அடிகளையும், உதைகளையும் வாங்குவதற்குத் தயாரில்லை. அப்போ நான் என்ன கூறுவது?''

''அப்படியென்ருல் 'ஆ! இந்தச் குழந்தையை அப்படியே பார்! எனது வார்த்தை... ஓ எனது! ஓ! அது, அது!' ''

-★-✶

ஒரு பிரதம மந்திரி தனது சொந்த இடத்திலிருந்து வேறு ஓரிடத்துக்கு திக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

''உங்களது சௌகரியத்திற்காக இந்த ஆற்றைக் கடப்பதற்கு நீங்கள் அரசகருமத்துக்குரிய ஒரு படகை உபயோகியுங்கள்''

—தன்னை வழியனுப்பிவைக்க வந்த ஒருவருக்குக் கூறினுர் பிரதமர்.

பிரதமரை வழியனுப்பி வைக்க வந்தவர் படகை எடுப்பதற்குத் துறைமுகத்திற்குச் சென்ருர். அங்கு துறைமுகப் பொறுப்பதிகாரி இருக்கவில்லை.

## தீர்க்கதரிசனம்

துறைமுகத்தில் அநேக படகுகள் கட்டப்பட்டிருந்தன. இதனுல் அரச கருமத்திற்குரிய படகை அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை.

''இங்கே கட்டப்பட்டிருக்கின்ற 'ஆயிரக்கணக்கான படகுகளில் அரசகருமத்திற்குரிய ஒரு படகை எப்படிக் கண்டு பிடிப்பது?''

—துறைமுகப் பொறுப்பதிகாரி வந்தபொழுது அவர் கேட்டார்.

''அது அவ்வளவு கடினமான வேலையில்லை. மிகவும் இலகுவாகக் கண்டுபிடித்து விடலாம்.''

—பொறுப்பதிகாரி கூறினுர்.

''எப்படிக் கண்டுபிடிப்பது?''

''சிதைவுற்ற பின்கட்டுத் தளங்களையும், உடைந்த துடுப்புக்களையுமுடைய படகுகள்தான் அரசாங்கத்திற்குச் சொந்தமானவை''

—அதிகாரி பதிலிறுத்தார்.

அரசகருமத்திற்குரிய ஒரு படகை வந்தவர் இலகுவில் கண்டுபிடித்துவிட்டார். ஆனுல் ஆற்றைக் கடப்பதற்கு லாயக்கற்ற வகையில் உடைந்து போயிருந்தது அந்தப் பழையபடகு.

அவர் ஒருவாறு சமாளித்து ஆற்றைக் கடந்தார்.

அப்பொழுது அவர் வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டுக்கொண்டு கூறினுர்.

''இக்காலத்தில் அரசாங்கம் மக்களை அந்த அரசகருமத்திற்குரிய படகுகளைப் போலவே அக்கறையின்றிப் புறக்கணித்து வருகின்றது. அது மக்களை வதைக்கின்றது. இந்த அரசாங்கம் உண்மையில் சீர்கெட்டுஇகழ்ச்சிக்குரிய முடிவை அடையும்''.

# பாலர் பாடசாலை பாலர் பராமரிப்பு நிலையமல்ல

பாலர் பாடசாலைக்குப் பிள்ளைகள் தமது நான்காவது வயதிலேயே பிரவேசிக்கின்ருர்கள். அவர்களது எதிர்கால வாழ்விற்கு வித்தாக அமையும் பாலர் பாடசாலைக்குப் பெற்ருேர்களின் பங்களிப்பும் முக்கியமான தொன்ருகும். சில பெற்ருேர் தமது வீட்டுப் பிரச்சினைகள் காரணமாகப் பாலர் பாடசாலையில் விட்டுப் பிள்ளைகளைப் பராமரிக்க நினைத்து, அதை ஒரு பராமரிப்பு நிலையமாகவே கருதுகிருர்கள். அது முற்றிலும் தவருன ஒன்ருகும். தமது பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றமான வாழ்விற்கு அத்திவாரமே அங்கு தான் ஆரம்பிக்கின்றது என்பதைப் பெற்ருேர் உணர வேண்டும். சிறுவயதிலேயே பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லும் பழக்கத்தை அவர்களிடையே ஏற்படுத்த வேண்டும். பாடசாலைக்குச் சென்று அங்கு சக மாணவர்களுடனும், ஆசிரியருடனும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் பெற்ருேரே பிள்ளைகளுக்குப் புகட்ட வேண்டும். அத்தோடு அவர்களது கல்வியை ஊக்குவிக்க வேண்டும். பிள்ளைகளது தேவைகளைப் பூர்த்தி செய்து ஆர்வத்தை ஏற்படுத்தி மனதில் உற்சாகத்தை ஏற்படுத்த வேண்டும். பெற்ருேர் பாடசாலைக்குச் சென்று ஆசிரியருடன் தொடர்பு கொண்டு பிள்ளைகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளிடையே உயர்ந்த சிந்தனைகளையும், நல்ல எண்ணங்களையும், வளர்க்க வேண்டும். பெற்ருேர்களின் பங்கு இதில் மிகவும் முக்கியமானது.

கௌரி இரத்தினசபாபதி

அடுத்து, பாலர் பாடசாலையில் ஆசிரியர்களின் பங்கும் முக்கிய இடம் வகிக்கின்றது. பாலர்களின் மனம் மிகவும் மென்மையானது. எனவே அவர்களது தொந்தரவுகளைப் பொருட்படுத்தாது அவர்களது மனம் புண்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டும். பாடசாலைக்கு வர வேண்டிய ஆர்வத்தை அவர்களுக்கு ஏற்படுத்தவேண்டும். பாலர்களது மனம் ஒரு கட்டுப்பாடற்றதாகவே இருக்கும். அவர்களுக்கு நன்மை, தீமை எதுவுமே தெரியாத பருவம் அது. எனவே சிறுவயதிலேயே அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். அவர்களுடைய மனதில் ஆசிரியர்கள் நல்ல சிந்தனையையும் உயர்ந்த எண்ணங்களையும் ஏற்படுத்த வேண்டும். நல்ல பழக்க வழக்கங்களையும் இளமையிலேயே புகட்ட வேண்டும்.

அவர்களைப் படிப்பிக்கும் முறையையும் ஆசிரியர் நன்கு தெரிந்துவைத்திருத்தல் வேண்டும். பாலர்களின் மனத்தை பாதிக்காத வகையிலும், கல்வியில் வெறுப்பு ஏற்படாத வகையிலும் அவர்களுக்குக் கல்வியைப் புகட்ட வேண்டும். பாலர்களுக்குக் கவர்ச்சியான பொருள்களிலேயே ஆர்வம் அதிகம் எனவே படிப்பிக்கும் போது கவர்ச்சியான பொருள்களை உபயோகிக்க வேண்டும். படங்களைக்காட்டி ஒவ்வொரு விடயத்தையும் மனதிற்பதிய வைக்க வேண்டும். நல்ல பயன் தரும் கதைகளைக் கூற வேண்டும். அவர்களுடைய [illegible] ஆசிரியர்கள் [illegible] வயதைப் பொருட்படுத்தாமல், தாமும் ஒரு பாலர் போலவே அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்களின் உற்சாகத்திலேயே மாணவர்களின் உயர்வு தங்கியுள்ளது. ஒவ்வொரு மாணவரும் என்னதுறையில் ஆர்வம் செலுத்துகின்ருர்கள் என்பதைக்கவனத்திற் கொள்ள வேண்டும். அதன்படி அத்துறையில் அவர்களைப் பயிற்ற வேண்டும்.

பாலர்கள் தாமாகவே முன்னின்று எதையும் செய்யும் ஆற்றலையும் வளர்க்க வேண்டும் விளையாட்டு அவர்களுக்கு அவசியமான ஒரு பாடமாகும். விளையாட்டின் மூலம் மற்றவர்களுடன் கூடிப்பழகும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அத்தோடு மனதில் துணிவு ஏற்படுகிறது. உற்சாகம் பிறக்கிறது. பாடசாலைக்கு வரவேண்டும் என்கிற ஆர்வம் ஏற்படுகிறது. எனவே விளையாட்டு அவசியமான தொன்ருகும்.

இசை, நடனம் என்பற்றிலும் பாலர்களுக்கு இன்பம் அதிகம் எனவே அவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து இசை, நடனம் என்பவற்றையும் பயிற்ற வேண்டும். அப்போது சிறுவயதிலேயே இசை, நடனம் என்பவற்றில் அவர்களது மனம் நாட்டமடைந்து வளர்ந்தும் அதைத் தொடர வழிவகுக்கும். இடையிடையே சிறு கலை நிகழ்ச்சிகளை நடாத்தி அதில் பங்கு பற்ற வைக்க வேண்டும் கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும் போது தன்னம்பிக்கை துணிவு, உற்சாகம் பிறக்கிறது. வெட்கம் நீங்குகிறது. மனதில் மகிழ்ச்சிஏறபடுகிறது. கெட்டித்தனமாக இருக்க வேண்டும் என்கிற மனநிலை ஏற்படுகிறது. நிகழ்ச்சிகள் பொருத்தமாக அமைய வேண்டும்.

அழகியற்கலைகளை கற்கும் போது அவர்களுடைய சிந்தனை வளர்ச்சி பெறுகிறது. சித்திரங்களை வரையும் போதும் அதற்கு வர்ணம் தீட்டும் போதும் மகிழ்ச்சியுடன் காணப்படும் சிறுவர்களுக்குத் தாமும் புதியவற்றை ஆக்க வேண்டும் என்கின்ற ஆர்வம் பிறக்கிறது.

# இயேசுவின் காணிக்கைத் திருவிழா

சுவாமி ஜீவாபோல்

அன்னை மரியாளும் சூசையும் தமது தலைப்பிள்ளை இயேசுவை முதல் முறையாக ஆலயத்திற்குக் கொண்டு செல்கிருர்கள். இஸ்ராயேல் மக்களுக்குப் பிறக்கும் தலைப் பிள்ளையைத் தமக்கு நேர்ச்சை செய்ய வேண்டுமென ஆண்டவர் அளித்த கட்டளையைப் பூர்த்தி செய்யத் தம் மகனை அர்ச்சனையாக்குகிருர்கள். பிள்ளைபெற்றவள் புரிய வேண்டிய சுத்த சடங்குகளையும் நிறைவு செய்யத் தம் ஏழ்மையில் சேர்த்த புருக்குஞ்சுகளையும் காணிக்கை செலுத்துகிருர்கள். காணிக்கைகளும் அர்ச்சனைகளும் ஆலயத்தில் நிறைவேற்றப்பட்ட பாரம்பரிய சடங்குகளாகும். ஆயினும் அவ்வேளை அர்ச்சனை செய்ய ஆண்டவன் சந்நிதானத்திலிருந்த சிமியோன் என்ற குரு திருவாய் மலர்ந்தருளிய வார்த்தைகளே மரபிற்குப் பொருள் வழங்கின.

''மக்கள் அனைவரும் காண நீர் ஆயத்தம் செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. இதுவே புறவினத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி'' - லூக்.2:30

ஆண்டவர் வருவார் எமக்கு விடுதலை தருவார் எனப்பல்லாண்டு காலமாகக் காத்திருந்தார்கள் மக்கள். அவ்வாறு வழிமீது விழிவைத்துக் காத்திருந்த சிமியோன் விடுதலையின் விண்மீனை இனம் கண்டு கொண்டார் போலும். பாலனைப் பார்த்து இதுவே அனைத்து மக்களுக்கும் இருள கற்றும் தெய்வ ஒளியெனப் போற்றினுர். தரிசனம் கொடுக்க வந்த இறைமகனுக்காகக் காத்திருந்த உள்ளங்கள் அனைத்தும் கண்டு கொள்ளவில்லை. கண்டவர் சிலரும் அவரை ஏற்க மறுத்து எதிர்த்தார்கள். நோன்பிருந்து, செபம் செய்து பிறரன்புப்பணி செய்து எதிர்பார்த்திருந்த அன்னுள் தனது எண்பத்து நான்கு வயதிலும் கூட விடுதலையின் அறிகுறியைப் புரிந்து கொண்டாள். வயது முதிர்ந்தாலும் உள்ளம் இளைத்துக் களைக்காது துடிப்புடன் திறந்து இருக்க வேண்டும்.


பாலனைச் சுமந்து வந்த மரியாளும் ஆலயத்தில் நடந்து கொண்டிருந்த நிகழ்வுகளின் போது தனது 'கடமை' முடிந்தது என்று கைகட்டித் தூங்கியிருக்கவில்லை. அவள் விழிப்புடன் வியந்தது மட்டுமல்ல சிமியோனின் வார்த்தைகளையும் நடந்த நிகழ்வுகளையும் தன்னுள்ளே இருத்தி அதன் பொருள் பெறச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

இன்றும் ஆண்டவர் சந்நிதானத்திற்கு அர்ச்சனை செய்யப் புறப்படுகின்ருேம். மெழுகுவர்த்திகளையும், அப்பங்களையும், படைப்புப் பொருள்களையும் காணிக்கை செய்யக் கொண்டு செல்கிருேம். ஆனுல் படைத்த இறைவன் எம் உள்ளத்தையல்லவா கேட்டு நிற்கிருர்.

தெய்வ தரிசனம் காணக் கோவில்களையும் திருப்பதிகளையும் நாடிஒடுகின்ருேம். ஆனுல் பாதையில் எதிர்கொள்ளும் அநாதைகள், அகதிகள் அயலவரில் ஆண்டவனைக் காண மறுக்கிருேம்; மறந்து போகின்ருேம். அதனுல் ஆயிரம் பூஜைகளிலும் ஆண்டவரைத் தரிசிக்க முடிவதில்லை.

மோயீசன் காலத்திலிருந்து இன்றுவரை ஆண்டவர் அருளும் சட்டங்களையும் பரம்பரை பரம்பரையாக வழிவரும் மரபுகளையும் அனுசரிப்பதில் உளத்திருப்தி காண விரும்பும் நாம் அவற்றினூடாக மீட்பின் ஒளியை எம் கண்கள் காணவும், ஏனையோருக்கு அவ்வொளியைக் காட்டவும் வேண்டும். அவர் கொணர்ந்த மீட்பின் செய்தியை எம் காதுகள் கேட்டுணர, அதை எடுத்துக் கூற, ஆண்டவனுக்கே எம் உள்ளங்களைப் பாதகாணிக்கை செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[5]

பூஞ்சோலை உதவிஅரசாங்க அதிபர் பணிமனைதான் அரசகேசரியின் அலுவலகமாகும். தனது மாதாந்த வேலைத் திட்டத்தை மாதம் முதலாம்திகதி உதவி அரசாங்க அதிபரிடம் கொடுத்து ஒப்புதல் பெற வேண்டும்.

திங்கள் புதன் ஆகிய இரு கிழமைகளிலும் அவன்வேலைத் திட்டத்தின் பிரகாரம் அலுவலகத்தில் இருக்க வேண்டும். மற்றைய மூன்று நாட்களும் வெளிக்கள அலுவல்களுக்காக அவன்பயன்படுத்தலாம்.

அன்று திங்கட்கிழமை.

ஏஜிஏ தனக்கு வந்திருந்த கடிதங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். முழங்கேணிப் பெண்கள் திட்ட அங்கத்தவர்கள் எட்டுப்பேர் பூமணியின் தலைமையில் கையொப்பமிட்டுப் பெட்டிசம் ஒன்றை அனுப்பியிருந்தனர். திட்டத்தில் மிருகங்களின் தொல்லை, தண்ணீர்த் தட்டுப்பாடு. பம்ப் ஒப்பறேற்றரின் அலட்சியம் எல்லாம் விபரமாக அதில் எழுதியிருந்தனர்.

அரசகேசரியை அழைத்து ஏஜிஏ இவைபற்றி விசாரித்தார்.

"திட்டம் இப்பொழுது தானே தொடங்கினேம். எங்கையும் இப்படியான தொல்லைகள் இருக்கத்தான் செய்யும். பம்ப் ஒப்பறேற்றர் இரண்டு கிழமையாய்ச் சுகமில்லாமல் லீவு போட்டிருக்கிறுர். இந்தப் பெட்டையள் எழுதியிருக்கிறமாதிரி அப்பிடி ஒன்றும் பிழையாக நடக்கவில்லை. இனி அவையளுக்குளை ஒற்றுமை இல்லைப் பாருங்கோ. சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் சண்டையும் சச்சரவும்தான். ஐஞ்சாறு பெட்டையள் இன்னும் காணியிலை குடியிருக்க வரவில்லை. நான்ஒருநல்ல றிப்போட் உங்களுக்குத் தாறன். நீங்கள் அவையின்ரை காணியளைக் கான்சல் செய்ய சிபார்சு செய்து தாங்கோ. மிச்சம் நான் பார்க்கிறன்". —மூச்சு விடாமல கூறினன் அரசகேசரி.

"அதுசரி, அப்பநான் உம்மோடை வாறகிழமை முழங்கேணிக்கு வாறன். இரண்டு பேரும் இன்ஸ்பெக்ற் பண்ணி ஒரு முடிவு எடுப்பம்".

"வாறகிழமைவேண்டாம்... நான் கொழும்புக்கு ஒரு அலுவலாய்ப் போகவேணும். அதுக்கு அடுத்தகிழமை போவம்"

அப்பசரி. ஜீப்பும் இல்லைத் தானே. இரண்டு கிழமைக்குப் பிறகு போவம்"

விசாரணை முடிவடைந்தது. அரசகேசரியின் மூளை வெகு வேகமாக இயங்கத் தொடங்கியது.

பூஞ்சோலையை அடுத்து, அயல் குறிச்சிகளான செம்பணர்குளம், பல்லவன் பெட்டை, வேரவில்பேட்டை. இரணைக்சேணி, கவுதாரிக் கேணி ஆகிய இடங்களுக்குத் தன் மோட்டார் சைக்கிளில சூருவளிப் பிரயாணங்களை மேற்கொண்டான் அவன். அந்தக் குறிச்சிகளில் உள்ள ஜி. சி. ஈ. 'ஓ' லெவல், 'ஏ' லெவல் கல்விச்சான்றிதழ் பெற்றும் வேலையற்று வீட்டில் இருந்து பொழுதும்பாக்கிக் கொண்டிருந்த இளைஞர்கள், யுவதிகளை தனித்தனியாகவும் குழுக்களாகவும் சந்தித்தான்.

"எங்கடை ஊர் இப்படித் தான் இருக்கவேண்டும் என்று சாபக்கேடா என்ன?

"படித்தும் உங்கள் தகுதிக்கேற்ற உத்தியோகம் கிடைக்காமல் நீங்கள் வாழ்நாள்முழுவதும் இப்படியே இருக்க வேண்டுமா?

# குறுநாவல்

"நாங்கள் இப்படி வாய்மூடி மௌனிகளாய் இருக்கிறபடியால்தானே பரமலிங்கம் மாதிரிப் படியாதவர்களெல்லாம் இன்று பெரிய மனிதர்களாகி விட்டனர்".

"மற்ற இடத்து ஆட்கள் உத்தியோகம் என்று சொல்லி வந்து எங்களை சுரண்டிக் கொண்டுபோக நாங்கள் இடமளிக்கலாமா?"

அரசகேசரியின் உணர்ச்சிமயமான வார்த்தைகள் அந்தக் கிராமத்து இளம் நெஞ்சங்களைச் சிந்திக்கவைத்தது.

"அரசகேசரி சொல்வது உண்மைதானே?"

"எத்தனை நாளைக்கு மற்றவன் எங்களைச் சுரண்ட விடுவது?" இப்படிக் கேள்விகளை தம்முள்ளே கேட்டுக் கொண்டனர் இளைஞர்கள்.

"உத்தியோகம் உடன் தேவை" — படித்த இளைஞர்களும் யுவதிகளும் தங்களுக்குரிய குரலை ஓங்கச் செய்யச் சித்தமாயினர்.

"பூஞ்சோலை பூஞ்சோலை மக்களுக்கே?" — இப்படியும் சிந்தித்தனர்.

இரவு இரவாய்க் கூட்டங்கள் கூடினர்.

தீர்க்கமான முடிவுகளை அதுவும் உடனடியாகக் காணத் துடிதுடித்தனர்.

அரசகேரியைப் பின்பற்றுவது, அவன் வழி நடப்பது என்று யாவரும் ஒரு முகமாய் முடிவு எடுத்தனர்.

மந்திரி தான் பூஞ்சோலைக்கு வரும் திகதியை அரசகேசரிக்கு அறிவித்து சகல ஏற்பாடுகளும் செய்யச் சொல்லிக் கடிதம் அனுப்பி இருந்தார். மிக இரகசியமாகக் காரியங்கள் ஒப்பேறின. அரசகேசரி இரவு பகலாய் யந்திரமெனச் செயல்பட்டான். ஆனல் பூஞ்சோலையில் எந்த ஒரு இரகசியத்தையும் காப்பாற்றும் திறமை ஒருவருக்கும் இல்லை.

பரமலிங்கத்துக்கு விஷயம் எட்டியது.

அவனுக்குத் தேகம் எல்லாம் பதறியது. 'பூஞ்சோலையில் இதுவரை காலம் அவனுக்குத் தெரியாமல் எந்த ஒரு அரசியற்கூட்டமோ கருத்தரங்கோ நடந்தது இல்லை! இதென்ன புதுக்குழப்பம்' என நினைத்துத் தன்னுள்ளே கிடந்து மனம் புழுங்கினன் பரமலிங்கம். முழுவிபரமும் அறிய முடியாமல் தவித்தான்.

"எட சனியன் இந்த நேரம் பார்த்து எம்பியும் வெளிநாட்டுக்குப் போய்விட்டாரே ..." — அரசகேசரியை நினைக்க நினைக்க அவனுக்கு ஆத்திரம் எல்லை மீறியது. இருவாரங்களாக, வழக்கமாகப் பூஞ்சோலைக் கடைத்தெருவில் அவனைக்கண்டால் 'அண்ணை' என விழித்துச்சற்று நேரம் கதைத்து விட்டுப் போகும் சில இளைஞர்கள் தன்னைக் கண்டதும் காணுததும்மாதிரிப் போவதைக் கண்கூடாகக் கண்டான் அவன்.

இப்பொழுது அவனுக்கு எல்லாம் தெளிவாகப் புலப்பட்டது.

"பார்ப்பம்... தம்பி வாலை ஆட்டுறுர் ... எம்பி வரட்டும் ... ?" — தனக்குள் கறுவிக் கொண்டான்.

அன்று பூஞ்சோலை இனிதாக நித்திரையிலிருந்து எழுந்தது.

இரவோடுஇரவாகக் கடைத்தெரு நீலமும் சிவப்பும் சேர்ந்த வர்ணக் கடுதாசிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. 'மக்கள் மந்திரியே வருக வருக! வாசகங்கள் பொறித்த நீல வர்ணச் சுவரொட்டிகள்' வெய்யிலின் ஒளியில் பளபளத்தன.

கடைத்தெருவுக்கு வந்த பூஞ்சோலை வாசிகள் முகத்தில் வியப்புடன் நடப்பதை காணத் தயாராகினர்.

ஜீப்பும், வர்ணக் கார்களும் அரண்வகுக்க படகுபோன்ற காரில் மந்திரி பூஞ்சோலைக்கு வந்து சேர்ந்தார்.

அரசகேசரி முகமெல்லாம் பல்லாக நின்று சந்தனப் பொட்டு இட்டு, பன்னீர் தெளித்து முதல் மாலையை அவருடைய கழுத்தில போட்டான்.

அரசகேசரி ஒழுங்கு செய்திருந்தபடி ஒவ்வொரு குறிச்சியில் இருந்தும் இரண்டு மாலைகள் வீதம் மந்திரிக்கு அணிவிக்கப்பட்டன. வெளியே சந்தையின் பின்புறமாகப் பத்துக்கட்டுச் சீனவெடிகளை அரசகேசரியின் தம்பி மகாலிங்கம் தலைமையில் உள்ள இளவட்டங்கள் கொளுத்தித் தீர்த்தன.

மந்திரியின் முகம் மந்தஹாசமாய் இருந்தது. "நல்ல ஏற்பாடு வெல்டன்..." — அரசகேசரியைப் பார்த்துச் சிரித்தபடியே கூறினர் மந்திரி.

பூஞ்சோலைக் கிராம சபை நூல் நிலைய மண்டபத்தை முன்னரே அரசகேசரி ஒழுங்குபடுத்தியிருந்தான்.

கூட்டம் நடைபெற்றது.

"பூஞ்சோலைப் பகுதி சரித்திரகாலம் தொட்டுச் சகல அதிகாரிகளாலும் வேணுமென்றே புறக்கணிக்கப்பட்டுவிட்டது. இனியும் இந்தக் கதைதொடரக்கூடாது. இந்த நாட்டின் முதுகெலும்பு இளைஞர்களும் யுவதிகளும் தான்! என்மனம் சதா இங்குள்ள ஏழை மக்களுக்காக என்ன செய்யலாம், அவர்களின் வாழ்வை எப்படி வளம்படுத்தலாம் என்றுதான் நினைக்கிறது. பெரிய நீர்ப்பாசனத் திட்டமும், சாலைகளை அகலமாக்கி டவ்ஸ் போக்குவரத்து வசதிகளை நவீனமாக்கல், உடனடியாக பூஞ்சோலைக்கு மின் வசதி ஏற்படுத்துதல், படித்த சகலருக்கும் உத்தியோகம் வழங்கல் போன்ற பல அருமையான திட்டங்களை நான் என் மனதில் தீட்டியுள்ளேன். அவற்றைச் செயலாக்க நீங்கள் நேசக்கரம் நீட்டவேணும். உங்கள் நலனுக்காகப் பாடுபடும் அரசகேசரியை யாவரும் பின்பற்றுங்கள்" என்று மந்திரி தனது நீண்டசொற்பொழிவை ஆற்றினர்.

பல்வேறு குறிச்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் குறைகளை மகஜர் மூலம் மந்திரியிடம் கையளித்தனர். மந்திரி இரு கரங்களையும் நீட்டி வெகு பவ்வியமாக அவற்றை வாங்கித் தந்து அந்தரங்கச் செயலாளரிடம் கொடுக்க, அவர் அவற்றைப் பின்புறம் நின்ற வேறொரு அதிகாரியிடம் கொடுத்தார். அந்த அதிகாரி அவற்றைத் தன்கையில் வைத்திருந்த பெரிய தோல் பையினுள் அடக்கிக் கொண்டார். பூஞ்சோலையில் பனைவளம் அதிகம் என்பதைக் குறிக்கும் நோக்கமாகப் பனைமரத்தில் நன்ருகச் சீவி வானிஷ் பூசப்பட்ட கைப்பிரம்பு ஒன்றையும் குருத்து ஓலையால் பின்னப்பட்டு வர்ண வேலைப்பாடு நிறைந்த தட்டு ஒன்றையும் யுவதி ஒருத்தி மந்திரிக்கு அன்பளிப்பாக வழங்கினுள்.

தேநீரும் சிற்றுண்டியும் வழங்கப்பட்டன.

"ஏ ஜி ஏ இங்கு வரவில்லையா ... யார் இங்கு ஏ ஜி ஏ ..."? — மந்திரி அரசகேசரியிடம் விசாரித்தார்.

"நான் இரண்டு முறை சொல்லியும், அவர் இன்று தனக்கு ஒரு வழக்கு இருக்கிறது என்று சொல்லி போட்டுப் போய் விட்டார் சேர்' அவர் ஆள் சரியில்லை ... மாற்றி விட்டால் நல்லது." — இரகசியமாக மந்திரியிடம் அரசகேசரி கூறினன்.

"நீர் சொல்லியும் வரவில்லையா..!" — நாடியை தன் கைவிரல்களினுல் தடவினுர் மந்திரி.

"எப்ப பூஞ்சோலைக்கு மாற்றலாகி வந்தவர்"

"அவர்போன வருஷம்தான் இங்கு வந்தார். அதுவும் எங்கடை எம்பிதான் தனக்குத் தெரிந்தவர் என்று மாற்றம் எடுத்துக் கொடுத்தவர்".

"அப்ப சரி, அதை நான் பார்த்துக் கொள்ளுகிறன்"

இதுநடந்து மூன்று மாதங்களாகி விட்டன.

முழங்கேணித் திட்டத்தில் ஆரம்பததில இருந்த வேகம் படிப்படியாகக்குறைய ஆரம்பித்தது. மோட்டர் அடிக்கடி பழுதாகித் தொல்லை கொடுத்தது. சிறுசிறுபிழைகள் வரும்போது திட்ட அங்கத்தவர்கள் தங்கள் பணத்தை கூட்டாகப்போட்டு செலவழித்துத் திருத்தினுர்கள். ஆனல் போகப்போக இதுவே வழக்கமாகி விட்டதை அவர்களால் பொறுக்கமுடியவில்லை. ஒவ்

(10ம் பக்கம் பார்க்க)

## 1000 மீட்டர் 'ஜோக்ஸ்'

வேலு: கோட்டைக்குப் பக்கத்தில் குடியிருக்கப் பயமாக இருக்கிறது.

பாலு: பயந்தால் உன் தந்தை வீட்டுக்குப் போ.

வேலு: அது நாவற்குழியில் அல்லவா இருக்கிறது?

★

ஒருவர்: என்னண்ணே, மேல பார்க்கிறீர்கள் ஷெக்கட் பார்கிறீர்களா?

மற்றவர்; இல்லைத்தம்பி, பத்தியத்திற்கு இரண்டு முருங்கை பிஞ்சு பார்க்கிறேன்.

★

ஒருவர்: அண்ணே, 'செல்' என்கிருர்களே அது என்ன?

மற்றவர்: 100 மீட்டருக்குள் 'செல்' என்று ஒரு திக்கை நோக்கி ஏவிவிட்டால் அந்தத் திக்கை நோக்கி அது செல்வதால் தான் 'செல்' என்கிருர்கள். இலக்கை அடைந்ததும் அது வெடித்துச் சிதறும்.

★

நண்பர்; ஏனப்பா வேலையை ராஜினுமா செய்தாய்?

பாதுகாப்பு ஊழியர்: அந்த ஹோட்டல் பாதுகாப்பு வலயத்திற்குள் வந்து விட்டது, அதுதான்.

★

டாக்டர்: கழுத்தில் என்ன வீங்கி இருக்கிறது?

நோயாளி: மூன்று நாட்களாக "ஷெக்கட்" வருகிறதா என்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன், கழுத்து சுளுக்கி விட்டது.

★

ராமு: சலியாண எழுத்து முடிந்தபின் திருமணம் குழம்பி விட்டதே, ஏன்?

சோமு; சீதனவீடு 1000 மீட்டர் வலயத்திற்குள் வந்து விட்டதாம்.

★

ஒருவர்: ஒருகிழமையாக குளிப்பு முழுக்கு இல்லை.

மற்றவர்: ஏன் ஏதாவது சுகவீனமா?

ஒருவர்: வீட்டில் கிணறு மட்டும் பாதுகாப்பு வலயத்திற்குள் வந்து விட்டது.

★

அதிபர்: இம்முறை விளையாட்டுப் போட்டியில் புது நிகழ்ச்சி சேர்த்து இருக்கிறேன்.

மாணவன்: அது என்ன, சார்?

அதிபர்: 1000 மீட்டர் ஓட்டம்.

★

**பத்திரிகை விளம்பரங்கள்**

[1] 1000 மீட்டர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியில் முழுவீடு அல்லது பகுதி வீடு தேவை. தேவையான முற்பணம் தரப்படும்.

[2] யாழ். நகரில் பாதுகாப்பு வலயத்திற்குள் 7 அறைகளை கொண்ட நவீன வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு தளபாடங்கள், தொலைபேசி பாவிக்கலாம் முற்பணம் தேவை இலலை.

★

டாக்டர்: ஒருகிழமை வாட்டில் இருந்து விட்டுப் போகலாமே.

நோயாளி: சும்மா தடிமல் தானே வாட்டில் நிற்க வேண்டுமா?

டாக்டர்: வாட்டில் கட்டில் எல்லாம் காலியாக இருக்கிறது. எங்களுக்கும் துணையாக இருக்கும்.

— கா. யோ. கிரிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமாற்றத்தின் இராசிவாரியான பொதுப்பலன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

குரோதன வருஷம் தை மாதம் 10-ம் திகதி [23-1-86] அன்று **வியாழக்கிழமை** பின் இ வு கும்ப இராசிக்குள் பிர வேசித்துள்ள குரு பகவானின் பொதுப்பலன்.

## மிதுனம்

மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை. புனர்பூசத்து முன் முக்கால் ஆகிய நட்சத் திரங்களைக்கொண்ட மிதுன இராசியில் ஜனனமானவர்க ளுக்கு 7மிடம், 10மிடத்து 9மிடமாகிய கும்ப ராசிக்கு அதிபதியாகிய குருபகவான் பிரவேசிப்பதால் இக் காலங்க ளில் புண்ணிய காரியங்களில் ஈடுபாடும் பெரியோர்களின் ஆசிக்கும் இடமுண்டாம்.

இக் காலங்களில் பிதா வழிச்சுகக் குறைவிற்கும்,ஸ்தல யாத்திரைக்கும் இடமிருப்ப தால் தெய்வ வழிபாடு சாலச் சிறந்ததாகும்.

1985-11-3ன் மேல் சனி பக வான் 6ம் இடமாகிய விருச்சிக இராசிக்குள் சஞ்சரித்திருப்ப தால் தேகசுகக்குறைவும், மன சஞ்சலங்களும் ஏற்பட இட முண்டு.

பொதுவாக இக்காலம் எக் காரியம் செய்வதாயினும் சிந் தனைக்கு இணங்கிய முடி வெடுத்து நடந்து கொள்வது விரும்பத்தக்கது. தொழிற் துறைகளிலும் மறைமுக எதிர் ப்புகள் உருவாகும். தன் தொழில்புரிவோர்கள்தொழில் விடயங்களில் அவதானம் வேண்டும். நஷ்டங்களுக்கும் இடமுண்டு. இயந்திரங்களில் பணியாற்றுவோர் முன்னெச்ச ரிக்கையுடன் நடந்து கொள் வது நன்று. வெளியிடத்துத் தொடர்புகளும் பெருக இட முண்டு. இதன்மூலம் திடீர் பிரயாணங்களும் ஏற்படலாம். நீண்டகால உறவில் முறிவுக ளும் ஏற்படும். கொடுக்கல் வாங்கல்களினல் பிணக்குகளுக் கும் இடமுண்டு. பூமித் தக ராறுகளும் ஏற்படலாம். குடும் பஸ்தர்களுக்கு இக்காலம் அள வுக்கு மீறிய நட்புகளால் ஆபத்துக்களும் நேரிடலாம். எனவே இக் காலங்களில் எம் முறையோரை கொண்டவர்க ளாறுலும் நம்பி நடக்கக் கூடாது. குறுக்குவழித்தலையீடு களும் தவிர்க்கப்படல் வேண் டும்.

மாணவ, மாணவிகளுக்கு கல்வியில் மந்தநிலைக்கும் சில ருக்கு உடல்நலக்குறைவிற்கும் இடமுண்டு. காதல் ஜோடிகள் மத்தியில் கலகத்திற்கும் இட மேற்படலாம்.

இவ்வாறு சனி பகவான் 2½ வருட காலத்திற்குப் பலன் செய்யும் காலத்தில் வியாழ பகவானின்மாற்றம் முன்னேற் றத்தை அளிக்கக் கூடியதாக இருக்கும்.

எனவே இக்காலங்களில் குரு. சனி வாரங்களில் உபவாசம் இருந்து இஷ்ட தெய்வங்களைப் பூஜித்துவர நன்மையுண்டா கும்.

## கடகம்

புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம் ஆகிய நட் சத்திரங்களைக் கொண்ட கர்க் கடக இராசியில் ஜனனமான வர்களுக்கு ஆறுமிடம், ஒன்ப தாமிடத்துக்கு அதிபதியாகிய வியாழ பகவான் எட்டாமிட மாகிய கும்ப இராசிக்குள் பிரவேசிப்பதால் இக் காலம் தொழில், பொருள் இவைக ளிற் கவனம் வேண்டும். குறிப் பாக நம்பிக்கை மோசடிகளுக் கும், அவப்பெயர் கேட்பதற் கும் இடமுண்டு. உடல் நலக் குறைவிற்குமுரிய இடமிருப்ப தால் சிறுவருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கப்ப டல் வேண்டும். சிறு விபத்துக் துக்களும் ஏற்பட இருப்பதால் அவதானம் வேண்டும்.

மேலும் பணநெருக்கடிகளுக் குரிய காலமாதலால் மேல் ஒப்பமிடல், நம்பி நடத்தல், கொடுக்கல் வாங்கல் ஆகியன வற்றில் விழிப்புடன்செயலாற் றவும்.

1985-11-3ன் மேல் சனி பக வான் ஐந்தாமிடமாகிய விருச் சிக இராசிக்குள் சஞ்சரித்திருப் பதால் இக்காலங்களில் நெஞ் சுக்கு நஞ்சாகும் நிகழ்ச்சிக ளும் இடம்பெறும். அரசாங் கத்துறைகளில் கடமை புரி வோர்கள் ஏமாற்றம் அடைய நேரிடும். நன்மைகள் செய் வோரே தீமைகளையும் செய் வர். சொந்தத் தொழில் புரி வோர் பெரும் இழப்புக்கு ஆளாக நேரலாம். புத்திரர்க ளாலும் மனக்கவலை அதிகரிக் கும். இனசனங்களின் மத்தி யில் பூசல்களுக்கும் இட முண்டு. பொதுவாக இக்கா லங்களில் எண்ணத்திற்கு மாறுன சம்பவங்களே இடம் பெறும். வாகனத் தொழிலில் ஈடுபடுவோர்களுக்கு வரவில் மந்தமும், பணநிலையில் முடக் கங்களும் ஏற்பட இடமுண்டு. கூட்டுத்தொழில் புரிவோர்க ளுக்கு மனக் கசப்புக்களுக்கும் இடமுண்டாகும். மாணவ, மாணவிகளுக்கு கல்வி நிலையில் விடாமுயற்சி விரும்பத்தக்கது. மணமாகாதவர்களுக்கு மனச் சஞ்சலங்களுக்கும் இடமுண்டு. குடும்பஸ்தர்களுக்கும்திருப்திக் குறைவு தென்படும். எனவே இவ்வாறுன காலத்தில் வியாழ பகவானின் பார்வை யும் திருப்தியற்றதாக இருப்ப தால் குரு, சனி வாரங்களில் உபவாசம் இருந்து கிரக வழி பாடு தவருது செய்து இஷ்ட தெய்வங்களைப் பூஜித்து வரல் நன்று.

## சிம்மம்

மகம், பூரம், உத்தரத்து முதற்கால் ஆகிய நக்ஷத்திரங் களைக் கொண்ட சிங்க இராசி யில் ஜனன மானவர்களுக்கு 5 இடம் 8 இடத்துக்கு அதிபதியாகிய வியாழபகவான் 7 இடமாகிய கும்பத்தில் சஞ் சரித்து இருப்பதால் குறிக் கோளில் வெற்றியும் குடும்ப வழிச் சிறப்பும் உண்டாம். இக்காலம் தேகசுகமும், திடீர் பொருள்வரவும், காரியசித் தியும் இடமுண்டு. மேலும் தொழில் சமவிருத்தியும், பூமி யால் சுகமும் உண்டாம். 1985 - 11 - 3ன் மேல் சனி பக வான் நாலாமிடமாகிய விருச் சிக இராசிக்குள் பிரவேசித் திருப்பதால் இக்காலம் தன் தொழில் புரிவோர்களுக்கு பொருள் உதவியும் கிடைக்க வாய்ப்புண்டாம். வணிகர் களுக்குச் சமபலனுக்கும் இட முண்டு. தாய்வழிச் சுகக்குறை வும் அவ்வழியால் நன்மையும் உண்டாம். மாணவ மாணவி களுக்கு கல்வி விடயங்களில் பின் தங்க நேரிடும். எனவே இக்காலங்களில் இறைவழி பாடும் விடாமுயற்சியும் இருப் பின் கல்வியில் முன்னேற்றம் உண்டு. குடும்பவாழ்க்கையில் இருப்போர்களுக்கு தானிய விருத்தியுடன் தனவரவிற்கும் இடமுண்டாம். மணமாகாத வர்களுக்கு இக்காலங்களில் மணவாழ்க்கைக்கும் இட முண்டாம். மேற்குறிப்பிட்ட படி சனிபகவானின் 2½ வருட கால பலாபலன்களில் வியாழ பகவானின் மாற்றம் சிலமாற் றங்களுடன் எதிர்பாராத வர வுக்கும் பலன் செய்யும்.

எனவே இக்காலங்களில் யாபேரும் வியாழக்கிழமைகள் சனிக்கிழமைகள் தோறும் உபவாஸம் இருந்து கிரகவழி பாடு செய்து இஷ்டதேவதை களைப் பூஜித்துவரின் நன்மை உண்டாம்.

## கன்னி

உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன் னரை ஆகிய நக்ஷத்திரங் களைக் கொண்ட கன்னி இராசி யில் ஜனனமானவர்களுக்கு நாலாதிபன், ஏழாதிபனுகிய குருபகவான் ஆறுமிடமாகிய கும்பராசிக்குள் பிரவேசிப்ப தால் இக்காலம் எதிர்பாராத வரவுகளுக்கும் இடம் உண் டாம். வித்தையாலும் விப ரீதம் உண்டாகலாம், இக் காலம் பெண்கள் அவதானம் வேண்டும். பிரயாணங்களுக் கும் இடம் உண்டாம். 1985 - 11 - 03ன் மேல் சனி பகவான் மூன்றுமிடமாகிய விருச்சிக இராசிக்குள் சஞ்சரித் திருப்பதால் முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை களுக்கும் இடமுண்டாம். தொழிற்துறையிலும் மந்தநிலை காணப்படும்.

குறிப்பாக கடந்த காலங் களைப் போன்று இல்லாமல் சில நன்மைகளுக்கும் இடம் உண்டாம். எனினும் முயற் சிக்குத்தக்க உயர்ச்சி காண் பது அரிது. புத்திரவழியா லும் மனச் சஞ்சலங்களுக்கு இடமேற்படும். எண்ணிய கரு மங்கள்யாவும் ஆமைவேகத் தில் நடைபெறும். சகோதர வழியாலும் சச்சரவுகள் அதி கரிக்கும். தன்தொழில் புரி வோர்களுக்கு தடுமாற்றம் ஏற்படும் காலமா கும். குடும்பத்திலும் வசதி குறைவான நிலைமை தென் படும். அன்னியநபர் ஒருவரால் ஏமாற்றம் அடைய நேரும். பொதுவாக இக்காலங்களில் எக்காரியத்திலும் விழிப்புடன் நடந்து கொள்வது நன்று. மாணவமாணவிகளுக்கும் இக் காலத்திலும் எதிர்பார்க்கும் விடயங்களில்தடைகளுக்குஇட முண்டு விவாகமாகாதவர் களுக்கு விவாக சுகமும் உண்டு; கூடஇருந்தவர்களே குழித்தோண்டப்பார்ப்பார் கள். கவனம் வேண்டும். மேற்குறிப்பிட்ட பலன்களில் சனிபகவானின் பார்வை 2½ வருடத்திற்கு நடைபெறும் காலத்தில் வியாழபகவானின் மாற்றம் நன்மையளிக்கக் கூடியதாகவே இருக்கும்.

எனவே இக்காலங்களில் குரு, சனி வாரங்களில் உப வாசம் இருந்து கிரக வழிபாடு செய்து இஷ்ட தேவதைகளைப் பூஜித்துவர நன்மை உண்டு.

## துலாம்

சித்திரையிற் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக் கால் ஆகிய நட்சத்திரங்களைக் கொண்ட துலா இராசியில் ஜனனமானவர்களுக்கு மூன்று மிடம், ஆறுமிடத்துக்கு அதி பதியாகிய வியாழ பகவான் 5மிடமாகிய கும்ப இராசிக் குள் பிரவேசிப்பதால் தொழில் நலன், தொல்லைகள் நிவர்த்தி பொன், பொருள் பூமி, வீடு, வாசல் சிறப்பும் அன்னிய பிரபுக்கள் உதவியும், ஆள டிமை விருத்திக்கும் இட முண்டு. புத்திரவழியாலும் சிறப்புக்கு இடமுண்டு. இக் காலங்களில் இறைவழிபாட்டு டன் இல்லறச் சிறப்புமுண்டு. 1985-11-3ன் மேல் சனி பக வான் இரண்டாமிடமாகிய விருச்சிக இராசிக்குள் சஞ்சரித் திருப்பதால் இக்காலம் ஏழ ரைச் சனி கடைக்கூறு நடை பெறுகிறது. எனவே தொழில் சமவிருத்தியும் தொழிற்துறை களால் எதிர்பாராத வரவுக ளுக்கும் இடமுண்டு. வணிகர் களுக்கு வியாபார வருத்தியும் உண்டு. வெளியூர் புதினங்க ளுக்கும் இனசனக் கொண்டா ட்டத்திற்கும் இடமுண்டு. மாணவ மாணவிகளுக்கு கல் விச் சுகம், கலைகளில ஆர்வ மும் உபாத்தியாயர் சன்மா னமும் உயர்கல்வி நாட்டமும் உண்டு விவாகமாகாதவர்க ளுக்குத் திடீர்த்திருமணத்திற் கும் இடமுண்டு. காதல்வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகளுக்கும் இடமேற் படும். வாகன சுகமும் வரவி லும் திருப்தியுண்டு. மேற்படி சனிபகவான் 2½ வருடத்திற்கு பலன் செய்யும் காலத்தில் வியாழ பகவானின் மாற்றம் நன்மையானதாக இருக்கும். எனவே இக் காலங்களில் யாபேரும் வியாழக்கிழமை, சனிக்கிழமைகள் தோறும் விரதமிருந்து கிரக வழிபாடு செய்து இஷ்டதெய்வங்களைப் பூஜித்துவரின் சகல நன்மைக ளும் உண்டாகும்.

[மிகுதி அடுத்த வாரம்]

---

திருமலை
**க.வே.ரவீந்திரன்**

### இன்று

மாதம் — தை
திகதி- 13 [1986 - 02-02]
கிழமை - ஞாயிறு
திதி - அட்டமி முன் இரவு வரை.
நக்ஷத்திரம் - சுவாதி முற்பகல் வரை

## இவ்வாரம் எப்படி?

### மேடம்

வேண்டாத நடவடிக்கை யின் மூலம் நண்பர்களைப் பகைத்துக்கொள்ள நேரிட லாம். வணிகர்களுக்கு இவ் வாரம் எதிலும் அவதானம் வேண்டும். காதலர் மத்தியில் மனத்தளர்ச்சி ஏற்படும். பொறுமைவேண்டும்,

### இடபம்

இனசனக் கொண்டாட்டங் களுக்கும் இடம் உண்டு. பெண்களுக்குக் கடமையில் அதிக கவனம்வேண்டும். வணி கர்கள் அதிக முதலீட்டைத் தவிர்க்கவும்.

### மிதுனம்

என்னதான் திறமைசாலி யாக இருந்தபோதிலும் இவ் வாரம் கோட்டைவிட நேரிட லாம். முகமன் பேசுவோரிடத் தில் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். பெண் கள் இவ்வாரம் ஒருவருடன் பகைத்துக்கொள்ள நேரிடும். கவனம்வேண்டும். காதலர்கள் மத்தியில் கசப்புத் தோன்றும்.

### கடகம்

குடும்பத்தில் இனிமை தவ ழும். உறவினர்கள் உங்களை உற்சாகப்படுத்துவர். உவகை தரும் சம்பவங்கள் இடம் பெறும், காரியசித்தியும் கிட் டும். நீண்டநாள் எதிரிகள் [illegible] அக்கம் வேண்டும்.

### சிங்கம்

பொறியியலாளர்களுக்குப் பொன்னுன வாரம். புகழும், பொருளும் மலிவதற்கான சந்தர்ப்பம் உண்டு. வந்து சேரவேண்டிய பணம் சேர்வ தில் மீண்டும் தடை ஏற்படும். பெண்கள் அவசரப் போக் கைத் தவிர்த்துக்கொள்ள வும். காதலர்களுக்கு கவர்ச் சியான வாரம். வணிகர் களுக்கு அவதானம்வேண்டும்.

### கன்னி

தேடிய இன்பம் காலடியில் கிடைக்கும். மூத்தோர் உத விக்கு இடமேற்படும்- சில ருக்குத் தெய்வவழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும். வியாபாரத்துறையில் விருத்தி யுண்டு. தாய்வழிப் பொருள் வரவிற்கும் இடமுண்டு.

### துலாம்

கடமையாற்றுமிடத்தில் புதிய நண்பர்களை தேடிக் கொள்வீர்கள். பொறியியலா ளர்களுக்குப் பொன்னுன வாரம். வேண்டிய ஒருவரிட மிருந்து வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும், பெண்க ளுக்குப் பொறுமை அவசியம். காதலர்களுக்குப் பொறுப் பான வாரம்.

### விருச்சிகம்

செலவுக்குவேண்டிய பணம் கிடைக்கும். பெண்களுக்குச் சிறப்பானஅம்சம்இடம்பெறும் வணிகர்களுக்கு எதிர்பார்த்த விடயம் வெற்றியைத்தரும். விவசாயிகளுக்கு நிலைமை சீர் பெறும்.

### தனுசு

நத்தை வேகத்தில் காரியங் கள் நகரும். மனத்தளர்ச்சி யைத்தவிர்க்கவும். வேண் தாத தொடர்பை விலக்கவும். மனத்திடம் வேண்டும். கல் வித்துறையில் ஈடுபடுவோர் ஊக்கமெடுக்கவும், சகோதர வழியால் சுகக்குறைவிற்கும் இடமுண்டு.

### மகரம்

உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முனை வார்கள். கணவன் மனைவியரி டையே பூசல்கள் உருவாகும். தற்பெருமை மூலம் தடுமாற் றம் ஏற்படும். போட்டி விவ காரங்களில் ஈடுபடாதிருக்க வும்.

### கும்பம்

குடும்பத்தில் பொறுப்புணர் ச்சி அதிகரிக்கலாம். எதையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள் வீர்கள். சாந்தம் சிறப்பைத் தேடித்தரும், இவ்வாரம்பெண் களுக்கு அவதானம் வேண் டும். காதல் ஜோடிகள் மத்தி யில் தாக்கமேற்படும்.

### மீனம்

ஏக்சத்தின் சாயல் நிழல் போலத் தொடரும். சிலர் வாழ்வில் பிரிவுத்துயர் வேத னையைத் தரும். ஆத்திர உணர்ச்சியைத் தவிர்க்கவும். முதியவர் ஒருவர் முன்னேற் றத்துக்கு வழிகாட்டுவார். பெண்களுக்கு மத்திமமான வாரம். வணிகர்களுக்கு வர வில் திருப்தியுண்டு. காதல் ஜோடிகளுக்கு கனிவான வாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறுகதை

# ....கிலோ என்ன விலை?



இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

''உவன்கள் சரிவரான்கள்—'' என்று சொன்ன கந்தசாமி சாய்மனைக் கதிரையில் சாய்ந்து படுத்தவாறு சிகரெட் புகைத்துக்கொண்டு இருந்தார்.

''யாரைச் சொல்லுறீர்—'' எனக் கேட்ட கனகசபை பிரம்புச் கதிரையில் அமர்ந்து புகையிலேயே ஆழ்ந்துபோய் இருந்தார்.

''உவன்கள்தான்.''

''ஓ... அவன்களைச் சொல்லுறீரோ—''

''உண்மைதானே, இப்ப எவ்வளவு காலமாய் பேக்காட்டிக்கொண்டு வாறுன்கள்—''

''இன்னும் கனகாலத்துக்கு ஏமாற்றுவான்கள்—''

''ஏன் அப்பிடிச் சொல்லுறீர் — இனிமேல் உது சரி வராது.''

சாய்மனைக் கதிரையில் படுத்திருந்த கந்தசாமி உற்சாகமாக எழும்பிக்கொண்டு சொன்னார்:

''எதை வைச்சுக்கொண்டு சொல்லுறீர்—

''எதை வைச்சுக்கொண்டோ.. இப்ப நடக்கிற விஷயங்கள் உமக்குத் தெரியாதே, எங்கடை ஆட்கள் எவ்வளவு கெட்டிக்காரன்கள் என்று—''

''அதுவும் சரிதான்—''

''அதுவும் சரிதானே —அப்பிடியல்ல, அதுதான் சரி என்று சொல்லவேணும்—எத்தனைகாலம்தான் இப்பிடி ஏமாற்றங்களைச் சுமந்துகொண்டு சீவிக்கிறது''.

''உவன்களை இனிமேலும் ஏமாற்றவிடக்கூடாது—''

''இனிமேலுமோ— நல்ல கதைதான். இவ்வளவு நாளும் விட்டதே பிழை இனிமேல் விட்டால் கடவுள்கூட மன்னிக்கமாட்டார்—'' என்றார் கந்தசாமி.

''நீர் சரியான தீவிரமான ஆள்தான்— ''என்று சொல்லி கனகசபை சிரித்தார்.

புதிய சிகரெட் ஒன்றை உதடுகளுக்கு இடையில் பொருத்திக்கொண்டு அதற்கு நெருப்புவைத்துப் புகையை உள்ளுக்கு இழுத்து அதனை அனுபவித்துக்கொண்டு கந்தசாமி சொன்னார்:

''இஞ்சை பாரும் கனகசபை, நாங்கள் ஒவ்வொருவரும் வடிவாய் யோசித்துப் பார்த்தால் நல்லாய் விளங்கும். இவ்வளவு அநியாயம் நடந்த பிறகும் நாங்கள் உவன்களால் ஏமாற்றப்பட்டுக்கொண்டு இருந்தால் நாங்கள் என்ன மனிசரே—'' - அவர் உணர்ச்சி வசப்பட்டார்.

''அப்ப விடக்கூடாதுஎன்று தான் சொல்லுறீர்—''

''விட்டுக் கொடுக்கிறதோ- ஏன்காணும் நாங்கள் விட்டுக் கொடுக்கவேணும். இவ்வளவு நாளும் விட்டுக்கொடுத்து விட்டுக்கொடுத்துத்தான் இப்ப எங்களை இப்பிடி அடக்கி ஒடுக்கிப் போட்டாங்கள்''.

''ஓமோம், சரிதான்''

''முந்தி எங்கடை ஆட்கள் கதையில்தான் வலுவிண்ணர். மாவில்லாமல் கூழ்காச்சி, மாப்பிள்ளை இல்லாமல்...... என்று ஒரு பழமொழி இருக்குது தெரியுமே, அதுமாதிரித் தான் வார்த்தை ஜாலங்களில் வலு விண்ணர். ஆனால் செயல் திறன் வெறும் பூச்சியம்— இப்பதான் அந்தச்செயல்திறன் வந்திருக்கு—''

''இனிமேலும் சும்மா கதைச்சுக்கொண்டு இருந்து பிரயோசனம் இல்லை என்று சொல்லுறியள், அப்பிடித் தானே—''

''உமக்கு என்ன கனகசபை விளக்கம் குறைவே? அதைத் தானே நான் சொல்லுறன்'' என்றார் கந்தசாமி

இருவரும் கந்தசாமியின் வீட்டின் ஹோலில் இருந்து கதைத்துக்கொண்டு இருந்தார்கள். அந்தஹோலின் அழகும் ஆடம்பரமும் கந்தசாமியின் தகுதியைப்பறைசாற்றிக் கொண்டு இருந்தன.

அரசாங்கத்தில் தொழில் பார்த்த அவர் பென்சன் எடுக்கவேண்டிய வயதுக்கு முன்னரே பென்சன் எடுத்துக் கொண்டு வீட்டில் 'செட்டில்' ஆகிவிட்டார்.

ஆறு பிள்ளைகளில் மூன்று ஆண்களும் இரண்டு பெண் களும்வெளிநாட்டில். திருமணமான ஒரு மகள் மாத்திரம் புருஷனை வெளியில் அனுப்பி விட்டுத்தாய் தகப்பனோடு வீட்டில் இருக்கிறாள்.

பிள்ளைகள் மருமக்கள் நேரகாலத்தோடு வெளிநாடு போய்விட்டபடியால் எந்தக் குழப்பமும் இன்றி, என்ரை பிள்ளையள் ஜேர்மனியிலும் பிரான்சிலும் லண்டனிலும் சொந்த வீடுகள் வாங்கிக் கொண்டு இருக்குதுகள் என்று வருகின்றவர்களுக்கு எல்லாம் கந்தசாமியார் சொல்லத்துணை செய்கின்றனர்.

பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் செய்வதனைப்போல காணிகள் விலையேற உதவிசெய்து, சீதன றேட்டுகளை உயர்த்தி, வீடுகளைப் பெருப்பித்து, வீட்டு மதில்களைக் கோபுரங்களாக்கி காஸ் குக்கரும் ரீ. வி. டெக்கும் வீடியோவுமாக சகல வளங்களும் பெற்றுவிட்டது.

வீட்டு வேலைகளுக்கும் கலியாணம் முடித்து இரண்டு பிள்ளைகளுக்கும்தாயாகிவிட்ட மகள் பத்மா எங்கள் பாரம்பரிய பண்பாட்டுக்கு அமைய ப்றொக் அணிந்தோ, அல்லது காவ் ஸ்கேட்டும் ரீசேட் போட்டு வெளியே போகும் போது, துணைக்குமாக ஒரு வேலைக்காரப் பெட்டையும், எடுபிடி வேலைகளுக்குச் சிறு பெடியனுமாக நிலைமை பரவாயில்லை.

பாங்கிற்கு போய்வரும் போது போத்தில்களோடு வரும் கந்தசாமியார் பேப்பரோடும் ரீ வி யோடும் பொழுதைப்போக்கி சாப்பிட முன்னரும் பின்னரும் போத்தல்களை ருசி பார்த்து ஆனந்தப் பட்டு.

ஊர்வேலைகளில் முன்னுக்கு நிற்றாகக் காட்டி, எழுத்துச் சங்கிலியை மடித்து தோளில் போட்டு கோயில்களில் மணியகார வேலைபார்த்து,

கந்தசாமி என்றால் எல்லோருக்கும் தெரியும் ஆளாகிவிட்டார்.

குசினிக்குள் இருந்த திருமதி கந்தசாமி ''கொப்பர் என்ன மாதிரி என்று பார்பிள்ளை— சாப்பிடுறநேரம் கதை தொடங்கிவிட்டார். பிறகு பிரச்னை'' என்று சொல்லிப் பத்மாவை அனுப்பினாள்.

ஹோலிற்கு வந்த பத்மா

''கூப்பிட்டனீங்களே அப்பா—'' என்று சூசகமாக சாப்பாட்டு நேரத்தை ஞாபகப்படுத்தினாள்.

''கொஞ்சம் பொறுபிள்ளை. நாங்கள் முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றிக் கதைக்கிறம்'' என்றார் கந்தசாமி.

''பத்மா—உன்ரை அப்பர் லேசுப்பட்ட ஆள் இல்லை, சரியான வீரன். வயதுபோனாலும் இன்னும் உஷார் போகவில்லை—'' என்று பெரிதாகச் சத்தம்போட்டு சிரித்தார் கனகசபை.

'உமக்குப்பகிடியாக இருக்கு கனகசபை. உப்பிடி எல்லோரும் சொல்லிச் சொல்லிச் சிரித்துக்கொண்டுஇருந்தால் என்ன நடக்கும். ஒவ்வொருவரும் ஏதாவது செய்தால்தானே என்னவாவது பிரயோசனம் இருக்கும்.''

பதில் சொல்மாமல் பத்மா சிரித்துக்கொண்டு சாப்பாட்டுக்கு நேரம் போவதாக மீண்டும் சாடை காட்டினாள். அதைப்புரிந்து கொண்டவராகத் தெரியவில்லை கந்தசாமி.

''என்ன அங்கிள் மத்தியான சாப்பாட்டுநினைவு கூட வரேல்லைப் போல. வீட்டில் அன்ரி தேடிக்கொண்டு வரப்போறா'' என்று வேடிக்கையாகச் சொல்ல,

''உண்மைதான் பத்மா. சாப்பாட்டு நேரத்துக்குப் போகாட்டி மனிசி சாப்பாடே தராது என்பாடு சிவபட்டினிதான்கிவிடும்'' என்று சொன்ன கனகசபை விரைவாக எழுந்து ''அப்ப நான் போட்டுப் பின்னேரம் போல வாறன் மிச்சத்தைப் பிறகு கதைப்பம்'' என்று சொல்லி விடைபெற்றார்.

அவர் போன பிறகு-

''என்ன மிச்சம் இருக்கு கதைக்கிறதுக்கு அப்பா'' என்று கேட்ட பத்மாவைப் பார்த்த கந்தசாமி,

''உனக்கு பகிடியாக இருக்கு பத்மா. இப்ப எங்கடை ஆட்கள் இருக்கிற நிலைமையினை யோசித்துப் பார்த்தால் எல்லாம் விளங்கும் என்றார்''.

''என்னத்தை யோசித்து என்னத்தைச் செய்யிறது.''

''உப்பிடிக் கதையாதே பத்மா. எங்கடை ஆட்களில் நூற்றுக்கு முக்காவாசிப் பேர் உப்பிடியான ஆட்கள் தான். தாங்களும் செயல்படுவதில்லை. செயல்படுகிற ஆட்களையும் விடமாட்டான்கள்'' என்றார் கோபமாக.

''நான் சண்டைக்கு வரேல்லை அப்பா. உப்பிடிக் கதைச்சு என்ன பிரயோசனம்.''

''என்ன பிரயோசனமோ. நீயும் அவன் கனகசபை மாதிரி ஒன்றும் விளங்காத மாதிரிக் கதைக்கிறாய். இப்பத்தேய நிலைமையில நாங்கள் பேசாமல் இருக்கலாமே.''

பத்மா சிரித்தாள், பிறகு.

''வாங்கோ அப்பா முதலில் சாப்பிடுங்கோ, பேந்து கதைக்கலாம். இப்பநேரம் ஒன்றரை மணியாகி விட்டது. இரண்டு மணிக்கு ரீ. வி.யில் படம் போடுகிறுங்கள். கமலகாசனும் சிலுக்கும் நடிச்சது. இராத்திரி பார்த்ததை விட நல்லாய் இருக்கும்-'' என்று சொன்னாள்.

''சிலுக்கு நடிச்சதோ. இரவைக்குப் போடுற படத்திலேயும் சிலுக்கு இருக்குதானே'' என்றார் கந்தசாமி.

''இல்லையப்பா இரவு போடுற படத்தில அனுராதாவின்ரை ஆட்டம் தான் இருக்கு.''

''அப்பிடியோ?''

''உங்கை என்ன செய்யிறியள். நேரம் எல்லோபோகுது'' என்று கேட்டபடி வந்ததிருமதி கந்தசாமி,

''தேப்பனும் மேளும் என்ன கதை நடக்குது, இரண்டு மணியுக்க சாப்பிட வேண்டாமே'' என்றாள்.

''நீ சத்தம் போடவேண்டாம். நான் சாப்பிடவாறன்'' என்ற கந்தசாமி உள்ளே போனார்.

விரைவாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டுஹோலிற்கு பத்மா வந்தபோது ஒன்றேமுக்கால் மணியாகிவிட்டது. இரண்டு மணிக்காக அவள் காத்திருந்தபோது அவளின் சிநேகிதியான பக்கத்துவீட்டுச் சுகந்தி வந்தாள். ஏனடியப்பா நீ இன்றைக்குப் படம் பார்க்கேல்லையோ'' என்று கேட்ட அவளைப் பார்த்து,

''நல்லகதை, நான் பார்க்காமல் விடுகிறதோ. நல்ல படங்கள் தானே போடுறுங்கள். எல்லாம் லவ் ஸ்ரோறீஸ் தானே. அதோட படம்பார்த்தால் என்ன பார்க்காமல் விட்டால் என்ன, மாதம் முடிய படம் போடுற அந்த ஆள் காசுக்கு வந்திடும். ஐம்பது ரூபாய்த் சுளையாய்க் தூக்கி கொடுக்கிறம். ஒரு நாளைக்கு ஷொப்பிங் போகேக்க ரீ குடிக்கிற காசுதான். எண்டாலும் காசு கொடுக்கிறனுங்கள் ஏன் படத்தைப் பார்க்காமல் விடுவான். ஒவ்வொரு நளும் இரண்டு படம் போடுகிறபடியால் எங்கடை பொழுதும் ஒருமாதிரிப் போகுது. நெடுக ஷொப்பிங் அது இது என்று திரியேலாது தானே'' என்றாள் பத்மா.

''கதையோட கதையாய் நான் ஒரு விஷயத்தை மறந்து போனன் யாழ்ப்பாணத்துப் பேமன்ரில நல்ல பாஷனில ப்றொக், ஹாவ்ஸ்கேட் எல்லாம் வந்திருக்காம். போய்ப் பார்க்க வேணும்.''

''அதுக்கென்ன, போனால் போச்சு. நாளைக்கு அல்லது நாளையின்டைக்குப் போவம்'' என்றா பத்மா சொல்லும் போதே,

அழைப்பு மணி அடித்தது. யார் அது இந்த நேரத்தில் என்று யோசித்த பத்மா எழுந்து போய் வெளி விறுந்தைக் கதவைத் திறக்க, எ[illegible] மூன்று இளைஞர்கள் ஆர்வம் பொங்கும் முகங்களுடன்! பத்மா திரும்பிச் சுகந்தியைப் பார்க்க சுகந்தியும் எழுந்து வெளியே வந்தாள்.

''என்ன'' என்று கேட்ட பத்மாவிடம்,

''நாங்கள் ஒரு நாடக டிக்கெட் விக்கிறம்...''

''நாடகமோ'' என்று சுவாரஸ்யமில்லாமல கேட்டாள் பத்மா.

''ஓமோம். நாடக டிக்கெட் தான். எங்கடை சமகாலத்து விடயங்களோடை தொடர்புடையது. எல்லாரும் பார்க்க வேணும் என்றதுக்காகத்தான் ஒவ்வொரு இடமாய்ப் போட்டுக்கொண்டு வாறம். எல்லாரும் கட்டாயம்பார்க்க வேண்டிய ஒரு நாடகம்'' என்றான் ஒருவன்.

''உலகமே ஒரு நாடக மேடை அதுக்க ஒரு நாடகமே''என்று சொல்லிச்சிரித்த சுகந்தியின் சிரிப்பைத் தொடர்ந்து பத்மாவும் சிரித்தாள்.

''நாங்கள் உங்களைக் கட்டாயப்படுத்தேல்லை. விருப்பம் என்றால் ஒரு டிக்கெட் ஐந்து ரூபாய் தான்'' என்றான் மற்றொரு இளைஞன்.

''ஐந்து ரூபாயோ'' என பத்மா கேட்கும் போதே,

''நாங்கள் இதை ஒழுங்கு படுத்திச்செய்யிறம். உங்களைப் போல ஆட்கள் சிறிது சிறி

(10-ம் பக்கம் பார்க்க)

## மலரச் செய்வோம்!

ஈ யெறும்பு பறவைமுதல் யானையீறாய்
ஈ யென்று கையேந்தி நின்றதுண்டோ
நாயொன்றை வளர்க்கின்ற பழக்கத்தாலே
நமக்குணவு தாவென்றே வாலையாட்டும்
வாயில்லாப் பிராணியென்றும் மானமுடன்
வாழ்கின்ற மனப்பான்மை கண்டோமிங்கே
மனமுள்ள மனிதகுலம் மட்டும் என்றும்
மனம் விண்டு கேட்கின்ற மாண்பேன் பெற்றான்

கையேந்தி நிற்குநிலை ஏனோவென்று
கவிஞர்களும் கலைஞர்களும் கேட்பார் இன்றும்
மெய்யாகச் சமுதாயச் சிறுமைதன்னை
மேன்மேலும் ஒழித்திடவே முயன்றார் நல்லோர்
வையமிசை மனிதகுலம் பிணமய் என்றும்
வாழ்கின்ற வாழ்க்கை தன்னை விதியே யென்பார்
ஐய! இவர் உண்டுடுத்து வாழ்வுகாண்பர்
அரைக்காசும் அகதிகட்காய் இரங்கார் என்றும்

விதியின்மேற் பழிபோட்டு விட்டால் வாழ்வு
விடிவதற்கு வழியில்லை வாழ்வும் இல்லை
சதிமிக்க சமுதாய ஊழலின்று
சகதியுடன் பாய்கின்ற பான்மை வேண்டோம்
மதிமிக்க சிந்தனையால் செயலால் வாழ்வை
மற்றவர்கள் மதிக்கும்வகை செய்ய வேண்டின்
மதியேட்டால் விதியேட்டைக் கிழித்தே வீசி
மாண்புடைய மக்களினம் மலரச் செய்வோம்.

— இளம்பிறையாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சிந்தனைகள்

* அறிவை உபயோகிக்கும் அருங்கலையை அறியத் தருவதே கல்வி.
- அல்பிரட் வைற்ஹெட்

* ஒரு மனிதனுடைய நடத்தையை மாற்றும் சாதனமே கல்வி. - யாரோ.

* கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்கஅதற்குத்தக. - வள்ளுவர்.

* நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையாற் கல்வி அழகே அழகு. - நாலடியார்.

* கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே.
- வெற்றிவேற்கை.

* அறிவுடையார் எல்லா முடையர். - வள்ளுவர்.

* அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்.
-மகாகவி பாரதி.

* தான் பெற்றுள்ள அறிவினையும் ஆற்றலையும் இன்று பிறந்து வளரும் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த மனித சமூகம் மேற்கொள்ளும் பல்வேறு சேவைகளின் தொகுப்பே கல்வியாகும். -ஜோன்டுயி.

* கல்வி என்பது விளக்கேற்றல். -ஆறுமுகநாவலர்.

* இலவச கட்டாயக் கல்வி குழந்தைகளின் உரிமையாகும் அது அவர்களுக்கு வழங்கப்படும் சலுகையல்ல.
- மகாத்மாகாந்தி.

* தாய் மொழியே பிள்ளைகளின் போதனு மொழியாக இருக்கவேண்டும்.
- மகாத்மாகாந்தி.

* எங்கே கல்வி கட்டில்லாது ஓங்குமோ, எங்கே அறிவாம் ஆறுதடையின்றிப் பாயுமோ, எங்கே மக்கள் தலைநிமிர்ந்து நிற்பரோ, எங்கே உலகம் குறுகிய தன்மையின் சின்னமாய்ப் புலர்வதில்லையோ, எங்கே தளர்விலா முயற்சி. ஏகமாய்ப பொங்குமோ, எங்கே நிறைவினை நோக்கிக் கரங்கள் நீளுமோ அங்குதான் சுதந்திர அமரநாட்டு ஒளியில் தாய்நாடு கண் மலரும்.
- மகாகவி தாகூர்.

எனதுமுன்னேரைக் காட்டிலும் என்னல் அதிக தொலை தூரத்தைக் காண முடிந்தமைக்குக் காரணம், அவர்களின் தோள்களின் மீது நின்று நான் பார்த்தமையே.
- நியூட்டன்.

* மனிதனிடம் மறைந்து கிடக்கும் பரிபூரணத்தை வெளிப்பத்துவதே கல்வி.
-சுவாமி விவேகானந்தர்.

* உரமான உடலே உறுதியான கல்விக்கு அடிப்படை. -பிளேட்டோ

* ஒரு பிள்ளை தன் வாழ் நாளில் ஒருபோதும் அடைய முடியாத தூரத்திலுள்ள குறிக்கோளுக்காக, அப்பிள்ளையை வருத்திப் பல கட்டுப்பாடுகளுக்குள்ளாக்கி நிலையில்லாத ஓர் எதிர்காலத்துக்காக அப்பிள்ளையின் நிகழ்காலத்தை அர்ப்பணம் செய்யும் கொடூரமான கல்வியை என்னவென்று கூறுவது?
— ரூஸோ.

தொகுப்பு: ரகு'

# செல்வத்துள் செல்வம்

து. சுப்பராயன்

ஒருவர் சிறப்புறுவதற்குக் கல்வி மிகவும் இன்றியமையாதது. கல்வி கற்பதனுல் அறிவு பெறுகிறோம் நாம் கல்வி கற்றதினுல் பெற்ற அறிவு நமக்கும் பயன்படும்; பிறருக்கும் பயன்தரும் கற்கப்படும் நூல்கள் சிறந்த நூல்களாக இருக்க வேண்டும். நூல்களைப்படியலும் பொழுது ஐயம் திரிபு அறக் கற்கவேண்டும்.

'கற்கக் கசடறக் கற்கக் கற்பவை கற்றபின் - நிற்க அதற்குத் தக'

கல்வியறிவு பெற்றவர்களின் பேச்சிலே இனிமை இருக்கும்; உறுதியும் இருக்கும். கற்றோருடைய நோக்கம் பரந்ததாக அமையும். அனைத்து ஊர்களையும் தம் ஊராகக் கருதுவர்; அனைத்து நாடுகளையும் தமது நாடாகக் கருதுவர் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என நோக்குவர் சிறிது கற்றதோடு அமையாது மேன்மேலும் கற்க எண்ணுவர். 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று கருதுவர்.

'தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்'.

தாம் கற்றறிந்ததை மற்றோருக்கும் எடுத்துச் சொல்லுவர். அங்ஙனம் கற்றறிந்தார் கூறக் கேட்டுப் பெறும் ஞானத்தைக் கேள்விஞானம் என்று உரைப்பர். அத்தகைய கேள்வி ஞானத்தை, திருவள்ளுவர் செவிச் செல்வம் என்று போற்றுகிறார்.

'செல்வத்துள் செல்வம்செவிச் செல்வம் அச்செல்வம் - செல்வத்துள் எல்லாம் தலை'

மழைத்துளிகள் ஒன்று சேர்ந்து தண்ணீராகி, நீர் நிலைகள் நிரம்பும். அறிவு கொஞ்சஞ் கொஞ்சமாகச் சேர்ந்து பிறகு பெருமை தரும் அளவுக்கு நிறைந்து நிற்கும்

'எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்''.

ஆகவே கல்வி கேள்விகளில் சிறந்துவிளங்கி, நம் அறிவினுலும், செயலாலும், தன்னுயிர்க்கும் மன்னுயிர்க்கும் நன்மை செய்வோமாக.

— நன்றி: 'நல்வழி'

## இலவசம்

பசியால்
உடல் மெலிந்து
பாலர் வகுப்பில் படிக்கும்
பாலனுக்கு
பாடசாலையில் கிடைத்தது-
இலவச புத்தகம்!

- பசுவூர்க்கோபி

## சிறுகதை

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தாசப் பங்களிப்புச் செய்தால் தான் இதிலை ஏற்படுகிற செலவுகளைச் சமாளிக்கலாம் அவ்வளவு தான்'' என்ருன். முதலில் கதைத்த இளைஞன்.

''என்ன பிள்ளை பத்மா. தம்பிமார் என்னவாம்'' என்று கேட்டபடி கந்தசாமி வரவே,

பத்மா விஷயத்தைச் சொன்னுள்.

' தம்பிமார் நான் வயது போன ஆள் எனக்கு நாடகத்தில் ஈடுபாடு இல்லை உவள் பெட்டைதான் இஞ்சை இருக்கிருள். அவளும் தனிய வர மாட்டாள். மவறை யாரும் நாடகம் பார்க்க இஞ்சை இல்லை. பிறகு ஏன் நாடக டிக்கெட்டை எடுத்து வீணுக்கு வான். எடுத்தால் பார்க்க வேண்டாமே'' - என்று சொன்ன கந்தசாமியிடம்,

''நன்றி'' என்று சொல்லி விடைபெற்றனர் அந்த இளைஞர்கள்.

''ஐயோ அப்பா இரண்டு மணியாகுது'' என அவசரப் பட்டாள பத்மா.

[யாவும் கற்பனை]

# செவிச்செல்வம்

திருமதி இராசேஸ்வரி திருஞானம்

இசை என்பது செவிக்கு இன்பத்தைத்தரும் த்வனிகளை பற்றிய கலையாகும், ஆயகலைகள் அறுபத்து நான்கில், சிறந்த கலையாகிய லலிதகலைகளில் இசை மிக்க மேன்மையான கலையாகும். மனிதர்கள், விலங்குகள், பண்டிதர், பாமரர், பாலர்கள் எல்லோருக்கும் இன்பத்தைத் தரக் கூடியது இசையாகும். இசை பயிலுவதனுல் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத் திருப்தி முதலிய நற்குணங்கள் விருத்தியாகும். இன்னும் புத்திக்கூர்மை, கற்பனுசக்தி, முதலியவைகளும் இசைபயிலுவதனுல் ஒருவருக்குவிருத்தியாகும். பல இனமக்களை ஒருங்கு சேர்க்கும் சக்தி இசைக்கே உண்டு. இம்மைச் செல்வங்களினுல் உண்டாகாத ஒருமனத் திருப்தியும், பேரின்பமும் இசையினுல் ஒருவருக்குண்டாகும் இதுஉன்னதமான கலையாகும் இது மனிதனுடைய வாழ்க்கையோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. எங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு சம்பவமும் இசையோடு தொடர்பு பட்டுள்ளது. உதாரணமாக ஒருகுழந்தை பிறந்தவுடன் தாயானவள் அதனை தாலாட்டுப் பாடலால் உறங்க வைக்கிருள். ஆகவே குழந்தையின் அழுகையை நிறுத்தவும் இசை உதவுகிறது.

இசைக்கு காந்தர்வவேதம் என்று பெயர். கடவுளை வழிபாடு செய்வதற்கும், கடவுளை அறிவதற்கும் இசை ஒரு முக்கிய சாதனமாகும். இக்காரணம் பற்றியே இசையை ஒரு வித்தை எனக்கூறலாம். அநேக மகான்கள் இசையை உபாஸித்து மோட்ச பதவியை அடைந்தனர். சுந்தரர் தேவாரப் பதிகத்தில், ஏழிசையாய் இசைப்பயனுய்'' என்று இறைவனைப் பற்றிக் கூறியது குறிப்பிடத்தக்கது. இந்த உன்னதமான கலையை ஒரு தனியான பாதை எனவும் கூறலாம். சாமானிய பதங்களினுல் வெளியிடமுடியாத, அதிக நுட்பமான கருத்துக்களையும் இசையின் மூலமாக வெளிப்படுத்தலாம். உதாரணமாக தியாகராச சுவாமிகள் செய்துள்ள கிருதிகளில், பிரகாசிக்கும் ஸாகித்திய பாவ ஸங்கதிகளைக் கூறலாம்.

மனிதன் தன்னுடைய யுக்தியினுலும், புத்திக் கூர்மையினுலும் வளர்த்த அருங்கலைகளில் இசையும் ஒன்ருகும். இசை ஒரு தெய்வீகமான கலை. சிவபெருமான் கையில் டமருகமும், கண்ணன் கையில் குழலும், சரஸ்வதி கையில் வீணையும் இருப்பதில் ஓர் ஆழ்ந்த கருத்து உளது

மனிதனுக்கு கடவுள் அருளியுள்ள குரல் பேசுவதற்குமட்டுமல்ல. பாடுவதற்குக்கூட என்பதை உணர வேண்டும். பாடுவதால் தான் ஒருவன் தன் குரலின் முழுப்பிரயோசனத்தையும் அடைய முடியும். மனித தேகத்தின் அமைப்பிலும் இசை சம்பந்தமான தத்துவங்களைக் காணலாம். மனிதனின் குரல் காற்று வாத்தியத்தின் அமைப்பையும், காது தோல்கருவியின் அமைப்பையும், உள்ளடக்கியதோடு தந்திவாத்தியத்தின் அமைப்பையும் ஒருவாறு உணர்த்துகிறது.

திருஞான சம்பந்தர் முதன் முதலில் பாடியருளிய ''தோடுடைய செவியன்'' என்னும் தேவாரத்தில் சிவபெருமானின் ''செவியை'' முதலில் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. இக்காரணம் பற்றியே திருவள்ளுவர் செவிச் செல்வத்தைப் புகழ்ந்து, ''செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் — அச்செல்வம் செல்வத்துளெல்லாம் தலை'' எனக் கூறியுள்ளார்.

தேனையும் பாலையும் விரும்புவது போல, எல்லோரும் இசையையும் விரும்புவார்கள். கானம் செய்யும் போதும், கானத்தை கேட்கும் பொழுதும் நாம் இவ்வுலகக்கவலையை மறந்து இன்பமடைகிருேம். இக்காரணம் பற்றியே இசையின்பத்தால் சகல சம்பத்துக்களையும் பெற்று சிறப்புடன் வாழ்ந்த இலங்கை மன்னன் இராவணன்கூட இசையால், இறைவனைக் கவர்ந்தது பல்லாமல், தனது கொடியில் வீணைச்சின்னத்தையும் பொறித்து தனது தலைநகரையும் வீணுகானபுரம் எனப் பெயரிட்டான். தனது இராவணஸ்திரம் என்னும் யாழினுல் ஒவ்வொரு உயிரினங்களுக்கும் விருப்பமான இசையைப்பாடி, அவைகளைத்தான் இருக்கும் இடம்தேடி வரும்படி செய்தான். இதன் பெருமையை உணர்ந்தே இசையை நடுநாயகமாக வைத்துதமிழை இயல். இசை, நாடகம் என பிரித்திருக்கிருர்கள் இதுவே இசைக்கலைக்கு ஒரு தனிப் பெருமையாகும்.

# குறுநாவல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வொரு திட்டத்திலும் மோட்டரை மாற்றிப் புது மோட்டார் இணைத்துத் தரும்படி கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலதிகாரிகளுக்கு எழுதிய விண்ணப்பங்களுக்கு என்ன நடந்தது என்று அறியாடியாமல் தவித்தனர் அப் பெண்கள். ஆனுல் திட்டமிடல் அதிகாரியை, அரசகேசரி அணுகி முன்னரே தீர்மானித்தபடி திட்டத்துக்கு ஒரு அலுவலகம் ஒன்றைநிறுவிக் கொண்டான்.

ஏதோ ஒரு உலகநாடு மனமுவர்ந்து வழங்கிய உப உணவுப் பொருள்களான சீனி, சருவாடு, மைசூர்ப் பருப்புப் போன்றவை மூடைக் கணக்கில் வந்து சேர்ந்தன சிரமதானம் செய்தால் இவை இலவசமாக வழங்கப்படும் என்று அரசகேசரி அறிவித்தான்.

திட்டக்காணிகளை ஐந்து பிரிவுகளாகப் பிரித்தனர் ஒவ்வொரு பிரிவிலும் நாலுகாணி துண்டுகள். ஒவ்வொரு பிரிவையும் பத்து அடி அகலமான பாதைபிரித்திருந்தனர். இந்தப் பாதைகளை மந்து வெட்டி, புல்லுச் செருக்கித் துப்புரவாக்குவதிலும், வாய்க்கால் துப்புரவாக்கல் ஆகிய பணிகளிலும் சிரமதானத்தை மேற்கொள்வது எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. குழுக்குழுவாகப் பெண்கள் தம்மைச் சிரமதானப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டனர். காணியில் குடியிருக்காத பெண்கள் ஐந்து பேரும் சிரமதானப் பணியில் முழுமையாக ஈடுபட்டனர்.

பொருள்கள் விநியோகம் செய்யும் சமயம் பெரும் குழப்பம் ஏற்பட்டுவிட்டது.

''காணியில் குடியிருக்காதவரை சிரமதானச் சாமான்கள் தரமுடியாது!''— அரசகேசரி சட்டம் பேசினுன்.

''எந்த விதத்தில் இந்தநியாயம் சேரும்? நாங்கள் குடியிருக்காதது உண்மைதான். அது வேறை விஷயம்... இப்ப நாங்கள் சிரமதானம் செய்ததற்குப் பொருள்களை தாருங்கோவன்...'' ஒரு பெண் நியாயம் கோரினுள்.

''வீண்கதை கதைக்கவேண்டாம். இல்லை எண்டால் இல்லைத்தான் போய்ச் செய்யுறதைச் செய்யுங்கோ''

ஐந்து பெண்களும் எவ்வளவோ வாதாடினுர்கள். ஆனல்அரசகேசரி மசியவில்லை. நடப்பதை எல்லாம் பூமணி மௌனமாகப் பார்த்துக் கொண் நின்ருள்.

''கனகலச்சுமி...''- அரசகேசரிஅழைக்க கனகலச்சுமி முன்னுக்கு வந்தாள்.

''இந்தாரும் ஸ்ரோர் திறப்பு. லிஸ்ட் எழுதி வைசிருக்கிறன் அந்தந்தப் பெயர்களைக் கூப்பிட்டுப் பொருள்களைக் கொடும்... நான் சொன்ன மாதிரிச் செய்யும், என்ன...? நீங்கள் ஒவ்வொருவராய்ப் போய்க் கனகலட்சுமியிடம் பொருள்களேவேண்டுங்கோ...'

கனகலட்சுமியிடம் பொருள்கள் விநியோகப் செய்யும் பொறுப்பை அரசகேசரி கொடுத்தது பலருக்குப் பெரும் அதிருப்தியைக் கொடுத்தது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஏன், நீங்கள் நிண்டு விநியோகிக்கலாம் தானே? கனகலட்சுமி கொடுக்கத் தேவையில்லையே?'' — பூமணி அரசகேசரியைப் பார்த்துக்கூறினுள்.

''நான் நிண்டு கொடுக்க வேணுமெண்டு சட்டம்இல்லை. விளங்குதே? கனகலட்சுமி கொடுத்தால் என்ன?''

''ஏன் கனகலட்சுமியைப் பொறுப்பாக இருக்க விடுகிறீர்கள்? பூமணிதானே திட்டத்தலைவி? பூமணி இந்த வேலையைச் செய்யலாம் தானே?'' — கமலா கூறினுள்.

''வாயைமூடுங்கோ. பூமணி தலைவி எண்டால் எனக்கென்ன? கண்டறியாத தலைவி! விருப்பமானவர்கள் போய் வேண்டுங்கோ விருப்பமில்லாவிடில் எனக்கொன்றுமில்லை.''

அரசகேசரி புறப்பட்டுச் சென்று விட்டான்.

திட்டத்துக்குப் பக்கத்தில் வியாபார நிலையங்களுக்கு என்று அரசு காணிகள் ஒதுக்கி விட்டிருந்தது. கதிராசி என்பவன், தோட்டக் காட்டுப் பகுதி யிலிருந்து முழங்கேணிக்கு வந்து சேர்ந்தான். முன்னரே பூஞ்சோலையைச் சேர்ந்த ஒருவா ஒரு காணித் துண்டை அனுமதிப்பத்திரம் மூலம் பெற்று ஒருசிறியகடை கட்டி வியாபாரம் செய்து வந்தார். வியர்பாரம் நட்டத்தில் ஓடவே கடையை இழுத்து மூடி விட்டுப் பூஞ்சோலைக்குத் திரும்பி வந்து விட்டார். கதிராசி அவரைக் கெஞ்சிக் கூத்தாடி அந்தக் கடையை நடாத்த அனுமதி பெற்று நடாத்தத் தொடங்கினுன் வியாபாரம் நல்ல செழிப்பாக நடந்தது ஆள் நல்ல வாட்ட சாட்டமாக இருப்பான் நல்ல சிவப்பு நிறம். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான்.

கனகலட்சுமி வழக்கமாக அந்தக் கடையில் தான் பொருள்களை வாங்குவது வழக்கம். கனகலட்சுமிக்கு வெகுதாராளமாகக்கடன் கொடுக்க ஆரம்பித்தான் கதிராசி. நாளடைவில் கனகலட்சுமி கடையே கதி என்று மணித்தியாலக் கணக்கில் அவனேடு பேசிக்கொண்டு நிற்கும் வழக்கத்தை மேற்கொண்டாள்.

திட்டம் முழுவதும் இது தான் சுவையான கதையாக இருந்தது. எல்லோரும் ஏதோ ஒன்றை எதிர்பார்த்தனர். கடைசியில் அது நடந்தே விட்டது. முழங்கேணிப் பிள்ளையார் கோயிலில் கதிராசி கனகலட்சுமியைக் கல்யாணம் செய்து கொண்டான். இப்பொழுது கனகலட்சுமி தனது காணியில் உள்ள கொட்டிலை விட்டு வெளியெறிக் கதிராசியின் கடையின் பின்புறத்தில் அமைந்திருந்த அறையில் குடியேறி விட்டாள் கடையில் கதிராசிக்குப்பதில் கனக லட்சுமியே மேசையில் இருந்து வியாபாரத்தைக் கவனித்தாள். ''பாப்பா வந்தாப் பிறகு கடைவியாபாரம் பரவாயில்லீங்க ...'' — ,கதிராசி பெருமையாகச் சொல்லிக் கொள்ளுவான். [வளரும்]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய நம்பிக்கைகளில்

# இறை தூதர்கள்

அல்ஹாஜ் மௌலவி
வி. கே. எம். எச். காலிதீன்

இதற்கு முன்னர் இஸ்லாமிய நம்பிக்கைகளில் மூன்ருவதாக விளங்கும் வேதங்களைப் பற்றிய விசுவாசத்தை விளக்கினேம். இவ்வாரம் அதன் தொடர்ச்சியானதும் நான்காவது விசுவாசமுமான இறைதூதர்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வோம்.

இஸ்லாமிய நம்பிக்கைகளில் ஒன்ருக விளங்கும் இறைதூதர்கள் பற்றிய விசுவாசமானது மனித சமுதாயத்தினை ஒன்றிணைக்கும் சிறப்பைக் கொண்டுள்ளது. அதே வேளையில் ஏனைய சமயங்களின் கருத்துக்களிலிருந்து சில அம்சங்களில் வேறுபடவும் செய்கின்றது. மனித சமுதாயத்தை நேர்வழிப்படுத்த காலத்துக்குக் காலம், ஒவ்வொரு சமூகத்துக்கும் இறைதூதர்களும், வழிகாட்டிகளும் வராத சமூகம் இருக்கவில்லை. எல்லாச் சமுதாயத்துக்கும் நேர்வழிகாட்டக்கூடிய தீர்க்கதரிசிகள் வந்தேயுள்ளனர். ஆதம் அலைஹிஸ்ஸலாம் முதல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வரை ஒரு இலட்சத்தி இருபத்தி நாலாயிரம் தீர்க்கதரிசிகள் உலக மக்கள் நல்வழி பெறுவதற்காகப் பணிபுரிந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. அவர்களில் சிறப்பிடம் பெறும் இருபத்தைந்து நபிமார்களும் அல்குர்ஆனில் குறிப்பிடப்படுகிருர்கள். குறிப்பாக ஆதம் அலைஹிஸ்ஸலாம் (ஆதாம்) நூஹ் அலைஸ்ஸலாம் [நோவா] தாவூத் அலைஹிஸ்ஸலாம் [தாவீது] இபுருஹீம் அலைஹிஸ்ஸலாம் [ஏபிரகாம்] மூஸா அலைஹிஸ்ஸலாம் [மோஸஸ்] ஈஸா அலைஹிஸ்ஸலாம் [இயேசு] முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஆகிய அல்லாஹ்வின் தூதுவர்களும் அல்குர்ஆனில் இடம் பெறுகிருர்கள்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் யூதர்களுக்கு நபியாக விளங்கினுர்கள். பிர்அவ்ன் [பாரோச்] மன்னனின் கொடுமையிலிருந்தும் யூதர்களைக் காப்பாற்றுவதில் அதிக பிரயாசையை மூஸா அலைஹிஸ்லாம் மேற்கொண்டார்கள். எனினும் அதிகமான யூதர்களான இஸ்ரேலர்கள் மூஸா [அலை] வைப் புறக்கணித்து அல்லாஹ்வின் வழிகாட்டல்களை மீறியமையால் யூதர்கள், அல்லாஹ்வால் சபிக்கப்பட்டதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது'' யூதர்கள் தங்களுடைய உறுதிமொழிக்கு மாறு செய்ததன் காரணமாக நாம் அவர்களைச் சபித்து, அவர்களுடைய இருதயங்களை இறுகச் செய்து விட்டோம். ஆகவே அவர்கள் தங்கள் வேத வசனங்களை அவற்றின் உண்மை அர்த்தங்களிலிருந்து புரட்டுகின்ருர்கள். அன்றி, [நம்முடைய இந்நபியைப்பற்றி] அதில் அவர்களுக்கு நினைவூட்டப் பெற்றிருந்த பாகத்தையும் மறந்துவிட்டார்கள். ஆகவே நபியே அவர்களில் சிலரைத் தவிர, அவர்களில் பெரும் பாலோரின் மோசடியைப் பற்றிய செய்தியை நீர் அடிக்கடி தவருமல் கேள்விப்படுவீர். ஆகவே இவ்வற்பர்களை நீர் மன்னித்து புறக்கணித்து விடுவீராக! நிச்சயமாக அல்லாஹ் நற் செயல் புரிவோரை நேசிக்கின்ருன். (அத்: 5, வச: 13]. இஸ்ரேல் யூதர்கள் தாவூத் அலைஹிஸ்ஸலாம் [தாவீது] ஈஸா அலைஹிஸ்ஸலாம் [இயேசு] ஆகியோரராலும் சபிக்கப்பட்டுள்ளனர் என்பதை அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது ''இஸ்ராயீலின் சந்ததிகளில் [யூதர்கள்] எவர்கள் [அல்லாஹ்வின் மார்க்கத்தை - தோரா] நிராகரித்தார்களோ அவர்கள், தாவூத், மர்யமுடைய மகன் ஈஸா ஆகிய இவர்கள் நாவாலும் சபிக்கப்பட்டேயிருக்கின்றனர். ஏனென்ருல் யூதர்கள் அக்காலத்திலும் வரம்பு மீறியும், பாபம் செய்தும் வந்தனர். [அத் 5, வச:77]

மூஸா (அலை] வுக்குப்பின் தாவூத் நபிக்கு ''ஸபூர்'' வேதம் அருளப்பட்டதாக அல்குர் ஆன் குறிப்பிடுகிறது. ''நிச்சயமாக நாம் ''ஸபூர்'' என்னும் வேதத்தில் நல்லுபதேசங்களுக்குப் பின்னர், எழுதியிருக்கிருேம்.'' ''நிச்சயமாக பூமியை என்னுடைய அடியார்களில், நல்ல நடத்தையுடையவர்கள் தாம் அனந்தரங் கொள்வார்கள் என்று'' [அத்: 22, வச: 105]

தாவூத் [அலை] அக்காலத்தில் கொடுமை மிக்க அரசனுக விளங்கிய ஜாலூத்தை [கோலியத்]வெற்றிகொண்டு, ஆட்சியையும், இறைதூதையும் பெற்று ஆட்சியாளராகவும் நபியாகவும் விளங்கினுர்கள். அகிலத்தில் நல்லவர்கள் பொறுப்பில் ஆட்சி அமையும் போதுதான் சாந்தியும், நீதியும் நிலவும் என்பதற்கு இலச்கணமாக தாவூத் நபியின் ஆட்சி அமைந்துள்ளதை வரலாறும் அல்குர் ஆனும் தெளிவு படுத்துகின்றன. தாவூத் நபிக்கு கொடுக்கப்பட்ட வேதம் பொறுமையை முதன்மையாகக் கொண்டதாகும்.

இன்ஜீல் [இவாஞ்சலிசம்] வேதம் ஈஸாநபிக்கு [இயேசு] அருளப்பட்டது என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது. ஈஸா அலைஹில் ஸலாம் பற்றி அல்குர்ஆனின் பல அத்தியாயங்களிலும்குறிப்பிடப்படுகின்றன. குறிப்பாக மரியம் [அலை] மேரி அவர்களின் புதல்வரான அவர்கள் 'குன்'என்றும் அல்லாஹ்வின் உத்தரவால், மேரியின் கற்பத்தில் தரித்தார்கள். அது அல்லாஹ்வின் அற்புதங்களில் ஒன்ருகும். ஆதம்நபி [ஆதாம்] யை எவ்வாறு தனது 'குன்' என்ற சொல்லைக் கொண்டு [illegible] அதேபோன்றுதான் ஈஸா நபியும் தந்தையின்றி தாயின் கற்பத்தில் தரித்தார்கள் என்னும் விளக்கத்தை அல்குர் ஆன் தருகிறது.' மர்யமை நோக்கி மலக்குகள், மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய 'குன்'— ஆகுக என்ற ஒரு சொல்லைக் கொண்டு உனக்கு ஒரு மகவை அளிக்க நன்மராயங் கூறுகின்ருன். அதன்பெயர் 'மரியமுடைய மகன் ஈஸா மஸீஹ்' என்பதாகும். அவர் இம்மை மறுமையில் மிக்க கம்பீரமானவராகவும், இறைவனுக்குமிக்க நெருங்கியவர்களில் ஒருவராகவுமிருப்பார்'' என்று கூறினுர்கள். [அத்:3, வச: 45]. முன்னிருந்த நபிமார்களாகிய அவர்களுடைய அடிச்சுவடுகளிலேயே மர்யமுடைய மகன் ஈஸாவையும் நாம்அனுப்பிவைத்தோம். அவர் தன்முன்னிருந்த தவ்ருத்தை உண்மையாக்கி வைப்பவராக இருந்தார். அன்றி, அவருக்கு இன்ஜீல் என்னும் வேதத்தையும் நாம் அருளினேம். அதிலும் நேர்வழியும் பிராகசமும் இருக்கின்றன. அது, தன் முன்னுள்ள தவ்ருத்தை உண்மையாக்கி வைக்கின்றது. பயபக்தியுடையோருக்கு அது ஒரு நேர்வழி (காட்டி)யாகவும் நல்லுபதேசமாகவும் இருக்கின்றது.'
[அத்: 5, பக்: 46]

ஈஸா அலைஹிஸ்ஸலாமுக்கு நூற்றி எழுபது ஆண்டுகளுக்குப்பின், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மக்காவில் பிறந்தார்கள் அவர்களது நாற்பதாவது வயதில் [610] நபித்துவம் கிடைத்தது. முன்னைய நபிமார்களின் போதனைகளின் பின்னணியில் மனித சமுதாயத்தின் வாழ்க்கையின் மறுமலர்ச்சி செய்வதற்காகவும், அவர்களது பணி ஆரம்பமாகியது. இருபத்தி மூன்று ஆண்டுகள் இறை தூதுகள், ஜிப்ரீல் (கப்ரியேல்) மூலம் அருளப்பட்டன. சுமார் ஆருயிரத்து ஆறுநூற்று அறுபத்தாறு வசனங்கள் கொண்டதாக முஹம்மது நபிக்கு அருளப்பட்ட வேதவசனங்கள் அமைந்தன. முன்னர் அருளப்பட்ட வேதங்களிலும் முஹம்மது நபியின் வருகைபற்றி அறிவிக்கப்பட்டுள்ளதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. ''எவர்கள் எழுத்தாற்றல் அற்ற இந்த தூதராகிய நபியைப் பின்பற்றுகிருர்களோ அவர்கள் தங்களிடமுள்ள தவ்ருத்திலும், இன்ஜீலிலும் இவரைப்பற்றி எழுதப்பட்டிருப்பதைக்காண்பார்கள். இத்தூதரோ; அவர்களை நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஏவி, பாபமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்குவார். நல்லவைகளையே அவர்களுக்கு ஆகுமாக்கி வைப்பார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்துவிடுவார். அன்றி அவர்களுடைய பழுவை அவர்களை விட்டுப்போக்கி அவர்கள் மீதிருந்த விலங்குகளையும் நீக்கிவிடுவார். ஆகவே அவருக்குஉதவி செய்து அவர்மீது அருளப்பட்ட ஒளிமிக்க இவ்வேதத்தைப் பின்பற்றுகிருர்களோ அவர்கள் தாம் சித்திபெற்றவர்கள்''
(அத்: 7, வச: 157)

முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இறுதிநபி என்பதை அல்குர்ஆன் கீழ்வருமாறு தெளிவு படுத்துகின்றது ''உங்களுடைய ஆண்களில் எவருக்கும் முஹம்மதுநபி' தந்தையாக இல்லை. ஆனுல் அவரோ அல்லாஹ்வுடைய தூதராகவும் நபிமார்களுக்கு இறுதி முத்திரையாகவும் இருக்கின்ருர். நபியே! நிச்சயமாக நாம் உம்மைமனிதர்களுக்குச்சாட்சியாகவும், நன்மாராயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பிவைத்திருக்கின்ருேம்''
(அத்: 33, வச: 40)

ஆகவே முஸ்லிம்கள் தீர்க்கதரிசிகள் விஷயத்தில் முன்னர் வேதங்கொடுக்கப்பட்ட நபிமார்களையும் விசுவாசிக்கின்ருர்கள். இவ்விசுவாசமே மூஸா(மோஸஸ்) ஈசா(இயேசு) ஆகியோர்களைக் கண்ணியப்படுத்த காரணமாக அமைகின்றது என்பது முக்கிய அம்சமாகும்.

## கையெழுத்துப் போடுகிறேன்!

கையெழுத்துப் போடுகிறேன், கலியாணமாம் எனக்கு
செய்யாள்—அவள்ஓர் சிவப்பி - தமிழ்க்கவிதை!
மெய்யெழுத்தோடு என்தன் உயிர் எழுத்துச்சேர்கையிலே
உயிர்மெய்யெழுத்து! ஆம், உதரப் பயிர் ஒன்று
உருவாகி ஓர் பத்தாம் மாதம் பிறக்கையிலே
உயிரோடு வந்திந்த ஊரை அழைக்கிறதே.
செய்யாள் - அவளென் சிவப்பி - தமிழ்க்கவிதை
அம்மாவும் ஆகின்ருள்!
''(ஆண்இல்லைப்) பெண்'' என்று
தாதி வெளிவந்து தமிழ் செய்ய அந்த உரை
காதில் அமுதம் கலக்க அந்தத் தாமரைக்கு
மேதினியில் வாழ மாதினி என்ருேர் பெயரும்
இட்டோம். அப் பிள்ளைத் தமிழ் தவழ்ந்து, தான்எழுந்து
மெல்ல நடந்து... விழுந்து... எழுந்து... ஓடிவந்து
செல்லம் பொழிந்து... சிறுக வளர்ந்தெழுந்து
மொட்டாகித் தாய்மை முகையரும்பிப் பக்குவமும்
பட்டாளே ஐயா!
படிக்க வெளிக்கிட்டு,
வேம்படிக்குச் சென்ருள்! விளையாட்டே? தாய் உடனே
பாம்படிக்கும் ஆம்பிளையைப் பெற்றவள்போற்
தான் மகிழ்ந்தாள்.
'சுட்டார்' சுடும்பொழுது சூட்டுக்குத் தான் தப்பி
வீட்டுட் பலநாட்கள்! வீதியிலும் சின்னுட்கள்
பாட்டுக் கிலக்கணம் (என் பாசமகள்) தான் அலைந்து
கோட்டையிலே பேயென்று கூறுவதைக் கேளாமல்
கும்பிட்டு மன்ருடி கோட்டைப் புறஞ்சென்று
ரேமுக்கு மட்டும் ஒரு தேர்வுக்குப் போய், எழுதி
றிப்போட்டை மட்டும் அங்கு வாங்கிவந்து, வேம்படியின்
மாணவிநான் என்று மனநிறைவு கொள்கையிலே...
வாணி அவள் வீற்றிருந்த தாமரைப்பூம் பொய்கையை'', எம்
காணி'' எனவோர் கரடிவிட்டு, அவ்விடத்தை
விட்டு வெளியேற 'ஆயிரமாம் மீற்றர் எனும்
சட்டத்தை'ப் போட்டுச் சதிசெய்யும் 'ஆண்டவனே'
தாங்கள் தருமிஷ்டர் என்பதனுற் கூறுகிறேன்
எங்கள் இளம் பெண்கள் இரண்டாயிரம்பேரும்
தங்கள் இடம் என்று தருக்கும் இந்த ''வேம்படியை
நீங்கிடுங்கள்'' என்பதுபோல் நீங்கள் இட்ட சட்டத்தை
''ஐயா! பிரபு! திருப்பி எடும்'' என்று, இரந்து
கையெழுத்துப் போடுகிறேன்! என்னுடைய கையெழுத்து
மெய்யெழுத்தே ஐயா! உம்முடைய பொய்யெழுத்தை
அழித்தெழுதும்! அக்கொடிய ஆயிரமாம் மீற்றர்
புழுத்த பகிடி ஐயா! பொய் களவு! ஓர் சூது
கொளுத்தி.. வெடிசுட்டு... கொள்ளை மிக அடித்து
அழிக்கிறதே போதும் ஐயா. 'ஆயிரமாம் மீற்றர்'
கிழிக்கிறதே எம்முடைய பிஞ்சுக்கவிதைகளை.
குளிக்கிறது உம்வீரர் குருதியிலே என்ருலும்
'புத்தம் சரணங் கச்சாமி' என்பது ஒரு
சத்தமா..? இல்லை எனின், 'சத்தியத்தின் கையெழுத்தை'
நன்கு மதித்து நரக அசுரர்களை
இங்கிருந்து மாற்றுங்கள்! இல்லையெனில் உம்முடைய
சட்டத்தையேனும் தளர்த்துங்கள் சாமி ஐயா.

— சத்தியசீலன்

★ ஆயிரம் மீற்றர் சட்டத்தினுல் 500 மீற்றரில் இருக்கும் வேம்படி பாதிக்கப்படுவதால் அச்சட்டத்தை மறு பரிசீலனை செய்யுமாறு அதியுத்தமருக்குக் கருணை மனு அனுப்புகிற கைழுத்துப் பேரணியில் ஒரு பெற்ருர் என்ற முறையில் கையெழுத்திட்ட கவிஞன் ஒருவனின் மெய் யெழுத்து இந்தக் கவிதை.

## நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நூலகம்

யாழ். நகரின் கல்விச் சுரங்கமான பொதுநூல் நிலையம் எரிந்து பலரது அறிவுத்தாகத்திற்குப் பெரும் இழப்பாகவிருந்த குறையினை ஓரளவு தீர்க்க யாழ். நகரில் அமைந்துள்ள அமலமரித் தியாகிகளின் தலைமையகமானதொடர்பகத்தில் மூன்று மாடிகளில் அமைந்துள்ளது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நூலகம்.

எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கும், ஆய்வுக்கும் துணை புரியும் எண்ணம் 21-5-1982ல் ஆரம்பிக்கப்பட்ட இந்நூல் நிலையம் பன்னீராயிரத்துக்கும் அதிகமான நூல்களைக் கொண்டுள்ளது காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பொதுமக்களின் வசதிக்கமைய இயங்கிவரும் இந்நூல் நிலையம் தமிழர் சமுதாயத்திற்குக் கிடைத்த அரியதொரு அறிவுப் பொக்கிஷம்.

— ஜோ. பாலா

## புதிய புத்தகம்

### 'வர்த்தக மாற்று விகிதம்'

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துப் பொருளியல்துறை விரிவுரையாளர் ந. பேரின்பநாதன் எம். ஏ. எழுதியுள்ள 'வர்த்தகமாற்று விகிதம்' [கோட்பாடும் நடைமுறையும்] என்ற நூல் வரப்பெற்ருேம். இந்நூலில் கூறப்பட்டுள்ள 'வர்த்தக மாற்று விகிதம்' தொடர்பான உலக நடைமுறைகள் குறித்து பொருளியலை ஒரு பாடமாகப் பயிலும் உள்வாரி, வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள், பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கு மிகுந்த தெளிவான விளக்கத்தினை அளிக்கவல்ல சிறிய கைந்நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

ஆரம்பநிலையில் பொருளியலறிவைப் பெறவிரும்பும் க. பொ. த. [உயர்தர] மாணவர்களுக்கும் பிறருக்கும் பயன்படும் முறையில் 'கேள்வி நெகிழ்ச்சி, நிரம்பல் நெகிழ்ச்சி பற்றிய தத்துவங்களைத் தமது முதலாவது வெளியீட்டில் விளக்கிய இவ்வாசிரியர் 'வர்த்தகமாற்று விகிதங்கள் கணிக்கப்படும் முறைமையினைப் பின்வருமாறு பாகுபடுத்தி விளக்கிச் செல்கின்ருர்.

வர்த்தகமாற்று விகிதங்களின் வகைகள் வருமாறு; [1] தேறிய பண்டமாற்று வர்த்கமாற்று விகிதம் அல்லது பொருள் வர்த்தகமாற்று விகிதம். [2] மொத்த பண்டமாற்று வர்த்தகமாற்று விகிதம், [3] வருமான வர்த்தக மாற்று விகிதம். [4] தனிக்காரணி வர்த்தகமாற்று விகிதம். [5] இரட்டை காரணி வர்த்தக மாற்று விகிதம் [6] மொய்ச்செலவு வர்த்தக மாற்று விகிதம் [7] பயன்பாட்டு வர்த்தக மாற்று விகிதம்.

இவையொவ்வொன்றினது தனித்த இயல்புகளும், பயன்பாடுகளும் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையில் நிலவும் 'திறந்தபொருளாதார'க் கொள்கை சம்பந்தமான விடயங்களும் அலசப்பட்டுள்ளமை இந்நூலினுல் நாம் பெறும் பயன்பாட்டினை அதிகரிக்கச் செய்துள்ளது.

கல்விநோக்கில், இலகுவிலே கிடைக்கத்தக்க ஒருபொருளைப்பற்றிய விரிவும், விளக்கமுடையநூல் [வர்த்தகமாற்று விகிதம்] [கோட்பாடும் நடைமுறையும்] இதில் க. பொ. த. [உயர்தர] பொருளியல் மாணவர்களுக்கான 20 வினுவிடைகள் தனித்த நூலாக இணைப்பாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கனகசபாபதி நாகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் இலங்கைத் தமிழ் அகதிகள்!

**இலங்கையில் தொடரும் வன்செயல்களினுல் பாதிக்கப்பட்டு தமிழ்நாடு வந்து தங்கியிருக்கும் தமிழ் அகதிகளின் நிலையை ஆராய்வதற்காக 'Refugees' என்ற சஞ்சிகை, விசேஷ நிருபர் ஒருவரை இந்தியாவுக்கு அனுப்பியது. அவர் இலங்கை அகதிகள் தொடர்பாக எழுதிய கட்டுரை இங்கு தரப்படுகிறது.**

இலங்கையில் கடந்த 83 ம் ஆண்டு தமிழருக்கெதிரான வன்செயல்களின் காரணமாகச் சுமார் ஒரு லட்சத்து முப்பதினுயிரம் பேர் அகதிகளாகத் தமிழ் நாடு வந்துள்ளனர்.

51 இலும் 61 இலும் நிறைவேற்றப்பட்ட சர்வதேச அகதிகள் சாசனங்களில் இந்தியா கைச்சாத்திடவில்லையாயினும் இந்தியா வந்து சேர்ந்த இந்த மக்களை இந்திய அரசாங்கம் அகதிகளாக ஏற்றுக்கொண்டது. ஆயினும் இந்தியா ஐக்கிய நாடுகளுக்கான அகதிகளின் தூதுவரிடம் இவர்களுக்காக உதவி கோரவில்லை. சர்வதேச உதவி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களுக்குள் பிரவேசிக்க முடியாதெனினும் பல ஸ்தாபனங்கள் உள்ளூர் அரசு சார்பற்ற ஸ்தாபனங்களினூடாக உதவிகளைச் செய்து வருகின்றன. இவற்றில் ஒன்று பிரிட்டிஷ் நிறுவனமான 'ஒக்ஸ்பாம்' (Oxfam).

இந்தியா வந்துள்ள இவ்வகதிகளை இருவகையினராகப் பிரிக்கலாம். முதலாவது வகையினர் நகரங்களிலும் பட்டினங்களிலும் குடியமர்ந்து இயன்றவரை தம்மைத்தாமே பராமரித்துக் கொள்கிறவர்கள். இவர்களில் சுமார் 75 ஆயிரம் பேர் இங்குள்ளனர். ஏனைய அகதிகள் அரசாங்கப் பராமரிப்பில் முகாம்களில் தங்கியுள்ளனர். இவர்களே இரண்டாம் வகையினர்.

முதல்வகை அகதிகள் மத்தியவர்க்கத்தை அல்லது மேல் வகுப்பைச் சேர்ந்தவர்கள். தமிழ்நாட்டில் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை போன்ற பகுதிகளில் வாடகை வீடுகளில் தங்கியிருக்கும் இவர்கள் தமது பிள்ளைகளை அங்குள்ள பாடசாலைகளிலேயே சேர்த்துள்ளனர். அத்துடன் இவர்கள் தமக்கென வேலைகளைத் தேடியோ அல்லது பணம் சம்பாதிக்கும் வேறு வழிகளிலோ ஈடுபட்டுள்ளனர். இவை சட்டப்படி தடைசெய்யப்பட்ட செயல்கள். ஆயினும்; இந்திய அரசாங்கம் இதனைப் பற்றி கருத்திற் கொள்வதாக இல்லை. இவர்களினுல் இப்பகுதிகளில் பொதுவாக வீடுகளின் வாடகைகள் ஏறியுள்ளதெனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இவர்களில் 15 ஆயிரம் பேர் சிறு வியாபாரங்களை ஆரம்பிக்கப் பண உதவி கேட்டுள்ளதாகச் சென்னைப் பல்கலைக்கழக ஆய்வொன்று கூறுகிறது. ஆயினும் இந்திய அரசு இதற்குச் செவிசாய்கவில்லை. மேலும் 45 வீத அகதிகள் வெறெரு வழியில் நிதிஆதரவு இல்லாமல் வாழுவது கடினம் எனக் கூறியுள்ளனர்.

ஆயினும் தமிழ்நாட்டு மக்களின் எதிர்ப்புணர்ச்சி பொதுவாக முகாம்களில் வாழும் அகதிகளின் மீதே வளர்ந்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

முகாம்களில் வசிப்பவர்களின் நிலை என்ன? 2வது வகையைச் சேர்ந்த இவர்கள் தமிழகமெங்கும் அமைக்கப்பட்டுள்ள 70 முகாம்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலோர் மன்னூர் மாவட்டத்தில் இருந்துவந்த மீனவர்களும், விவசாயிகளுமாவர். அரசப்படைகளின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் உடுத்த உடைகளுடனேயே பெரும்பாலானேர் படகுகளிலேறி இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர். இராமேஸ்வரத்துக்கு வந்து சேர்ந்தவுடன் இவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டு பதியப்படுகின்றனர். பின்னர் சுமார் 7 மைல் தொலைவிலுள்ள மண்டபம் முகாமுக்கு அனுப்பப்படுகின்றனர்.


இலங்கையிலுள்ள பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்குச் செல்லும் இந்தியர்கள் தங்கியிருப்பதற்காகச் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட மண்டபம் கடந்த சில ஆண்டுகளில் இன்னும் பெருப்பிக்கப்பட்டுள்ளது.

அங்குவந்து சேரும் அகதிகள் குடும்பமொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு அறைகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தண்ணீர் வசதி, மின்சாரம், மலசலகூடங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரி இதமான கடற்காற்று ஆகியவற்றுடன் கூடிய மண்டபத்தில் இவர்கள் ஒரேயடியாகத் தங்கிவிட எண்ணுவதில் வியப்பில்லைத் தான்!

ஆனல் மண்டபம் ஒரு தற்காலிக முகாமாகும். மண்டபத்திலிருந்து அவர்கள் ஏனைய முகாங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அங்கு அவர்கள் சிறுசிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பொதுக் கட்டிடங்கள், பாடசாலைக் கட்டிடங்கள், புயல் பாதுகாப்பு முகாமாக மாற்றப்பட்டுள்ள கோயில்கள் ஆகியவற்றில் தங்கவைக்கப்படுகின்றனர். இவ்வாறுனஒரு [கோயில்] முகாமில் பெரியோர்களும், சிறியோர்களுமாகச் சுமார் 30 பேர்வரை ஒருஅறையில் தங்கியுள்ளனர்.

ஒழுங்கான தண்ணீர் வசதியோ, மின்சாரமோ, மலசலகூடமோ இங்கில்லை ஆயினும் ஓலைக் குடில்களிலோ அல்லது கூரை இல்லாத குடில்களிலோ வாழும் இந்தியர்களைவிட இவர்களின் நிலை பரவாயில்லைத்தான்!

ஒவ்வொ அகதிக்கும் [அவர் எவ் வகுப்பாயிருந்தாலென்ன] ஒரு பாய், ஒருபோர்வை, இரு துவாய்கள், ஆணுயிருந்தால் 1சேர்ட்டும் இரு சாரங்களும், பெண்ணுயிருந்தால் 2 சாரிகளும் 2 அரைச் சட்டைகளும் வழங்கப்படுகின்றன. அத்துடன் குடும்பமொன்றுக்கு 2 பானைகள் (சோற்றுக்கு ஒன்று, கறிக்கு ஒன்று) 2 மூடிகளும் 2 கோப்பைகளும் மற்றும் இரு பீங்கான்கள், 2 கரண்டிகள் ஆகியவையும் வழங்கப்படுகின்றன. ஒரு அகதிக்கு வாரத்துக்கு 55 இந்திய ரூபாக்களும், சிறுவராயின் 27½ இந்திய ரூபாக்களும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு 8 பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு மாதம் 1000 ரூபாய்க்கு மேல் அதாவது முகாமை நிர்வகிக்குப் அதிகாரியின் சம்பளத்துக்குச் சமமாகக் கிடைக்கிறது. ஆனல் இவர்களுக்கு அரிசி சாதாரண விலையிலும் பார்க்க 4 மடங்கு குறைவாகவே விற்கப்படுகிறது. அத்துடன் போக்குவரத்து இலவசம். முகாம் சட்டதிட்டங்களின் படி வெளியே போகும் எவரும் இரவு 10 மணிக்குள் முகாமுக்குத் திரும்பிவிட வேண்டும். ஆனல் இதுஅமுல்படுத்தப்படுவதில்லை வாரத்துக்கொரு முறை அகதிகள் தம்மைப்பதிந்து கொள்ளுதல் மட்டும் தவருது நடைபெறும். இல்லாவிட்டால் பணம் மற்றும் சலுகைகள் யாவும் நின்று விடும்.



இவ் வசதிகளும் தமக்கு அளிக்கப்படும் விருந்தோம்பலுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். தமக்கு நேரும் அசௌகரியங்களுக்கு முகாம் அதிகாரிகள் பொறுப்பில்லை என்பதை இவர்கள் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

இங்குள்ள அகதிகளுக்கு உள்ளூர் கிறிஸ்தவ ஆலயங்கள் உட்படப் பல பொது நலஸ்தாபனங்கள் உதவிவருகின்றன. மண்டபத்தில் நியாயவிலைக்கடை ஒன்றை இவர்கள் நடத்துகின்றனர். அங்கு நடக்கும் கிறிஸ்தவ ஆராதனைக்குப் பெருந்தொகையான மக்கள் பக்தி சிரத்தையுடன் கலந்து கொள்கின்றனர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தினுல் மேற்கொண்ட ஆய்வொன்றின்படி இவர்களில் 75வீதமானேர் நிலைமை சீரடைந்ததும் நாடுதிரும்பவிரும்புகின்றனர். 5 வீதமானேர் ஜீவனேபாயத்துக்கு வழிகிடைப்பின் இந்தியாவிலேயே தங்கிவிட எண்ணுகின்றனர். எஞ்சியோர் மேற்கு நாடுகளில் தமிழருக்குள்ள அனுதாபத்தைப் பயன்படுத்தி அங்கு செல்லக்கூடும்.

மேலும் இந்த ஆய்வுகளின் படி 10 வீதமான அகதிகள் இலங்கைவன்செயல்களில் தங்கள் குடும்பத்தில் ஒருவரை அல்லது பலரை இழந்துள்ளனர். மூன்றிலொரு பங்கினரின் வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. அரைப் பகுதியினர் இவ்வன்செயல்களினுல் நேரடியாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

— தமிழில் 'சேரு'

---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

# விண்வெளித் துயரம்

னுன். ''அப்பலோ 11' என்ற விண்கலத்தின் மூலம் சந்திரனை அடைந்த அமெரிக்கரான நீல் ஆம்ஸ்ரோங் பூமியின் முதலாவது மனிதராகச் சந்திரனில் இறங்கினுர்.

அதன் பின்னர் விண்வெளித்துறை பல பாரிய வளர்ச்சிகளை அடைந்து விண்வெளிக்கு ஆராய்ச்சிக் கூடங்கள் அனுப்பப்பட்டு பல்வேறுவிதமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவற்றில் ஒன்றுதான் அமெரிக்காவின் 'ஸ்கைலாப்' இதன் ஆயுள்காலம் எதிர்பாராத விதமாக குறைந்து இதன் பாகங்கள் பூமியில் விழுந்தன. [நாடெல்லாம் அப்போது ஆகாயத்திலிருந்து எது விழுந்தாலும் அது 'ஸ்கைலாப்' எனக் கதைத்தது நினைவிருக்கலாம்]

விண்வெளிப்பயணங்கள் சாதனைகளை மட்டுமன்றி வேதனைகளையும் ஏற்படுத்தின. 67 ம் ஆண்டில் 3 அமெரிக்க பயணிகள் மரணமானுர்கள். 71 ஜுலையில் 3 சோவியத் வீரர்கள் தரையிறங்குகையில் அழுத்தம் காரணமாக மரணித்தனர்!

இதனிடையே விண்வெளித்துறையில் பல புதிய யோசனைகள் வைக்கப்பட்டன. விண்வெளிக்குச் சென்று மீளும் கலமானது மீண்டும் பாவனைக்குட்படுத்த முடியாது. இதனுல் ஒவ்வொரு விண்வெளிப் பயணத்துக்கும் பெருந்தொகைப்பணம் செலவிட வேண்டியிருந்தது.

இக்குறையை நிவர்த்தி செய்ய எழுந்ததே அமெரிக்காவின் விண்வெளி ஓடத்திட்டம் (Space shuttle program) அதாவது இந்த ஓடங்கள் ஏனைய விண்வெளி ஓடங்களைப் [ரெக்கெட்டுகள்] போல் நிலைக்குத்தாகப் புறப்பட்டு மீண்டும் தரையிறங்கையில் ஒரு சாதாரண விமானத்தைப் போன்று விமான [விசேஷ] ஓடுபாதைகளில் தரையிறங்கும். இவ்வோடத்தை மீண்டும் இன்னெரு விண்வெளிப் பயணத்திற்கும் பயன்படுத்தலாம். இவ்வாறு சுமார் 100 முறை இவ்வோடங்கள் பயன் படுத்தப்படலாம் என நம்பப்படுகிறது.

இவ்வகையான ஒருஓடத்தை முதலாவதாகத் தயாரித்த பெருமை அமெரிக்காவையே சாரும். 'என்டர்ப்றைஸ்' என அழைக்கப்படும் இவ்வோடம் பயிற்சிகளுக்கே பயன்படுத்தப் படுகிறது.

முதலாவது விண்வெளி ஓடத்தை விண்வெளிக்கு அனுப்பிய பெருமையும் அமெரிக்காவையேச் சாரும்.

81-ம் ஆண்டு ஏப்றல் மாதம் 12-ம் திகதி காலை ஏழு மணியளவில் உலகின் 1-வது விண்வெளிஓடம் 'கொலம்பியா' புறப்பட்டது.

கொலம்பியாவும் கென்னடி விமான நிலையத்திருந்தே புறப்பட்டது. இக்கலத்தின் தலைவராக ஜோன் யங் கடமையாற்றினுர்.

கொலம்பியா இன்னெரு சாதனையையும் [illegible] அதாவது தனது [illegible] பயணத்திலேயே மனிதரையும் சுமந்து கொண்டு சென்றது. ஏனைய கலங்கள் யாவும் பரீட்சார்த்தமாக ஓடவிடப்பட்ட பின்னரே மனிதர் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

இந்தஓடம் சரியாக 2 நாட்கள் 6 மணித்தியாலம் 20 நிமிடங்கள் 48 செக்கன்களின் பின்னர் அமெரிக்காவின் எட்வர்ட் விமானப்படை நிலையத்தில் சாதாரண விமானத்தைப் போல் தரையிறங்கியது.

ஓடத்தின் முதல் பயண வெற்றி அமெரிக்க தேசிய விண்வெளி, பயண சபையை N. A. S. A] சேர்ந்த விஞ்ஞானிகளை, அமெரிக்க சக்தியைப் பற்றி பிதற்றவைத்தது. 'கொலம்பியா'வைத் தொடர்ந்து வேறு மூன்று ஓடங்களும் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டன. இவை 'சலஞ்சர்' 'டிஸ்கவரி' 'அட்லாண்டிஸ்' ஆகியவை.

ஆயினும் ஒரு விண்வெளி ஓடம் கட்டுவதென்பது இலகுவான விடயம் அல்ல. அது மிகவும் சிக்கல் நிறைந்த இயந்திரமாகும் [Complicated] சிலவேளைகளில் ஓடத்தின் இயந்திரத்தில் ஒரு கோளாறை கண்டுபிடிக்கவே பல வாரங்கள் செல்லும். அதைத் திருத்த இன்னும் சில வாரங்கள்!

எது எவ்வாறு இருப்பினும் அமெரிக்காவின் விண்வெளி ஓடப் பயணங்கள் [illegible] தன 'கொலம்பியா'வைத் தொடர்ந்து சலஞ்சரும் விண்வெளிப்பயணங்களைத் தொடர்ந்தது.

இந்த ஓடங்கள், பூமியிலிருந்து செய்மதிகளைக் கொண்டு சென்று விண்வெளியில் விடவும் ஏற்கனவே விடப்பட்டு பழுதடைந்துள்ள செய்மதிகளை அங்கேயோ திருத்தவோ அல்லது பூமிக்குக் கொண்டுவரவோ பெரிதும் பயன்பட்டன. இவ்வகையில் இந்த ஓடங்கள் இராணுவ செய்மதிகளைக் கொண்டு செல்லவும் பழுதடைந்தவற்றை திருத்தவும் உதவின.

இதனிடையே சோவியத் யூனியனும் தனது ஓடத்தைக் கட்டும் பணியில் ஈடுபட்டது. சோவியத்தின் ஓடம், அமெரிக்காவினுடையதைவிட சிறிது. ஆயினும் இராணுவ ரீதியில் இது அதிக பயனைத் தரவல்லது.

83-ம் ஆண்டில் முதலாவது அமெரிக்க பெண் விண்வெளி வீரராக சலி கிறிஸ்டன் ரைட் [38 வயது] 'சலஞ்சரில்' பயணம் செய்தார். பெண்களும் ஆண்களும் சமமாக விண்வெளியிலும் வேலை செய்யலாம் என்பதை இது உணர்த்தியது.

இப்பயணங்களின் பின்னர் பலப்பல திட்டங்கள் தீட்டப்பட்டன விண்வெளிக்கு ஒரு அரசியல் வாதியைக் கொண்டு செல்வது, சாதாரண மக்களை அழைத்துச் செல்வது [வாடகைக்கு]ப் போன்றவை தான் இவை.

இதன் ஒரு கட்டமாகவே கடந்த செவ்வாய்க்கிழமை 28-ம் திகதி ஒரு ஆசிரியை உட்பட ஏழு பயணிகள் 6 நாள் விஜயமொன்றை மேற்கொண்டு 'சலஞ்சரில்' சென்றனர். திரு. மக்கொலிஸ் [இந்த ஆசிரியை] விண்வெளியில் ஓடத்தில் இருந்து கொண்டே சுமார் 25 லட்சம் அமெரிக்க கனடிய மாணவர்களுக்கு தொலைக்காட்சிப் பாடங்களை நடத்தவிருந்தார்.

இப்பாடங்கள் ''இறுதிப் பயணம்'', எங்கே இருந்தோம். எங்கே செல்கிறேம் எதற்காக?'' என்ற தலைப்புகளில் நடத்தப்படவிருந்தன. இக்கலத்தில் ஜுடித் ரெஸ்னிக் என்னும் இன்னுமொரு பெண் விஞ்ஞானியும் பயணம் செய்தார்.

சாலஞ்சரின் இந்த இறுதிப் பயணம் இருமுறை பல்வேறு காரணங்களுக்காகப் பின் போடப்பட்டன.

எது எப்படியோ 'சலஞ்சர்' வெடித்து சிதறிவிட்டது. பயணிகள் மாண்டு விட்டனர் இதற்கு பலர் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர்.

விடை கிடைக்கும் வரை பொறுத்திருப்போம். அது வரைபயணத்தின்போதுமரணமடைந்த ஏழு பிரயாணிகளின் ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திப்போம்!

---

★

## அன்பளிப்பு

பொருளாதாரமின்றி
போஷாக்குக் குறைந்த
நாட்டிற்கு
அமெரிக்கா கொடுத்த
அன்பளிப்பு-
ஆயுதம்!

- பசுவூர்க்கோபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீராமஜெயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் குரோதன வருடம் தைமாதம் 21-ம் திகதி (03-02-86) திங்கட்கிழமை முன்னிரவு 6-56 மணிமுதல் 8-01 மணிவரையுள்ள தசமி திதியும் அனுஷ நட்சத்திரமும் சிங்க லக்கின சுபமுகூர்த்தமும் நிறைந்த சுபவேளையில்

எங்கள் புத்திரன்
திருநிறைச் செல்வன்
**வே. தர்மகுலசிங்கம்**
[பொறியியலாளர், சவூதி அரேபியா]
அவர்களுக்கும்

எங்கள் புத்திரி
திருநிறைச் செல்வி
**சி. நாகேஸ்வரி**
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் குடும்பச் சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

**கார்த்திகேசு வேலாயுதம்,**
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

**கந்தையா சிவப்பிரகாசம்,**
[N. K. S.]
மார்க்கட், சங்கானை.

[A 520]

## ட்ராக்டர் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]

இனந்தெரியாத நால்வரினல் நேற்று அதிகாலை கடத்திச் செல்லப்பட்ட யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினருக்குச் சொந்தமான ட்ராக்ரர் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் முயற்சியில் மீண்டும் மாநகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ச]

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தேவை

மின்தறியில் அனுபவமுள்ள தொழில்நுட்பவியலாளர்களும், நெசவாளர்களும் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் C 517 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 517

### விற்பனைக்கு

நல்ல தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து வசதி, சகல பிரயோசனங்களும் உள்ள வீடு எட்டுப் பரப்பு ஏழுகுழி காணி மலிவு விற்பனைக்குண்டு. தொழிற்சாலைக்கு மிகவும் ஏற்றது. வ. சி. இராசையா, வடலிஅடைப்பு, பண்டத்தரிப்பு. C 514

Kayts, ஊர்காவற்துறை, சண்முகநாதன் வீதியில் நொத்தாரிஸ் கந்தையா வீட்டுக்கருகாமையில் 10 நெற்பரப்பு காணி விற்பனைக்குண்டு. கடித மூலமும் தொடர்பு கொள்ளலாம். தம்பு காசிநாதன் 3ம் கட்டையடி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். C 510

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30, 9-15
மோகன் — கவுண்டமணி
**டிசெம்பர் பூக்கள்**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
கார்த்திக்—ராதா
நடித்த
**அலைகள் ஓய்வதில்லை**

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
சிவாஜி— கே. ஆர். விஜயா
நடித்த
**நெஞ்சிருக்கும் வரை**

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

புதிய கிராம எழுச்சி திட்ட நிதிக்காக 31-1-86 மாலை 5 மணியளவில் இருபாலையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்ட சாலிகள்.

(1) ப. குணராஜா. 4லாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(2) ராசுகி.வி. உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

(3) ந. சிவகரி. வகுப்பு 10 A, உடுவில் மகளிர் வித்தியாலயம், உடுவில்.

(4) சுபாஷினி செல்வராஜா, Holy Family Convent, Jaffna.

(5) வ.சத்தியசீலன், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(6) S. K.இல.697,15, செட்டித் தெரு,நல்லூர். (C- 513)

## நன்றி நவிலல்



பரராஜசிங்கம்
விஜயரஞ்சன்
[குட்டி]
ஈழமண்ணில்: 08-10-64
ஈழவர் மனங்களில்
12-12-85

கடந்த 12-12-85 வியாழக்கிழமை எம்மைப் பிரிந்து விண்ணுலகேகிய, எமது அருமைப்புதல்வன் விஜயரஞ்சனின் (குட்டி) பிரிவாற்ருது வாடும் எமக்கு, நேரில் வருகை தந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் ஆறுதல் தந்தவர்களுக்கும்; 21-1-86 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்ற குட்டியின் சபிண்டி கரணக் கிரியைகளிலே பங்குகொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ந. பரராஜசிங்கமும்
பாரியாரும்.
இருபாலை வீதி,
கோண்டாவில்.

## பத்து லட்சம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கே. கைலாசநாதக் குருக்கள், யாழ். ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை ஆண்டகை, பிஷப் டி. ஜே. அம்பலவாணர், மௌலவி சதக்கதுல்லா, எஸ். எஸ். கைலாசநாதக் குருக்கள் ஆகியோர் முதலில் மகஜரில்கையெழுத்திட்டனர்.

இவர்களைத் தொடர்ந்து கூட்டத்தில் சமுகமளித்திருந்த பிரஜைகள்குழு இணைப்புக்குழு உறுப்பினர்கள், வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்குழுவினர், அன்னையர் முன்னணியினர், யாழ். வர்த்தகர் சங்கத்தினர், சுமார் 100 பேர் வரை கையெழுத்திட்டனர்.

பிரஜைகள் குழுக்கள் மூலம் கிராமம் கிராமமாக 18 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்து கையெழுத்து சேகரிக்கப் படவிருக்கிறது.

இப் பத்துலட்சம் கையெழுத்து பட்டியலின் பிரதிகள் ஐ. நா. சபைக்கும், வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அனுப்பிவைக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இக்கையெழுத்துப் பட்டியலில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 10 லட்சம் தமிழ், முஸ்லிம் மக்கள் கையெழுத்திடுவார்கள்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தன் இப்பட்டியலில் இறுதியாக நிறைவு கையெழுத்துவைத்து முடித்துவைக்க சம்மதித்துள்ளார். [க]

## மில்க்வைற் மீனாட்சிப்பிள்ளை

இற்றைக்குத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பின்ஞக இல்லறவாழ்வில் புகுந்த செல்லர் என்பாரும் சின்னச்சி என்பாரும் தாங்கள் 1903ஆம் ஆண்டிற் பெற்ற அருமை மகளுக்கு மீனாட்சி எனப் பெயரிட்டனர். மீனாட்சி பிறந்த ஆண்டினைச் சொல்ல அரிய சோபகிருது என்று புலவர்கள் புகழ்வர். அவர் பிறந்த நட்சத்திரமும் தரணி ஆளவைக்கும் சித்திரை மாதத்துப் பரணி நாளாகும்.

யாழ்ப்பாணத்துக் கொட்டடி என்னும் பழையவூரில் சைவத்தமிழ் நாகரிகச் சூழலில் வாழ்ந்த மீனாட்சிப்பிள்ளை 1924ஆம் ஆண்டு, காரைநகரைச் சேர்ந்த முருகேகர் கந்தையா என்னும் விற்பன்னரை விவாகஞ்செய்து, சிக்கன வாழ்வில் செம்மையாக இல்லறம் நடத்திவந்தார்.

கந்தையா மீனாட்சி தம்பதிகளுக்கு அவ்வப்போது மைந்தர் நால்வரும் மகள் ஒருத்தியும் பிறந்தார்கள். அவர்கள் வாழ்வில் 1927ஆம் ஆண்டு ஓரளவுக்குப் பொங்கும் காலமாயிருந்தது. அவ்வாண்டிலேயே கந்தையாபிள்ளை தமது மில்க்வைற் தொழிலகத்தை மிகச்சிறிய அளவில் குடிசைக் கைத்தொழிலாக ஆரம்பித்தார். அதே ஆண்டிலேதான் கந்தையாபிள்ளையின் இரண்டாம் மைந்தன் கனகராசா ஐப்பசி மாதத்துத் திருவோண நாளில் பிறந்தார். அக்காலத்தில் கந்தையாபிள்ளைக்கு ஊரில் சவர்க்காரக்கந்தையா என்னும் பெயர் வழங்கலாயிற்று.

கந்தையாபிள்ளை நகைச்சுவையோடு நையாண்டியும் கலந்து பேசுவதில் சாமர்த்தியம் வாய்ந்தவர். குடும்ப பாரத்தைச் சுமந்தவாறே குடிசைக் கைத்தொழிலை வளர்ப்பதில் பெரும் பங்களிப்புச்செய்தவர் மீனாட்சித் தாயார். மக்களை ஓரளவு படிக்கவைத்த பின். அவரவர்க்கமைவான உத்தியோகங்கள், தொழில்களில் ஈடுபடச்செய்தவரும் மீனாட்சிப் பிள்ளையேதான். பிள்ளைகள் பதவிகளைத் திறம்பட நடாத்தி உயர்வும் புகழும் பெற்றனர்.

மீனாட்சிப்பிள்ளை குடும்பத்தை உருவாக்கிய பெருமையைவிட அவர் குடிசைத் தொழிலை விருத்திசெய்துவந்த வண்ணம் பெரிது, அதில் அவருடையகைவண்ணமும் பெரும் பங்களிப்புச்செய்தது. அந்தக் காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், வெள்ளைக்காரரின் வர்த்தக நிலையங்களான கொம்பனிகள் இறக்குமதி செய்த சவர்க்கார வகைகளுடன், யந்திர வசதிகளற்ற குடிசைத்தொழிலில் உற்பத்தியான மில்க்வைற் போட்டியிட்டுத் தலையை நிமிர்த்தியது என்றால் அது மீனாட்சிப்பிள்ளையின் அயரா உழைப்பு என்றே சொல்லவேண்டும்.

கந்தையாபிள்ளைக்கு இயந்திரசாதனங்கள் அன்று அகப்பட்டிருந்தால், அவர் இலங்கையருக்கே சவர்க்காரஞ்செய்யும் தொழிலதிபராய் மாறியிருப்பார்.

இயந்திரங்கள் இல்லாமையால் மீனாட்சிப்பிள்ளையின் கைவண்ணம் அவ்வேலையைச் செய்தது. அண்மையில் ஒரு நாள் அவர் அருகில் வந்த

[16-ம் பக்கம் பார்க்க]

உயர்தரவகுப்பு மாணவர்களுக்கான
பட்டப்படிப்புகள்
கல்லூரியின் வெளியீடுகள்

"வர்த்தக மாற்றுவிகிதம்"
ஆசிரியர் ந. பேரின்பநாதன் M. A.
[விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)
விலை ரூபா 11-50

"குறியீட்டு அளவையியல்"
வே. யுகபாலசிங்கம் (B. A. Hons)
(உதவி விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)
விலை ரூபா 12-50

"விமான ஒளிப்படவிளக்கங்களுக்கான மூலாதாரங்கள்"
S. T. B. இராஜேஸ்வரன் M. A.
[விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்]
விலை ரூபா 25 00
(G. A. Q., B. A. வகுப்புமாணவர்களுக்குரியது)

"பொது உளச்சார்பும் பொது அறிவும்"
வே. யுகபாலசிங்கம் (B. A. Hons)
விலை ரூபா 25-00

போட்டிப்பரீட்சைகளுக்கும் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சைக்கும் ஏற்றவகையில் எழுதப்பட்டது.

இடைக்குமிடங்கள்

சாரதா புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
துர்க்காஸ் ரேஷனேர்ஸ்,
பஸ் நிலையம், சுன்னுகம். [A 184]

## 30-ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வி
பா. ஐறின் சாந்தி



நெஞ்சம் மறப்பதில்லை
மலர்வு:
25- 04- 1970
உதிர்வு!
05- 01 1986

சாந்தமே உருவான பொற்சிலையே! பாசமெலாம் நீ நிறைத்து பாங்குடனே பந்தியுண்டு நேசமிகு குடும்பத்தினர் மத்தியிலே பயணம் செய்ய ஆள்வோரின் வேட்டுக்கள் உன்உயிரை நெடும் பயணம் மேற்கொள்ளச் செய்தனவோ. கதிகலங்கி நிற்கின்றோம் கண்ணே சாந்தி!! நினைவுகள் தாம் எம்துணையோ?

சாந்தி மறைந்தும் மறையாமல் பல உள்ளங்களில் குடிகொண்டுள்ளார். இவரை இழந்து பர்தவிக்கும் பாச உள்ளங்களுக்கு அமலன் அமைதி அளிப்பதோடு இவரின் ஆன்ம சாந்திக்காக 30 ஆம் நாள் நினைவஞ்சலிப் பலிப்பூஜை 03- 02- 86 திங்கட்கிழமை காலை 6-15 மணியளவில் மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

06-01-86ல் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் விசேடமாக பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்க்கும், மாதகல் சென் தோமஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அப்பா, அம்மா,
அக்காமார், அண்ணன்,
மைத்துனர், உறவினர்.

விவசாய விஸ்தரிப்பு
சேவையாளர்,
பிரதானவீதி,
மாதகல். (C-509)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Diploma in Pharmacy

செய்முறைப் பயிற்சியுடன் கூடிய புதிய பார்மஸி வகுப்புக்கள் 5-2-1986இல் ஆரம்பம்.
தனியார் / அரசாங்க / வெளிநாடு / வைத்திய நிலையங்களில் தொழில் வாய்ப்பு - அரசாங்க வெளிவாரி பார்மஸி, சோதனை விஞவிடையுடன் கூடிய விரிவுரைகள்.

**ஆரம்பம்: 5-2-1986**

## North Ceylon Technical Institute,

NO: 14, ST.PETERS LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.
T'Phone: 24355 [A 160]

# Diploma in Motor Mechanism

உங்கள் கார், மோட்டார் சைக்கிள்கள் பழுது பார்த்தல்.
உங்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்பு.
பாடசாலை மாணவர்க்கு பிரத்தியேக வகுப்புக்கள்.
இலகுமுறை விரிவுரைகள்.

**ஆரம்பம்: 3-2-1986 - 9-00 a.m.**

இத்துடன் MOTOR WINDINGS, PLUMBING, WELDING வகுப்புகளும் ஆரம்பம்.

## North Ceylon Technical Institute,

NO: 14, ST. PETERS LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.
T'Phone: 24355 [A 158]




விலை ரூபா 40/- க்கு மேல

- கேசச் சாயத்துறையில் ஒரு நூற்றுண்டு அநுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்படுகிறது.
- இன்று உலகம் முழுவதிலும், இலங்கையிலும் பெரும் பான்மையானேர் உபயோகிக்கும் ஒரே கேசச் சாயம்.
- சாயம் பூசியபின் எண்ணெய், சவர்க்காரம் ஷம்பு எதனையும் பயமின்றி உபயோகிக்கலாம்.
- உங்கள் கேசத்திற்குப் பொருத்தமான மூன்று வர்ணங்கள், ஷாம்பு வடிவமுட்பட.

**உங்கள் கேசத்தினைப் பராமரிப்போர்**

ஏக இறக்குமதியாளர்கள்:
ராதா டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்
25, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. தொலைபேசி: [illegible]260

## முல்லைத்தீவு நிலைமை

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு இராணுவ முகாமின் பாதுகாப்புக் கருதி, முகாமிற்கு அருகிலுள்ள வைத்தியசாலையின் மதிலையும், இரண்டு கடைகளையும், கரைச்சிக் குடியிருப்பு பகுதியிலுள்ள சில வீடுகளையும் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் குண்டு வைத்து தகர்த்துள்ளனர்.

## இஸ்ரேல் தாக்குதலைக் கண்டித்து கடையடைப்பு

(யாழ்ப்பாணம்)

உலக முஸ்லிம்களின் முதல் தர மதவழிபாட்டுத்தலமான மஸ்ஜிதுல் அக்ஸா மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்பு தாக்குதலைக்கண்டித்து நேற்று சாவகச்சேரி பள்ளிவாசலில் துவா பிரார்த்தனை செய்யப்பட்டது.

இப்பிரார்த்தனை நடைபெறுவதற்கு முன்னர் நண்பகல் 12 மணிதொடக்கம் பி. ப. 2மணி வரைசாவகச்சேரி தமிழ்பேசும் மக்கள் அனைவரும் சகல ஸ்தாபனங்களையும் மூடி கண்டனம் தெரிவித்தனர்.

அரச அலுவலகங்கள், பாடசாலைகள், கடைகள் அத்தனையும் அந்நேரம் மூடப்பட்டிருந்தன. பள்ளிவாசலில் ஜும்மா முடிவில் மௌலவி எம். ஏ ஜலீல் பிரார்த்தனையை நடாத்தினுர். (மா)

## மின் தடையால் பாவனையாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள சில கிராமங்களில் இரவு வேளைகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் அக்கிராமங்களில் நிரந்தரமாக மின்சாரம் பெறும் மின் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில கிராமங்கள் தொடர்ச்சியாக இரண்டு, மூன்று தினங்களுக்கு மின் ஒளியின்றி இருளில் மூழ்கிக்கிடக்கின்றனவாம் சட்ட விரோத மின்பாவனை அதிகரிப்பும் இதற்கு ஒரு காரணமாக கூறப்படுகிறது.

இது குறித்து மக்கள் பெருங்கவலை தெரிவித்துள்ளதோடு மின்சாரத்தை சீராகப் பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மின்சாரப் பகுதியினரை கேட்டுள்ளனர். [ச]

## மயான அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் மயான அபிவிருத்திச் சங்கமொன்று யாழ். அபிவிருத்திச்சபை நல்லூர் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. க. சிவபாதத்தின் அனுசரணையுடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி சைவ தமிழ் பாடசாலையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் சி. க. ச. அன்றூ, செயலாளர் சி. கந்தசாமி பொருளாளர் சி. கணபதிப்பிள்ளை. நான்கு பேர் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவாகியது.

திருநெல்வேலி மயானத்தை யாழ். அபிவிருத்தி சபை நல்லூர் உப அலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருடன் ஒத்துழைத்து அபிவிருத்தி செய்ய இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ச)

## விற்பனைக்கு

1. யாழ். மத்தியூஸ் வீதியில் ஒரு பரப்பிலமைந்த சகல வசதிகளுடனுமான 3 அறை வீடு.
2. யாழ். கோவில் வீதியில் (கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்) 3 பரப்பு. 1½ பரப்புக் கொண்ட இரு காணிகள்.
3. கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு அண்மையாக கண்டி வீதியில், குடியிருப்புக்குகந்த பிரயோசனங்களுடனுன 3 பரப்புக் காணி.
4. வவனியா மன்னுர் வீதியில், கிணறு, வதிவிடம், பிரயோசனங்கள் கொண்ட 5 ஏக்கர் காணி.

தொடர்பு:

**"மல்ரி சேவிசஸ்"**
37(351), மணிக்கூட்டு வீதி,
( வலிங்டன் தியேட்டர் சந்தி)
யாழ்ப்பாணம் C 496

## அறிவித்தல்

**நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் புதிய முகாமைத்திட்டத்தின் கீழ் வழிபடுநர்சபையை அமைத்தலும் அறங்காவலரைத் தெரிவு செய்தலும்.**

மேற்படிகோயில் புதிய முகாமைத்திட்டத்தின் கீழ் எதிர்வரும் பெப்ரவரிமாதம் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள வழிபடுநர் சபையின் முதலாவது கூட்டத்திற்கு அங்கத்தவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அறங்காவலர் பதவிக்கு வேட்பாளராக நிற்க விரும்பும் ஒரு அங்கத்தவர் தமது பெயரினை அதனைமுன்மொழிபவர், வழிமொழிபவர்களின் (அவர்களும் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும்) பெயர் விபரங்களுடனும் அவர்களின் கையொப்பத்துடனும் 10-02-1986ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக எனக்கு அனுப்பி வைக்கவேண்டும் அல்லது அலுவலக நாட்களில் என்னிடம் கையளித்தல் விரும்பத்தக்கது.

மைதிலி சோமசுந்தரம்
உதவி அரசாங்க அதிபரும்,
புதிய முகாமைத்திட்டத்தின் கீழ் வழிபடுநர் சபை அமைக்கத்தகுதி வாய்ந்த உத்தியோகத்தரும்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
வேலணை. 02-02-1986 (C 498)

## பிஸ்கால் விற்பனை

மாவட்ட நீதிமன்றம் மன்னுர்

வழக்கு இல: L - 1190

மீராசாயிபு அப்துல்மஜீத், கரிசல்.
— வழக்காளி

எதிர்

அப்துல் அபுசாலிபு
புதுக்குடியிருப்பு.
— எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளியாகிய புதுக்குடியிருப்பைச் சேர்ந்த அப்துல் அபுசாலிபு என்பவரிடமிருந்து ரூபா 750 நட்ட ஈடாகவும், தொடர்ந்து வருடம் ஒன்றுக்கு ரூபா 1000 மும் (24-4-84 இல் இருந்து) வழக்காளிக்கு துரட்சியிலுள்ள காணியை பாரம் கொடுக்கும் வரைக்கும், இற்றைவரையிலான கோட்டுச் செலவும் பிஸ்கால் செலவும், பவுண்டேஜையும் மேற்குறித்த வழக்காளியாகிய கரிசலைச் சேர்ந்த மீராசாயிபு அப்துல் மஜீத் சார்பில் அறவிடுவதற்காக கீழ் குறித்து சொல்லப்பட்ட ஆதனத்திலுள்ள சகல உரித்துக்களும் 1986ம் ஆண்டு பங்குனி மாதம் 18ம் திகதி காலை 10-00 மணிக்கு மன்னுர் நீதிமன்ற பிஸ்கால் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் மன்னுர் மாவட்டம் மன்னுர் பகுதி மன்னுர் கிழக்கு புதுக்குடியிருப்பில் ''முந்திரிகை அடைப்பு'' என அழைக்கப்படும் காணியிலுள்ள முந்திரிகைத் தோட்டமும் பனந்தோட்டமும் இதன் விசாலம் ஒரு எக்கர்
(ஏ. 1 றூ 0. பே. 0.)


### இதன் எல்லை கிழக்கும் மேற்கும்

K. K. முகம்மது அப்துல் காதரினதும், பங்காளர்களினதும் ஆதனம். வடக்கு றோட்டுக்காக ஒதுக்கப்பட்ட ஆதனம். தெற்கு செ. இப்ருகிமினதும் பங்காளர்களினதும் ஆதனம். இதில் சொரியலில் நாலிலொரு பங்கு (¼).

இவ்வாதனம் குறித்த எதிராளியாகிய அப்துல் அபுசாலிபுக்கு 1959ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி மன்னுர் பிரசித்த நொத்தாரிசு எம். எம். அபுதாகிர் அவர்களால் 3873ம் இலக்க அனுமதி உறுதியால் சொந்தமானதாகும்.

மு. பத்மநாபன்
பிஸ்கால்
மாவட்ட நீதிமன்றம்,
மன்னுர்.

24-01-86
C 500




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலபாடசாலைகளில் புதியவகுப்புகள்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணப் பட்டினத்தில் உள்ள கல்லூரிகளில் ஏற்பட்டு வரும் மாணவர் இடநெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் கல்வி இலாகா நகர்ப்புறங்களில் உள்ள 6ம் வகுப்பு இல்லாத சில பாடசாலைகளில் 6ம் வகுப்பு நடத்துவதற்கு அனுமதி வழங்கிவருகிறது.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி பாரதிபாஷா பாடசாலையில் 6ம் வகுப்புநடத்துவதற்கான அனுமதி கிடைத்துள்ளது. இத்திட்டத்தின்படி இப்பாடசாலையில் பல மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## குழந்தைகள் போஷாக்கு நிலையம்

[யாழ்ப்பாணம்]

குழந்தைகள் பாதுகாப்பு நிதிய யாழ். கிளைஒருங்கிணைந்த நிவாரண சேவையின் கீழ் குழந்தைகள் போஷாக்கு நிலையமொன்றை சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது.

ஊட்டச்சத்து குறைவான பிள்ளைகளுக்கு சத்துள்ள உணவுகளை வழங்குதல், நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நிலையத்தின் தலைவராக செல்வி. நிர்மலா பாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

## "ஆயிரம் மீற்றர் வலயம் அனைத்துயிர்க்கும் அச்சுறுத்தல்"

[யாழ்ப்பாணம்]

"இனவாத சக்திகளின் அடக்குமுறையின் புதியவடிவமே ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயப் பிரகடனமாகும். இது இப்பகுதியில் வாழும் சகல மக்களின் உயிர் வாழ்வுக்கும் பயமுறுத்துதலாக அமைந்துள்ளது."

இவ்வாறு கிராமியத் தொழிலாளர். சங்கம் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சகல அடக்குமுறைச் சட்டங்களையும் உடைத்தெறிவோம்." என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "இராணுவத்தீர்வு மூலம் எமது மக்களின் உரிமைகளைப் பூரணமாக நசுக்கிவிட முடியாது என உணர்ந்த இனவாதிகள், தமிழ்மக்களை மிதவாதத் தமிழர்கள், தீவிரவாதத் தமிழர்கள், முஸ்லிம் தமிழர்கள், கிழக்கிலங்கைத் தமிழர்கள், வன்னித் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் என பிரித்தாளுவதற்கு முயல்கின்றனர்."

இவர்கள் எம்மீது திணிக்கும் அடக்கு முறைச் சட்டங்களை நிரந்தரமாக்குவதற்கும் அவற்றை அமுல்படுத்துவதற்கும் எமக்கிடையே இருக்கும் பிளவுகளை பயன்படுத்துகிறார்கள்.

வன்னி, மட்டுநகர், திருமலை, முல்லைத்தீவு, மன்னார் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்களை அகதிகளாக்கி நிலங்களை அபகரித்து சொத்துக்களை கொள்ளையிட்டுத் தீவைக்கின்றனர். மக்களைக் கைதுசெய்து சித்திரவதை செய்து கொலை செய்யப்படுவது தினமும் நடைபெறுகிறது. இந்நிலை தொடருமானால் நாம் இறுதியில் ஆதரவற்றவர்களாவோம்.

எனவே நாம் நாளுக்குநாள் அல்லல்பட்டு அழிந்துபோகாமல் ஐக்கியப்பட்டு அடக்குமுறைச் சட்டங்களை தகர்ப்போம்." [ஐ]

## சனசமூகநிலைய புதியநிர்வாகிகள்

[வண்ணார்பண்ணை]

தெல்லிப்பழைஉதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பன்னாலை கணேச சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் நிலையத்தலைவர் திரு. ச. சுப்பிரமணியசுவாமி தலைமையில் நடைபெற்றது. பின் வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரியப்பட்டனர்.

தலைவர் ச. சுப்பிரமணியசுவாமி, உபதலைவர் வே. விஜயரத்தினம், பொதுச் செயலாளர் செ. வசீகரன், உபசெயலாளர் வ. கலாதிகேயன், பொருளாளர் க. விக்னேஸ்வரர், சமூகசேவைச் செயலர் வி. அம்பலவாணர், விளையாட்டுச் செயலர் சீ.ரவிச்சந்திரன், கல்வி கலாசாரம் க. நடராஜா, சுகாதாரம் செல்வன் ந. பகீரதன், நூலகம் செல்வன் தி. அகிலகுமார், கணக்காய்வாளர் சு. மாணிக்கம்.

திருவாளர்கள் க. தில்லைநாதன், அ. செல்வரட்ணம், வை. காசிலிங்கம், எஸ். சிவநாதன், க. காங்கேயன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரியப்பட்டனர்.

## பத்திரிகையாளர் தலை தப்பியது

[லண்டன்]

அமெரிக்க விண்வெளிக் கலமான "சலஞ்சரில்" பயணம் செய்வதற்கு 5500 பத்திரிகையாளர்களும் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் பலர் பிரபல பத்திரிகையாளர்கள். மற்றையோர்; பத்திரிகை எழுத்தாளர்கள், பத்திரிகைப்படப்பிடிப்பாளர்கள், கார்டூனிஸ்ட், கட்டுரையாளர். இவர்களில் ஒரு சிலர், நாஸாவில் பயிற்ச்சி அளிக்ககப்பட்டு விலக்கப்பட்டனர். (கெ)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலன் அற்றோர் சங்கமும், யாழ். ரோட்டரிக் கழகமும் இணைந்து கடந்த வியாழனன்று நடத்தவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு அடுத்தமாதம் 27-ம் திகதி வியாழனன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய நிர்வாகிகள்

[சுண்டுக்குளி]

கந்தரோடை ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தினரின் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. நிர்வாகிகள்:- தலைவர்: செ. வைத்தீஸ்வரன், உப தலைவர்: ப. ஞானனந்தன், செயலாளர்: க. நாகேஸ்வரன் உப செயலாளர்; கெ. மதிவாணன், பொருளாளர்: சி. மனோகரதாஸ், பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் க.சிவகுமார் கணக்குப் பரிசோதகர்: பொ. லோககசுந்தரம், பத்துப் பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## 'மேலதிக ரயில் கட்டணத்தை நீக்குக'

(மாவிட்டபுரம்)

"வடமாகாண ரயில்வே பயணிகளுக்கு மட்டும் கட்டண உயர்வு கொண்டு வரப்பட்டது நல்லதல்ல. ஆகவே ரயில்வே திணைக்களம் ஆராய்ந்து மேலதிகமாக அறவிடும் கட்டணத்தை நீக்க வழி செய்ய வேண்டும்" என்று வடபிராந்திய பயணிகள் நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. எஸ். குமாரசாமி ரயில்வே பகுதி பொது முகாமையாளருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளார்.

"வடபகுதி ரயில் பயணிகளுக்கு மட்டும் கட்டண உயர்வை அரசாங்கம் அமுல் செய்துள்ளது. அதுவும் அந்த ரயிலில் வேலை செய்பவர்களுக்கு விசேஷ அலவன்ஸ் வழங்குவதற்காகவே இக் கட்டண உயர்வை அரசு கொண்டுவந்துள்ளது பொது மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய ஒருஸ்தாபனமான ரயில்வே பகுதி இப்படி ஓர் வஞ்சகமாக நடப்பது இப் பகுதி மக்களை புண்படுத்தும் செயலாகும். ஆகவே ரயில்வே பகுதி இதை ஆராய்ந்து கட்டணத்தை குறைத்து அப் பகுதி மக்களுக்கு உதவ வேண்டியது அவசியமாகும்." என்று மேலும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வயதுவந்தவர்களின்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

யைப் பார்ப்போம் என்று கூறினார். அவரை உள்ளே அழைத்துச் சென்று சாக்கிலிருந்த மிளகாயைக் காட்டினோம். அச்சமயம் வெளியில் நின்ற வயோதிபர் கடை லாச்சிக்குள் கையைவிட்டு பணத்தை எடுத்துச் சென்றுவிட்டார்.

ஆஸ்பத்திரிவீதியிலுள்ள மற்றொரு வர்த்தக நிலையத்திலும், சில வாரங்களுக்கு முன்னர் இதே பாணியில் சுமார் 9,000 ரூபா கடை லாச்சியிலிருந்து மறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. [க]


## பிரயாண ஒழுங்குகள்

டோஹா, கட்டார்- பொது உதவியாளர், சாரதிகள் பதவிகளுக்கு குறுகியகாலவெல்லைக்குள் பிரயாண ஒழுங்குகள்.

தொடர்பு:- மல்ரி சேவிசஸ்,
37 (351), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் தியேட்டர் சந்திக்கருகாமை)
C-497

## அறிவித்தல்

வண்ணார்பண்ணை, காங்கேசன்துறைவீதி, கில்னர் கட்டிடத்தில் இயங்கிவரும் "உதவும் கரங்கள் செஷயர் இல்லம்" என்னும் வலதுகுறைந்தோர் புனர்வாழ்வு நிலையத்தில் புதிய விடுதியாளர்களுக்கு இடமுண்டு. விண்ணப்பங்கள் காரியதரிசியால் 28-02-1986 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விலாசம்:- கே. எஸ். வேல்முருகு,
பலாலிவீதி, திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
A-154

## மெதடிஸ்த திருச்சபை பெண்கள் விடுதி

பாடசாலை மாணவிகளுக்கும் வைத்தியக் கல்லூரி மாணவிகளுக்கும் ஏற்றதாக யாழ். பெரியாஸ்பத்திரிக்கு முன்பாக சகல வசதிகளுடனும் விடுதிவசதி உண்டு.

தொடர்பு:- முகாமையாளர்,
வேம்பஸ்தான் பெண்கள் விடுதி,
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C. L. S. புத்தகசாலைக்கு அருகில்) C-498

## சுண்டுக்குளியில் L. P. GAS

வீடுகளில் டெலிவரி செய்யப்படும்.

Dyn Ads.
MARKETING
476, பிரதான வீதி,
சுண்டுக்குளி
(சென். ஜோன்ஸ் முன்பாக) A-182


## 31-ம் நாள் நினைவஞ்சலி



இராமலிங்கம் சபாரத்தினம்

மலர்வு: 01-07-1920
உதிர்வு: 05-01-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அன்புடன் எம்மை ஆதரித்த எம் குலவிளக்கே! எம்மை எல்லாம் ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர்கள்? சொக்கா தாத்தா எங்கே என்று உங்கள் பேரப்பிள்ளைகள் ஏங்குகின்றனரே. அன்புத் தெய்வமே உங்கள் நினைவு என்றும் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்,
மைத்துனிகள் மற்றும்
உற்றார், உறவினர்.

அரசடிலேன்,
திருநெல்வேலி.
C-502

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

### Certificate Course in Data Processing and Basic Programming Aptitude Test

One Hundred and Twenty students whose Index Numbers are given below have been provisionally selected and called for interview. The letters have been despatched.

| CPAD/1 | CPAD/11 | CPAD/21 | CPAD/33 | CPAD/55 | CPAD/59 |
|---|---|---|---|---|---|
| 60 | 64 | 68 | 72 | 76 | 77 |
| 80 | 88 | 92 | 93 | 109 | 114 |
| 141 | 145 | 150 | 152 | 153 | 158 |
| 162 | 173 | 174 | 188 | 195 | 204 |
| 206 | 209 | 210 | 213 | 214 | 218 |
| 220 | 224 | 233 | 245 | 253 | 256 |
| 257 | 263 | 264 | 266 | 268 | 270 |
| 274 | 279 | 293 | 296 | 299 | 303 |
| 307 | 308 | 313 | 323 | 327 | 332 |
| 335 | 339 | 354 | 355 | 361 | 367 |
| 369 | 391 | 398 | 401 | 404 | 406 |
| 415 | 419 | 425 | 428 | 430 | 431 |
| 443 | 449 | 456 | 457 | 460 | 461 |
| 471 | 476 | 485 | 487 | 492 | 493 |
| 496 | 497 | 502 | 510 | 514 | 516 |
| 523 | 526 | 530 | 546 | 549 | 551 |
| 553 | 560 | 576 | 578 | 580 | 583 |
| 584 | 588 | 592 | 593 | 598 | 601 |
| 602 | 605 | 609 | 612 | [illegible] | [illegible] |

(A 183)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR


## கிளிநொச்சி - முல்லைத்தீவு---

[1ம் பக்கத் தொடர்ச்சி]
களுக்குமிடையே இடம்பெற்ற பலத்த நேரடி மோதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் முன்னேற முடியாமல் திரும்பி விட்டதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நேரடி மோதல் இடம்பெற்ற பகுதிகளை நோக்கி, விமானங்களிலிருந்து குண்டு மாரி பொழிந்ததாகவும் இத்தாக்குதலில் 15க்குமேற்பட்ட பொதுமக்கள் பலியானதாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை கிளிநொச்சி சந்தைப்பகுதிக்குத் திடீரென வாகனங்களில் சென்ற இராணுவத்தினர், தங்கள் பாதுகாப்பு நடவடிக்கைக்காக, சந்தையில் கூடிநின்ற மக்களில் பலரை வாகனங்களில் ஏற்றிச் சென்றதாகவும் ஒரு தகவல் தெரிவிக்கிறது. [மா]

## ஹெலிகொப்டரில் இருந்து சூடு: இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

"சைக்கிளில், வீதியால்வந்து கொண்டிருந்தபோது ஹெலிக்கொப்டரிலிருந்து சுட்டதால், வயிற்றிலும், காலிலும் காயம் ஏற்பட்டது,'

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த வி. ரமேஸ்குமார் [19 வயது] மேற்கண்டவாறு கூறினர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த செல்வபுரத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இச்சம்பவம் நடந்ததாகவும் கூறினர்.

இச்சம்பவத்தில் கே. யோகசுந்தரம், சந்திரக்குட்டி, ரூபாட் ஆகியோரும் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## நகைக் கடையில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உள்ள லலிதா நகை மாளிகையில் நேற்று மாலை பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், ரொக்கப் பணமும் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், முல்லைத்திவுக்கான போக்குவரத்துச்சேவை கடந்த 3 தினங்களாகப் புதுக்குடியிருப்பு வரையே நடைபெற்றுவருகின்றது.

## அரசின்...

[1ம் பக்கத் தொடர்ச்சி)
குதல் நடத்தியதாகவும் அவர்களில் 29 பேர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது, [ச]

## மரண அறிவித்தல்

### நாகநாதர் முருகேசு

நல்லூர் நாகநாதர் முருகேசு காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக்கணவரும், தில்லைநாயகி, தயாபரன், சிவலிங்கம், சிவானந்தம், நித்தியலட்சுமி, கலைமகள், பரமகுருநாதன், நடேசன், சத்தியபாமா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். ஈமக்கிரியைகள் 2-02-86 ஞாயிறு பிற்பகல் 3 மணியளவில் இல. 12/4, வைமன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

(A 185)

### மருதப்பு கனகசபை (ஐயா)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், யாழ். கொட்டடியில் வசிப்பவருமான மருதப்பு கனகசபை [ஐயா] (அகிலன் கபே உரிமையாளர், 46, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்) 1-02-86ல் காலமாகிவிட்டார். இவர் நாகபூசணியின் அன்புக்கணவரும், கமலாதேவி, ஈஸ்வரபாதம் (சிவம்), யோகநாதன் (சிறி), நவநாதன் ஆகியோரின் அன்புத் தகப்பனுரும், மாணிக்கவாசகர். இரத்தினும்பிகை, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமனுருமாவர். அன்னுரின் ஈமக்கிரியைகள் 8/1, சீனிவாசகம் வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து 2-02-86 ஞாயிறு பி. ப. 4 மணியளவில் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(C 521)

### சாமுவேல் சின்னத்துரை செல்வரத்தினம்

திரு. சாமுவேல் சின்னத்துரை செல்வரத்தினம், இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர், கர்த்தருக்குள் மறுமைப் பிரவேசம் எய்தியுள்ளார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி A. P. சின்னத்துரை அவர்களின் மூத்த புதல்வனும், புஷ்பராணியின் அன்புக்கணவரும், செல்வன் செல்வரஞ்சன், செல்வி நளாயினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற திரு. திருமதி S. T. சிவரத்தினத்தின் மருமகனுமாவார்.

அன்னுரின் நல்லடக்க ஆராதனை (2-02-1986) ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு அன்னுரின் இல்லத்தில் நடைபெறும். மனைவி புஷ்பராணி செல்வரத்தினம், தபால்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(C

## புதுடில்லியில் பாப்பரசர்

(சென்னை)

இந்தியாவில் பத்துநாள் சுற்றுப்பயணமாக பரிசுத்த பாப்பரசர் நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தார். ஜனுதிபதி ஜெயில்சிங், பிரதமர் ராஜீவ் காந்தி, கத்தோலிக்க குருமார்கள் உட்பட பலர் அவரை விமானநிலையத்தில் வரவேற்றனர்.

விமானத்திலிருந்து இறங்கியவுடன் இந்திய மண்ணை முத்தமிட்டு வணங்கிய பாப்பரசர் இந்திய மக்களுக்கு தெரிவித்த வாழ்த்துச் செய்தியில் ஒற்றுமை சமாதானம் சமத்துவம் ஆகியவற்றின் காரணமாகத்தான் இந்தியா வந்திருப்பதாக கூறினுர். அவர் ராஜ்காட்டிலுள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மலர்வளையம் வைத்தும் அஞ்சலியும் செலுத்தினுர். (ச)

## இசைநடன ஆசிரியர்களின் நியமனக் கடிதங்கள்

(எம். ரி. சந்திரகுமார்)

அண்மையில் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டு ஆசிரியர் சேவை முன்பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய இசை, நடன ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இத்தகவலை கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா நேற்று 'ஈழநாடு' வுக்கு தெரிவித்தார்.

நியமனக்கடிதங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் குறிப்பிட்ட மாவட்ட கல்விப் பணிப்பாளர் காரியாலயத்திற்கு சென்று கடமையை பொறுப்பேற்கும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

கடிதங்கள் தாமதமாக கிடைத்தாலும் கூட அவர்கள் கடமையை பொறுப்பேற்பதற்குரிய சகல ஒழுங்குகளையும் கல்விச்சேவை ஆணைக்குழு செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். [ச]

## மில்க்வைற்...

[13ம் பக்கத் தொடர்ச்சி]
மர்ந்து என் கைகளைத் தொட்டுப்பாருங்கள் என்றுர். பெண்களின் கைகள் மலர்போல மெதுவாக இருக்கவேண்டிய இடத்தில் அவருடைய கைகள் மரத்துக்கடினமாக இருந்தன. ''ஐயா என் கைகள் சவர்க்காரம் உருட்டிய கைகள்'' என்றுர்.

மீனுட்சிப்பிள்ளைக்கு எதுவித குறைவுமின்றி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரியார் என்றித்திறத்தார் எல்லோரும் பார்த்துவந்தார்கள். அவருக்குப் பூட்டப்பிள்ளைகளும் கைத்தொண்டு செய்து மழலைபேசியுள்ளார்கள்,

மீனுட்சிப்பிள்ளையின் இறுதிக்கட்டம் 1985 டிசம்பர் முப்பத்தொராம் திகதி அறிகுறிகள் காட்டிற்று. அடுத்தநாள் 1986 ஜனவரி மாதம் முதலாம் நாள் நண்பகல் 12 மணிக்கு காமாட்சி அம்பாள் மணி ஓசையுடன் தமது இறுதி மூச்சைவிட்டு, நெடுந்துயில் புரியலானுர். அவர் ஆன்மா சாந்திபெறப் பிரார்த்திப்போம்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 23389,

## வட்டக்கச்சி மோதல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த 30ம்திகதி இரவு ஆறு கவசவாகனங்களில் 200க்கு மேற்பட்ட இராணுவத்தினர் வட்டக்கச்சி தருமபுரம் வீதியில் வயல்வெளிப் பக்கமாக நடந்து சென்றதாகவும் அங்குள்ள ஐந்துலாம் படிச் சந்தியில் ஒரு கவசவாகனம் புதைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. இதனுல் அவ்விடத்தில் இராணுவத்தினர் தரித்து நிற்கவேண்டியேற்பட்டதாம்.

31ம் திகதி காலை அச்சந்தியை நோக்கி மோட்டர் ஷெல், ரொக்கற் லோஞ்சர், துப்பாக்கிகள் சகிதம்சென்ற போராளிகள் இராவத்தினரை எதிர்த்து தாக்குதல் நடாத்திய பொழுது இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே பலத்த நேரடியுத்தம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலமணி நேரத்தின் பின்னர் இருவிமானங்கள் வட்டக்கச்சி, விசுவமடு, தருமபுரம் ஆகிய பகுதிகளில் குண்டுகளை வீசித்தாக்கத் தொடங்கின.,

இக்குண்டு தாக்குதலால் தருமபுரத்திலுள்ள ஒருபாடசாலையும்வீடொன்றும் பலத்த சேதமடைந்தன. [மா]

## இனந்தெரியாத சடலம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகிலுள்ள வயல் ஒன்றில் சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம்ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நேற்று மாலைவரை இச்சடலம் அடையாளம் காணப்படவில்லை. (ச)

## நன்கொடை

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி சைவ அனுதைகள் இல்லத்துக்கு சங்கரத்தையைச் சேர்ந்த அமரர் திருமதி லீலாவதி சிதம்பரநாதனின் 31ம் நாள் நினைவாக அவரது கணவர் 1000 ரூபாவையும், அமரர் திருமதி சின்னுசிப்பிள்ளை வன்னியசிங்கத்தின் 31-ம்நாள் நினைவாக 750ரூபாவை அவரது உறவினரான திரு. ந. சிவஞானமும் இல்லத்தலைவர் சட்டத்தரணி திரு. கனகநாயகத்திடம் அன்பளிப்பு செய்துள்ளனர். [ச]

## கூட்டம்

[யாழ்ப்பாணம்]

ஓத்திவைக்கப்பட்ட அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும்.

## இன்று

[யாழ்ப்பாணம்]

கிராமியக்கலைக் குழுவினரின் கவிதா நிகழ்வாகிய 'நாங்கள் இணைகிறேம்' நிகழ்ச்சியும் இன்றைய சூழ் நிலையை விளக்கும் 'சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்' என்னும் நாடகமும் இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## பாராட்டுத் தந்தி

[யாழ்ப்பாணம்]

பாராளுமன்றத்தில் நாடற்ற மலையகத் தமிழ் மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவது பற்றிய சட்ட மூலம் மீதான விவாதத்தில் ஆணித்தரமாக, உண்மையான ஆதாரங்களை எடுத்துக் கூறிய கலவானைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சரத்முத்தெட்டுவேகமவைப் பாராட்டி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆசிரியர் கழகம் தந்தியொன் அனுப்பியுள்ளது. [ச]

## லொறியில் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து பால்மா உணவுகளை ஏற்றிவந்த லொறியொன்று இயக்கச்சிக்கும் கரந்தைக் குளத்திற்கு மிடையில் வைத்து நேற்று உமணியளவில் இனந்தெரியாத நபர்களினுல் கொள்ளையிடப்பட்டுள்ளது.

வெள்ளை வானென்றில் வந்த ஆயுதம் தாங்கிய நான்குபேரைக் கொண்ட கோஷ்டியினரே லொறியை மறித்து இக்கொள்ளையை நடாத்தினராம்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த இ. துரைசிங்கம் என்பவரது பொருட்களே கொள்ளையிடப்பட்டுள்ளது. இக்கொள்ளையின் பெறுமதி 3000 ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## இளைஞரின் சடலம்

(யாழ்ப்பாணம்)

வவனியா மூன்றுமுறிப்பு வீதியில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இளைஞரின் சடலம் ஒன்று நேற்றுக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர் இலுப்பைக்குளத்தைச் சேர்ந்த கோபாலசாமி சிவபாலன் (22வயது) என்ற இளைஞரென அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் நேற்றுமுன்தினம் (31ம் திகதி) இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டவர். (மா)

## பிரார்த்தனை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)
பேசும் மக்கள் ஒருமித்து அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 12-ம் திகதி முழுநாளும் நடைபெறவுள்ள தமிழ்பேசும் மக்களின் ஒருமித்த பிரார்த்தனையால் யாழ். மாவட்டம் பூராவும் ஸ்தம்பிதம் அடைந்து அரசாங்கத்துக்கும் வெளிஉலகுக்கும் அக்கோரிக்கையின் முக்கியத்துவத்தையும், தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையையும் எடுத்துக்காட்டும் என்றும் அவ்வேண்டுகோளில் வலியுறுத்தப்பட்டுள்ளது,

யாழ். மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் சார்பில், பிரார்த்தனையை செயல்படுத்துவதற்கென நேற்று நடைபெற்ற கூட்டத்தில் நடவடிக்கைக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. [மா]

## யாழ். குடா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். மக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட குழுவொன்றைத் தமதுஅமைச்சில் நேற்று சந்தித்தபோதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இச்சந்திப்பில் வங்கிவேலைகள், தபால்தொலைத்தொடர்பு கல்வி, சுகாதாரம் போன்றவை சம்பந்தமாக விவாதிக்கப்பட்டன.

இவற்றையிட்டுத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்த அமைச்சர், யாழ்ப்பாண மக்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் ஒத்துழைப்பை நல்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

யாழ். பிரதிநிதிகள் குழுவினர் அங்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 1000 மீற்றர் பாதுகாப்புவலயத்தை நீக்கவேண்டும். என்பதனையே வலியுறுத்தவிருந்தனர்.

சுமார் 2 மணி நேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் யாழ். மக்களின் சார்பில் யாழ். அரச அதிபர் எம். பஞ்சலிங்கம், வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. சியாம்பிள்ளை, டாக்டர் நச்சினுர்க்கினியன் உட்பட 20 பேர் கலந்துகொண்டனர்.

அரசாங்கத்தரப்பில் அமைச்சின் செயலாளரும், ஆயுதப்படைகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர் [செ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org